சக்தி ராஜ்ஜயம்
இந்திரா சௌந்தர்ராஜன்

மின்நூல் உருவாக்கம்
சுபாஷ் சண்முகா

சக்தி ராஜ்ஜியம்

1

‘ஒன்றாயரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் - எந்தன்
நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற ஆவிப்பொருளறிவார்
அன்றாலிலையில் துயின்றபெம்மானும் என் ஐயனுமே!

‘இந்தப் பூவுலகின் பெரிய கேள்வி எது?’ என்கிற கேள்வியை இந்த உலகின் எந்த பாகத்திற்கும் சென்று எவரிடத்திலே கேட்டாலும் சரி... அதற்கு அவர்கள் கூறும் பதில் அநேகமாக ‘கடவுள் இருக்கிறாரா... இல்லையா?’ என்பதாகத்தான் இருக்கும்.

இங்கே ஒன்று இரண்டாயிருப்பதே இயற்கையாகவும் உள்ளது. உதாரணமாக, நாம் இருக்கிறோம் - ஒரே உருவில் பார்ப்பதற்கு தென்பட்டாலும் உடல், உள்ளம் என்று இருவிதமாக உள்ளோம். உடலைப் பார்த்து அறியலாம். உள்ளத்தை அவர்கள் பேசக் கேட்டே அறிய முடியும். இந்தக் காலம்கூட பகல் இரவு என்று இருகூறாக பிரிந்தே இயங்குகிறது உயிரினங்கள் கூட ஆண், பெண் என்று இரண்டாக இருப்பதாலேயே இனப்பெருக்கம் ஏற்பட முடிகிறது.

இப்படி ஒன்றாயிருப்பது இரண்டாகவும் அமைந்திருப்பது விந்தையா... இல்லை, அதுதான் அதன் இயல்பா என்கிற கேள்வி எல்லாமும் இங்கே எழுகிறது. இயல்போ விந்தையோ... இரண்டாக இருந்தாலே விளங்கிக் கொள்ள முடிகிறது என்பதே நிதர்சனமான ஒரு உண்மையாக உள்ளது.

கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்கிற உலகின் மிகப்பெரிய கேள்விக்கான விடையும் ‘இருக்கிறது’ என்றும் ‘இல்லை’ என்றும் இருவிதமாகவே உள்ளது.

‘நம்புகின்றவர்களுக்கு அது இருக்கிறது. நம்ப முடியாதவர்களுக்கு அது இல்லை’ என்று அந்தக் கேள்விகளுக்கு சிலர் பொழிப்புரையும் பகர்கின்றனர். அந்த பொழிப்புரையே ஒரு புதிய கிளைக் கேள்விக்கும் நம்மை அழைத்துச் செல்கிறது.

'இருப்பதைத்தானே ஒருவர் நம்ப முடியும். இல்லாத ஒன்றை எப்படி நம்ப முடியும்?'

இதற்கான பதில்களோ பலவிதமாக உள்ளன. இருப்பது என்றால் என்ன? நம் பார்வைக்கு தெரிகின்ற ஒன்றா? தெரிந்தால் மட்டுமே அதை ஏற்பேன்; தெரியாததை ஏற்க இயலாது என்று ஒரு பதில்.

'நமது உடம்புக்குள்ளேயே அநேக உள் ளுறுப்புகள் உள்ளன. அவற்றை நேராக நாம் காண முடிவதில்லை. நாம் காண முடியாத காரணத்தாலே அவை இல்லை என்றாகிவிடுமா?' என்று ஒரு பதில்.

இதைத் தொடர்ந்து, 'இல்லையில்லை... உள் ளுறுப்புகளை நாம் காணமுடியாவிட்டாலும் அதன் இயக்கத்தை உணர முடிகிறோம்தானே! எனவே, உணர்வதை வைத்து அது இருப்பதை நம்புவதுதான் சரியான அணுகுமுறை' என்று அதற்கு ஒரு பதில்.

கூட்டிக் கழித்தால், புலப்படுவதை வைத்து மட்டுமல்ல... உணரப்படுவதையும் வைத்து தாராளமாக நம்பலாம் என்று ஒரு பதில் நமக்கு கிடைக்கிறது.

பார்த்தீர்களா? கடவுள் இருக்கிறாரா, இல் லையா என்கிற ஒரு கேள்வி இப்படி பல கிளைக் கேள்விகளில் நம்மை மூழ்கடிக்கிறது. இன்னமும் கூட கேள்விகள் இருக்கின்றன. கேள்விகள்... கேள்விகள்... பஞ்சமே இல்லாத கேள்விகள்!

இந்த உலகம் எத்தனையோ அறிஞர்களையும், ஞானிகளையும் பார்த்துவிட்டது. அவர்களும் இந்தக் கேள்விக்கு தாங்கள் அறிந்த விடையை தாங்கள் அறிந்த விதத்தில் கூறித்தான் சென்றிருக் கின்றனர். இதில் பகவான் ரமணரின் கருத்து மட்டும் சற்று எளிமையாக சட்டென்று புரியும் விதத்தில் உள்ளது.

'ஒரு நாற்காலி உள்ளது என்றால் அதை செய்த ஒரு தச்சன் இருக்க வேண்டும்தானே?' என்று கேட்கிறார்... அப்படியே உலகுக்கு வருபவர், 'இந்த பூமியும் இருக்கிறது என்றால் இதைப் படைத்த ஒரு சிருஷ்டிகர்த்தாவும் இருந்துதானே தீர வேண்டும்' என்று முடிக்கிறார். அந்த

சிருஷ்டிகர்த்தா யார்? அவரை எவ்விதம் அறிவது? இது அடுத்த கேள்வி.

அவர்தான் கடவுள்!

அவரை உருவமற்ற மகாசக்தியாக ஒரு மதம் பார்க்கிறது. அவர் அனுப்பியது தூதர் என்று ஒருவரைக் காட்டுகிறது. இன்னொரு மதம். 'வெளியே எதுவுமில்லை... எல்லாம் மனோ விகாரங்கள் - அதை அடக்கு. ஒன்றுமில்லாமலாக்கு நீயே கடவுள்' என்று கூறுகிறது வேறொரு மதம். சனாதனமான, மிகப்பெரிய நீண்ட நெடிய வரலாறு கொண்ட இந்து சமயமோ, ஒரு கடவுளர் கூட்டத்தையே கண்முன் நிறுத்துகிறது.

'ஒரு கடவுளை நம்புவதே மாபெரும் குழப்பமாக உள்ள நிலையில், இப்படி ஒரு சமுதாயக் குடும்பம் போல ஒரு கூட்டத்தையே காட்டினால் எப்படி?' என நடுநிலையாளர்களும் ஒரு கேள்வியில் விழுகிறார்கள்.

இவர்கள் பாரபட்சமில்லாமல் உள்ளத்தூய்மை, உடற்தூய்மை மற்றும் புத்தியொளியோடு நமது சமயம் காட்டும் கடவுளர்களை அறியப் புகுந் தாலோ ஆரம்பமாகிவிடுகிறது அற்புத மாற்றம். இந்த சக்தி ராஜ்ஜியமும் அப்படி ஒரு அற்புத மாற்றத்தை, வாசிப்பவர்களுக்கு அளிக்கத்தான் போகிறது.

நாம் இப்பொழுது சக்தி ராஜ்ஜியத்துக்குள் புகுவோம். அதன் சர்வாம்சங்களிலும் பறந்து திரி வோம். அந்த ராஜ்ஜியத்தை நிர்வகிக்கும் தலைவலியான பராசக்தியையும் புரிவோம்.

அவள்தான் நான் சிந்தித்து எழுதவும் அதை வந்தித்து நீங்கள் வாசிக்கவும் காரணம்! அவளாலேயே இந்த அண்டமானது ஆகாய வெளியில் பந்து போல மிதக்கிறது. மிதப்போடு சுழலவும் செய்கிறது. ஒரு கணக்கோடு மையத்தில் இருந்து விலகி சற்றே சாய்ந்து சுழல்கிறது. இதன் காரணமாக ஒரு விசை உருவாகி காற்று வீசுகிறது. மழை பொழிகிறது. இரவு பகல் உருவாகிறது. காலை, மதியம், மாலை என்று அதிலும் பிரிவுகள் தோன்றுகின்றன.

நமது சமுதாயத்தை பின்பற்றுவோர்க்கு அவள் பராசக்தி. மற்றையோர்க்கு அவள் ஆதிசக்தி. இந்த

பராசக்தி சமயத்தையே 'சாக்தம்' என்கிறது நமது சமுதாயம்.

ஆதிசிவன் பற்றி சொல்வது சைவம். அனந்த நாராயணன் பற்றி சொல்வது வைணவம். கண பதியை புரியவைப்பது காணாபத்யம். முருகன் வழி எது என்பது கௌமாரம். மேற்கண்ட வழிகளை விடுத்து, கண்ணுக்கு புலனாகும் சூரியனைக் கடவுளாய்க் கருதி வழிபடுவது சௌரம்!

இந்த ஆறு மார்க்கங்களே நமது ஆறாவது அறிவுக்கு அறுதியானவை; உறுதியானவையும்கூட.

ஒரு துளியாய் இருந்த நாம் தாய் தந்தை இருவர் கலப்பால் கருப்பைக்குள் பஞ்சபூதக் கலவை என்னும் ஐந்து அம்சங்களால் உயிர்ப் பிண்டமாகி, ஒரு நாள் கர்ப்பவெளி கடந்து இந்த பிரபஞ்ச வெளியில் விழுந்து, மானுட உயிர் என்றாகி, பின் மெல்லக் கண் விழித்து, பார்த்தும் கேட்டும் அறிய முடிந்த ஆறாம் அறிவால் மற்ற உயிரினங்கள் சகலத்தினின்றும் மாறுபட்டு, மனம் படைத்த மனிதர்களாகி, அதுவே மருவி மனிதர்களாகியுள்ளோம்.

மனம் என்று ஒன்று வந்தாலே காலம் என்று ஒன்று வரமுடியும். மனமில்லாத விலங்குகள் மற்றும் செடி, கொடிகளுக்கு தான் யார் என்னும் கேள்வி இல்லை. நேற்று, இன்று, நாளை என்னும் கால கதி இல்லை. அவை எல்லாம் உணர்வால் மட்டுமே இயங்குபவை. அந்த இயக்க கதிக்கு பின்னாலும் பராசக்தியே உள்ளாள். அவற்றுக்கு நடுவே அவற்றை மாத்திரமல்ல... நம்மை நாமே அறியவும்தான் ஆறாவது அறிவு துணை செய் கிறது. இதுவே ஏழாம் நிலையில் சப்தமாக... அதா வது, நாம் பேசும் பேச்சாக விளங்கி அனைத்தையும் எட்டி அறியப் பார்க்கிறது. அப்படி எட்டுவதே எட்டு. எட்டி விட்டாலோ ஒன்பதாகிய இறை நிலை நமக்கு வாய்த்து விடுகிறது.

துளியில் தொடங்கிய நமது ஒன்பதாம் நிலையே இறை நிலை. இதை எய்துவதற்கே ஆறு மார்க்கங்கள்!

அதிலும்கூட இன்றளவில் மூன்றே பெருவழி யாக உள்ளது. அதனுள் காணாபத்யமும் கௌமார

மும் சௌரமும் கிளை வழிகளாக சென்றடங்கி விட்டன. அந்த மூன்றிலும்கூட சைவமும் வைண வமுமே பல்லோர் செல்லும் வழியாக உள்ளது. இந்த இரண்டும் ஒடுங்கும் ஓரிடமாக சக்தி உறையும் பராசகதியின் சாக்தம் உள்ளது.

கல்லூரி ஒன்று தான். அதனுள் பாடப்பிரிவுகள் பல! அவரவர் திண்மைக்கேற்ப வாசிக்கலாம். முடிவில் அனைவரும் கற்றவர்கள் என்கிற பொதுவான பட்டத்தையே அடைகிறோம்.

அப்படித்தான் இங்கேயும்... சக்தி ராஜ்ஜியமும் ஒரு கல்லூரியாக திகழ்கிறது. இதனுள் மற்றவை பாடப் பிரிவுகளாக உள்ளன. எந்தப் பாடத்தின் வழியாகவும் சக்தி தரும் முக்தி என்னும் பட்டத்தை நாம் பெறலாம். அப்படியே அந்த ராஜ்ஜிய நாயகியை முற்றாக விளங்கிக் கொள்ளவும் முயற்சிக்கலாம்.

ஆதிசக்தியின் அம்சங்கள்கூட பஞ்சபூதங்கள் போல ஐந்தாகவே உள்ளன. முதல் அம்சம் துர்கா, அடுத்து லக்ஷ்மி, அதற்கும் அடுத்து சரஸ்வதி, நான்காவதில் சாவித்திரிதேவி அவள். ஐந்தாவதில் ராதா!

ஒன்றான மின்சாரம்தான் ஓட்ட கதியில் விளக்கிடம்எரிசக்தி ஆகிறது.எந்திரத்திடம்இயங்கு சக்தி ஆகிறது. மின் அடுப்பில் வெப்ப சக்தி. குளிர்சாதனப் பெட்டிக்குள் குளிர்சக்தி என்று விதவிதமாக பிரிந்து செயலாற்றுவதைப் போன்றே அந்த ஆதி சக்தியும் இந்த ஐவகை ரூபம் கொண்டு வெளிப்படுகிறாள்.

இதில், துர்கை என்றால் வெற்றியும் வீரமும் தருபவள் என்பது உள்ளடக்கம்.

லக்ஷ்மி என்றால் அழகு, செல்வம்! சரஸ்வதியோ அமைதி, ஞானம், தருபவள். சாவித்ரி மந்திர தந் திர யந்திரங்களை தந்து நாம் கடைத்தேற உதவு பவள். ராதாவோ 'பக்தி மட்டுமே போதும். நாம் அந்த இறையை தேடத் தேவையே இல்லை. இறையே நம்மைத் தேடி வரும்' என்று காட்டு பவள்.

இவர்களில் துர்கையை நாம் முதலில் புரிய முற்படுவோம்.

துர்மகன் எனும் அசுரனை அழித்த காரணத்தால் காரணப் பெயராகவே அந்த ஆதிபராசக்தி தன் முதல் அவதாரமாக துர்கை ஆனாள். இந்த துர்காவ தாரம் மிகமிக உக்கிரமானது. பரவசமூட்டுவது. சிலிர்ப்பில் நம்மை சிக்கவைத்து, அதனாலேயே நம்முள் கிடக்கும் அசுர குணங்களை எல்லாம் அழித்தொழிக்க வல்லது. பதினெட்டு புராணங் களில் ஒன்றான மார்க்கண்டேய புராணத்தில் துர்கா சப்தசதி எனும் 700 மந்திரங்கள் 700 பிரயோகங் களோடு மாதா துர்காவை நாம் விளங்கிக் கொள்ள துணைபுரிகின்றன.

வரமுனி என்று ஒரு பெரிய மகரிஷி. மூச்சடக்கியும் பேச்சடக்கியும் பன்னெடுங்காலம் தவம் செய்தவர். அதனால், அளப்பரிய வரங்களை யும் பெற்றவர்.

உலகிலேயே பெரியது, ஒருவன் தன் மனதை அடக்கி ஆளும் செயலே ஆகும். வரமுனி அதில் உச்சத்தில் இருந்தார். மனதை அடக்கியாண்ட அந்த மாமேதைகளுக்குள்ளும் ஒரு சமயம் கர்வம் நுழையப் பார்த்தது.

எத்தனை தான் அழுக்குப் போக குளித்து தூய்மையாக இருக்க முற்பட்டாலும், வியர்ப் பதை தடுக்க முடியுமா? அப்படித்தான் வரமுனிக் குள்ளும் தானே ஒரு மகாமுனி... தனக்கு மிஞ்சிய ஒரு முனிவர் இந்த உலகில் இல்லை என்கிற ஒரு எண்ணம் கர்வமாக துளிர்விடத் தொடங்கியது.

2

'ஸ்ரீதுர்கா த்ரி ஜகன்மாதா ஸ்ரீமத்கைலாஸ வாஸினீ ஹிமாசல குஹாகாந்த மாணிக்க மணிமண்டபா'

பொருள்: 'துர்க்கமன் எனும் கொடிய அசுரனை அழித்ததால் துர்க்கையானாய்! மூவுலகிற்கும் தாயாக விளங்குவதால் த்ரி ஜகன்மாதாவாகிறாய்! கைலாச மலையில் ஈஸ்வரனுடன் கலந்து வசிப்பவள் என்ப தால் கைலாச வாஹினியாகிறாய். இமயத் துக்குள் மாணிக்கக் கற்களாலான மணி

மண்டபத்தில் எழுந்தருளுவதாலே
மாணிக்கவல்லியாகவும் திகழ்கிறாய்!'

– துர்கா சகஸ்ரநாமம்

பெரும் தபஸ்வியான வரமுனிக்குள்ளும் கர்வம் நுழைந்ததுதான் பெரும் கொடுமை. பணிவுக்கு எல்லாவிதத்திலும் நேர் எதிரானது கர்வம். இது வந்துவிட்டாலோ ஒருவருக்கு தலை தெரியாது.

வரமுனிக்கும் தலைகால் தெரியவில்லை. உல கத்தையே என்னவோ அவர்தான் படைத்ததுபோல் பார்க்கத் தொடங்கிவிட்டார். ஓடும் நதி முதல் உதிக்கும் சூர்ய சந்திரர்கள் வரை எல்லோருமே அவருக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதுபோல அவரிடம் ஒரு பிரமை.

இங்கே, 'மனதை அடக்கியாளும் ஒரு தபஸ் விக்கு கூடவா கர்வம் ஏற்படும்?' என்கிற ஒரு கேள்வி எல்லோருக்குள்ளும் எழும்! ஏனென்றால் கர்வம் என்கிற உணர்வே ஒரு மாயைதான். நம்மை நாமே பெரிதாகக் கருதத் தொடங்கிவிட்டதன் எதிரொலி அது. எப்பொழுது அப்படி கர்வப்படத் தொடங்குகிறோமோ, அப்போதே நம் வளர்ச்சியும் நின்று போய்விடும்.

இதை இப்படி மாற்றியும் கூறலாம். ஒவ்வொரு வருக்கும் இவ்வளவுதான் என்று ஒரு அளவும், கணக்கும் இருக்கிறது. அந்த அளவு வந்தவுடன் அது மேலும் அதிகரிக்காமல் இருக்க, அதுவே கர்வமாய் மாறி செயல்படத் தொடங்கும். இத னால் வளர்ச்சி நின்றுபோவது மாத்திரமல்ல. அது வரையிலான வளர்ச்சிக்கும் அடுத்தடுத்த ஒரு போக்கு வேண்டுமே! அவையும் நிகழ ஆரம்பிக் கும்.

வரமுனியையும் இந்த அடிப்படையில்தான் கர்வம் கைப்பற்றியது. அது அவரது தபோ பலத்தையே தன் விருப்பத்துக்கு ஆட்டிவைக்கவும் செய்தது.

ஒரு நாள் அகத்திய மகரிஷி, வரமுனியின் ஆஸ்ரமத்துக்கு வரப்போவதாக தகவல் அனுப்பி னார். தகவல் கொண்டு வந்தவரும் சும்மா இல்லா மல், "ஸ்வாமி... அகத்தியர் ஒரு மாமுனி! மூவுலகங்

களுக்கும் நினைத்த மாத்திரத்தில் சென்று வர முடிந்தவர். அதிலும் அந்த கைலாஸநாதனின் பெரும் கருணைக்கு ஆட்பட்டவர். எனவே, அவர் நமது ஆஸ்ரமத்துக்கு வருவது என்பது பெரும் பேறு! தங்களை அவர் ஒரு பெரும் முனிவராக கருதுவதாலேயே இங்கே எழுந்தருள விரும்பி யுள்ளார்!" என்று சற்று வார்த்தை ஜாலத்துடன் கூறவும், வரமுனிக்கு தொடையைத் திருகியது போல கோபம் வரத் தொடங்கிவிட்டது.

"ம்... நிறுத்து! போதும் உனது அகத்தியப் பெருமை! நான் எந்த வகையில் அந்த முனிவருக்கு சளைத்தவன்? அவர் இங்கு வருவதால் எனக்கு ஆகப் போவதுதான் என்ன? வேண்டுமானால் அவருக்கு என்னால் ஏதாவது சகாயங்கள் தேவைப் படலாம்..." என்று ஆவேசமாக மறுபதில் கூறியவர், கூறியது போலவே அகத்தியர் ஆஸ்ரமத்துக்குள் தன் சிஷ்யர்களுடன் நுழைந்தபோது, கால்மேல் கால் போட்டுக் கொண்டு ஒரு எருமை படுத்த நிலையில் அசைபோடுவது போல படுத்துக்கிடந் தார். அகத்தியர் பெருமான் அருகில் வந்து, "வர முனி..." என்றழைத்ததும் திரும்பாமல், எங்கோ வெறித்துக் கொண்டிருந்தார்.

அகத்தியருக்கு அந்த நொடியே வரமுனிவரின் விதிப்பாதை எப்படிப்பட்டது என்பது விளங்கி விட்டது அந்த வேகத்தில் கோபமும் பீறிட்டது.

"வரமுனியே... மஹா தபஸ்வி என்றே உமது ஆஸ்ரமத்துக்கு வந்தோம். மஹாகர்வி என்பது இங்கே வந்து பார்த்த பிறகே புலனாகிறது. எதிரியே ஆனாலும் வந்தவரை வரவேற்பதே பண்பாகும். மகிஷம்தான் மந்தபுத்தி காரணமாக சூழலில் நடப்பதை உணராது படுத்துக்கிடக்கும். நீரும் அப்படியே கிடந்தமையால் அதேபோல ஒரு மகிஷமாவீர்!" என்று சபித்துவிட்டு வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிட்டார்.

வரமுனி என்னும் தபஸ்விக்கும் வந்தது வினை. அவரது கர்வம் அவரை ஒரு மகிஷமாக ஆக்கப் போகிறது. ஒரு சாமான்யனை அகத்தியர் இதுபோல சபித்திருந்தால் வயல்வெளிகளில் திரியும் சாதாரண ஒரு மகிஷமாக அவன் உட னேயே ஆகியிருப்பான். வரமுனியோ தபஸ்வி! தபோபலம் என்னும் அருள் மூட்டையை ஒருபுறம் சுமந்து கொண்டிருப்பவர்.

ஒருமனிதன் இறந்த பின்னும் அவனைத் தொடர்ந்து செல்வது அவன் செய்த பாவ, புண்ணியங்களே! ஒருவர் மோட்சகதியை அடையவேண்டுமென்றால் பாவம் செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. புண்ணியத்தையும் புறந்தள்ளத் தெரியவேண்டும். ஏனென்றால், அதுவும் தொடர்ந்து வந்து, தன் கணக்கை சந்தோஷங்களால் நேர் செய்ய முயலும். எனவே, வரமுனி வரையிலும் அகத்தியரின் சாபம், அவர் தவ பலம் என்னும் புண்ணியத்தோடு கலந்து ஒரு மகிஷமாக தயாராகி விட்டது. அதற்கேற்ற இன்னொரு மகிஷத்தின் கர்ப்பப் பையைத் தேடி அது பயணிக்கத் தொடங்கியது.

ஒரு உறை தனது உள்ளடக்கத்துக்கு ஏற்ற கத்தியையே தன்னுள் அனுமதிக்கும். துளி கூடினாலும் குறைந்தாலும் அந்த உறை பொருந்தாது. ஒரு குறிப்பிட்ட தாயின் கருப்பைக்குள் ஆன்மா சென்று சேர, அதன் பின்புலத்திலே இப்படி ஒரு பொருத்தமான கணக்கும் இருக்கிறது.

வரமுனி பெற்ற சாபம் எப்படிச் செயல்பட்டது? அவர் எப்படி ஒரு மகிஷமானார் என்று பார்க்கும் முன், ரம்பன், கரம்பன் என்கிற இரு அசுரர்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இதில், ரம்பன்தான் வரமுனி எடுக்கப்போகும் மகிஷ ஜென்மத்துக்கு துணை நிற்கப் போகும் தந்தை ஆவான். ரம்பனுக்கு இளையவன்தான் கரம்பன். இருவருமே இணைபிரியா சகோதரர்கள்.

அசுரர்களுக்கு எப்போதுமே தேவர்கள் என்றாலே ஆகாது. இருவருக்கும் பொதுவாக அமுதம் கடைந்து, அதைப் பங்கிட்டபோது, அசுரர்களை தேவருலகம் ஏமாற்றி, தான் மட்டுமே உண்டு சிரஞ்சீவியாகிவிட்டது என்பது ஒரு அழுத்தமான காரணம்.

எப்பொழுதும் உடல் பலத்தில் இருக்கும் நம்பிக்கை, உள்ள பலத்தில் அவர்களுக்கு இருந்ததில்லை. நேர்வழியை விட, குறுக்கு வழிகளில் செல்வதில் ஒரு ஆனந்தப் பரவசம், சத்ய தர்மத்தை விடவும் ஆங்காரம், ஆக்ரோஷத்தில் அதிக நம்பிக்கை!

அமுதம் உண்டால் மரணத்துக்கு மரணம் வந்து விடும். அதன்பின் மரணமேயில்லாத பெரு வாழ்வுக்கு அந்த ஆன்மா உரியதாகிவிடும். அப்படி ஒரு சக்தி ஒரு அசுரனுக்குக் கிடைத்தால் என்னாகும்?

குரங்கின் இயல்பு நமக்குத் தெரியும். மரத்துக்கு மரம் தாவுவதே அதன் இயல்பு. அப்படிப்பட்ட குரங்கை தேள் ஒன்று கடிக்கிறது. அது எப்படியெல்லாம் குதிக்கும்? தாள முடியுமா நம்மால்? மேலும் அதற்குக் குடிக்க கள்ளைக் கொடுத்தால்... கேட்கவே வேண்டாம். அசுரர்கள் வரையில் அமுதம் கிடைத்தாலும் அவ்வளவுதான்! இதனாலேயே, காக்கும் கடவுளான அந்தத் திருமால் அமுத விநியோகத்தை அழகாக தேவர்களுக்கு மாத்திரம் என்று முடிவு செய்தார்.

அன்றிலிருந்தே தேவ அசுரர்கள் இடையே ஒரு பெரும்பகை கொழுந்துவிடத் தொடங்கிவிட்டது. ஒவ்வொரு அசுரனும் தனது பலத்தால் ஒரு தேவரையாவது அடிமைகொள்ள வேண்டும் என்று தவித்தான்... துடித்தான்!

கரம்பன் ரம்பன் வரையில் அந்தத் துடிப்பு கூடுதலாகவே இருந்தது. இருக்கிற பலம் போதாதென்று விசேஷமான பலவிதி பலங்களைப் பெற்றிட என்ன வழி என்று யோசிக்கத் தொடங்கினர்.

அந்த யுகத்தில், தவம் செய்து அதற்கேற்ற வரம் பெறுவது என்பது ஒரு வழி வழி வழக்கமாச இருந்தது. அசுரர்கள் தங்களாலும் தவம இயற்ற முடியும் என்பதை நிரூபிக்க பெரிதும் முனைந்தார்கள். ரம்பனும் கரம்பனும் கூட கடுமையான தவத்துக்கு தயாரானார்கள். தவம் இயற்றுவதில் பலவித முறைகள் இருக்கின்றன. அதற்கேற்ற அனுகூலமும் அதனால் கிட்டும். இந்த வகையில் அந்த அசுர சகோதரர்கள், தங்களுக்குள் ஒருவர் நீருக்குள் மூழ்கிய நிலையிலும் இன்னொருவர் நெருப்பிலும் தவம் இயற்றத் தீர்மானித்தனர்.

இப்படிப்பட்ட தவத்தைத்தான் அசுர தவம் என்பர். தவம் என்பதே மென்மையானது. அமைதி கொண்டது. ஆனால், நீருக்குள் மூழ்கி மூச்சடக்கி

ஒருவன் அந்த பரமனை அழைக்கத் தொடங்கிவிட்டால் அந்த பரமனுக்கு எப்படியிருக்கும்? எண்ணிப் பாருங்கள். என் பொருட்டு ஒருவன் பாடாய்ப்படுகிறானே என்று ஓடிவரத் தோன்றுமல்லவா? ஓடிவர வைக்க வேண்டும் என்பதுதானே அசுரத்துக்கும் நோக்கம்?

கரம்ப, ரம்பனின் கடும் தவம் தேவருலகையும் மூவருலகையும் வெகு சீக்கிரம் ஆட்டிப் படைக்க ஆரம்பித்துவிட்டது. இவர்கள் தவத்தால் எல்லோரும் ஆச்சரியப்பட்டபோது ஒருவன் மட்டும் அதிர்ந்து போனான். அதிர்ந்து போனது மட்டுமல்ல... அச்சத்தில் மூழ்கி தத்தளிக்கவும் ஆரம்பித்தான்.

அவன்தான் இந்திரன்! தேவர்களுக்கெல்லாம் தலைவன்! ஐராவதம், கற்பகவிருட்சம், காமதேனு என்று விசேஷ ஐஸ்வரியங்களோடு தேவர்களுக்கு அதிபதி என்கிற பட்டமும் உடையவன்.

இவனது இந்திரபதவி என்பது எப்போதுமே பறிபோய்விடக்கூடிய ஒரு அபாயமும் கூடவே இருந்தது. எனவே, அதை காப்பாற்றிக் கொள்வது என்பது அவன் வரையில் பெரிய விஷயமாக இருந்தது. இந்திர பதவி என்பது ஏன் இப்படிப் பறிபோய்விடக் கூடிய ஒன்றாக இருக்கிறது என்கிற கேள்விக்குள் புகுந்தால் அதற்கான விடைகள் ஏராளம்.

ஒருவர் நூறு அசுவமேத யாகம் புரிந்தால் அவருக்கு இந்திர பதவி கிடைத்துவிடும். அது அந்த பதவிக்கான ஒரு இலக்கை கொண்டிருந்தது. அந்த ஒரு பதவி மட்டும் தகுதியால் அடைய முடிந்த ஒன்றாகவும் இருந்தது. பிறர் சற்று முயன்றாலும் தனது பதவி பறிபோய்விடும் என்கிற அச்சம் இருந்தால்தான் இந்திரனும் பொறுப்புடன் நடந்து கொள்வான் என்பது தேவருலகையும் மூவருலகையும் நிர்மாணித்து அதற்கும் மேலாக சப்த லோகங்களையும் படைத்து அவற்றை ஆட்டிப்படைத்துவிடும் அந்த ஆதிசக்தியின் எண்ணமாக இருக்கலாம்.

இந்த பின்னணியில்தான், இந்திரனும் அவர்கள் தவத்தைக் கலைக்கத் தயாரானான்.

ஒரு அசுரனுக்கு இரு அசுரர்கள் தவத்தில் இறங்கி வரசித்தியும் பெற்றுவிட்டால் அதன்பின் தேவருலகம் என்னாகும் என்பதை எண்ணிப் பார்க்கவே இந்திரனால் முடியவில்லை. ஒரு வரமும் பெற்றிராத நிலையிலேயே அவர்களின் அட்ட காசத்தை தாங்க முடியவில்லை. இதில் வரசித்தி சேர்ந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். எனவே, அவர்களின் தவத்தைக் கலைக்க இந்திரன் புறப் பட்டுவிட்டான்.

இதில் கரம்பன் ஜலத்துக்குள் தவம் செய்தது இந்திரனுக்கு மிகவசதியாகபோய்விட்டது. முதலை வடிவில் சென்று அவனை விழுங்கிவிட்டான்.

கரம்பனின் மரணம் ரம்பனுக்குள் அதிர்வலை களை உருவாக்கி மன ஒருமையையும் கலைத்து விடுகிறது. தவம் கலைந்தும் போகிறது ரம்ப னுக்கு... (அப்பாடா...!) கூடவே, சகோதர பாசம் ரம்பனை சோகத்தில் ஆழ்த்துகிறது. இந்திரன் செய்த சதி ஒருபுறம் அவன் மேலான கோபமாகவும் மூண்டெழுகிறது.

சட்டென்று ஒரு ஆவேசம்!

எந்த அக்னியின் தீ ஜ்வாலைகளை தாண்டிக் கொண்டு தவம் செய்தார்னோ... அதே அக்னிக்கு இரை ஆவதென முடிவு செய்கிறான் ரம்பன். அந்த அளவுக்கு கரம்பன் மேலான பாசம் ஆட்சி செய்கிறது.

ஆனால், ரம்பன் அக்னிக்குள் புக முனையும் போது அக்னியால் ரம்பனை ஏற்க முடியவில்லை. அப்படி ஏற்றால் அவன் அக்னியும் இல்லை. இந்த பதில் ஆச்சரியமான குழப்பத்தை தரலாம். நுட்பமாக பார்த்தால்தான் உண்மை விளங்கும்.

அன்றும் இன்றும் என்றும் நெருப்பே பஞ்ச பூதங்களில் அழுக்கின்றியும் இருள் விழுங்கியாக வும் தனக்கு அளிக்கப்படும் அவிர்பாகங்களை உரியவர்களிடம் சேர்ப்பிக்கும் ஒரு தபால்காரனாக வும் திகழ்ந்து வருகிறது.

அழியக்கூடிய அனைத்தையும் அது அழிக்க வல்லது. அதனால் அழிக்க முடியாதது சத்ய தர்மங் களையும் சாஸ்வதமான அன்பு, கருணை போன்ற வற்றையும்தான்.

நெருப்பிடமிருந்து மீளமுடிந்த இரண்டே பொருட்கள் சங்கும் தங்கமும்தான். ஒன்று, நீரில் விளைவது. இன்னொன்று, மண்ணிடை உருவாவது. சங்கு ஒலியெழுப்பும். இது மனதை குறிப்பது. எப்பொழுதும் எண்ணமெனும் சப்தங்களால் அமைதியின்றி இருப்பதுதானே நமது மனம்? தங்கம்-ஒளி வடிவானது. எவ்வளவு காலமானாலும் கருக்காது. ஒளிரக்கூடியது.

ஒன்று - ஒலி. இன்னொன்று ஒளி!

இந்த இரண்டையும் தான் அக்னியால் ஏதும் செய்ய இயலாது. மற்றவை அவ்வளவும் அதனுள் எரிந்து சாம்பலாகிவிடும்.

இப்படிப்பட்ட அக்னியால் ரம்பனை ஏதும் செய்ய முடியவில்லை. காரணம், அவன் மனம் பாசம் எனும் நல்லுணர்வால் சோகத்தில் ஆழ்ந்து, அதன் காரணமாக பவித்ரமாகியது. இதனாலேயே அவன் மனது தங்கம் போல ஒளிவிட்டது.

அதாவது, அந்த அசுரன் சகோதர பாசத்தால் நல்ல ஒலி ஒளிக்கு ஆளானான். அதனால், அவனை அக்னி ஏற்க மறுத்து, தற்கொலைக்கு முயன்றதை தடுத்தான்.

"ரம்பா... ஆத்மஹத்தி வேண்டாம். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்! நான் தருகிறேன்..." என்றான் அக்னி.

ரம்பன் இதை எதிர்பார்க்கவில்லை. தடுமாறிவிட்டான். பின் சுதாரித்தபோது, அவனுக்கு இந்திரன் மேலான கோபம்தான் முன் நின்றது. எனவே, அவனை வெல்லும் ஆற்றல் கொண்ட ஒரு பிள்ளை தனக்கு வேண்டும் என்று கேட்டான்.

முட்டாள்!

இந்த ஆற்றலை அவன் தனக்கே தேவை என்றும் கேட்டுப் பெற்றிருக்கலாம். இங்கேதான் அகத்திய முனிவர் வரமுனிக்கு தந்த சாபம் வேலை செய்தது என்று கூற வேண்டும். ஏனெனில், வரமுனி மகிஷமாக மாற ஒரு கணக்கு தேவைப்படுகிறது. அதில் ஒரு சரியான கூட்டல் கணக்காக அமைந்தவன்தான் ரம்பன். எனவே தான், அவன் புத்தி அப்படி கேட்டது.

அக்னியும் "அருளினேன்..." என்று கூறிவிட்டு மறைந்தான். ஆகக்கூடி, ரம்பனுக்கு ஒரு பிள்ளை உறுதியாகிவிட்டது. அது மகிஷமாக இருக்க வேண்டும்... அது எப்படிச் சாத்தியமாகப் போகிது?

3

'கிரிதுர்கா கௌர ஹஸ்தா கணாத வ்ருதாங்கணா
கல்ப காரண்ய ஸம்வீத மாலதீகுஞ்ச மந்திரா!'

பொருள்: 'துர்கையாகிய தேவி, உயர்ந்த மலைச்சிகரங்களை இருப்பிட மாய் கொண்டிருப்பவள். பேரருள் புரியும் அழகிய கரங்களை உடையவள். எப் பொழுதும் தேவர்களும் பூதகணங்களும் இவளை சூழ்ந்திருப்பர். கற்பக விருட் சத்துக்கு இணையான மரங்கள் சூழ்ந்த காடுகளிலும் இவளுக்கு பிரியம் அதிகம். அதனால், அங்கேயும் விருட்ச ரூபமாய் வாழ்பவள். இதனால், மாலதி, குஞ்சமந் திரா ('குஞ்சரம்' என்றால் யானை. யானை மந்திரம் என்றால் 'ஓம்' எனும் பிரண வத்தைக் குறிக்கும்) என்கிற காரணப் பெயர்களை உடையவள் என்பதும் உட்பொருளாகும்.'

அக்னி பகவான் ரம்பாசுரனுக்கு அவன் விரும் பும் பிள்ளை வரத்தை அளித்துவிட்டு மறைந்த நொடியே, ரம்பனும் புதியதொரு சக்தியும் உத்வேக மும் கொண்டவன் போல ஓட ஆரம்பித்தான். இந்த விஷயம் நாரதமுனி மூலமாக தேவருலகம் முழுக்க பரவ ஆரம்பித்தது.

இங்கே நாரதரைப் பற்றியும் சற்று சிந்திக்க வேண்டும். நாரதர் என்றாலே, அவர் ஒரு கலகக்காரர்; 'நாராயணா... நாராயணா' என்றபடியே, தம்புராவுடன் எங்கு வேண்டுமானாலும் சென்று வர முடிந்தவர் என்பது போன்ற விஷயங்கள்தான் நமக்கெல்லாம் தெரியும்.

ஆனால், அவருக்கு மட்டும் இப்படி ஒரு நிலை எதனால், எப்படி ஏற்பட்டது என்பதை சற்று சுருக்கமாகவாவது பார்த்துவிடுதல் நலம்.

நாரதர், பிரம்மாவின் மானஸபுத்திரர்! பிரம்மா படைப்புக்கு அதிபதியாவார். அந்தப் படைப்பாகிய உயிர்களுக்குள் மனமாக நிரம்புபவர்தான் நாரதர். மனமானது சதா சர்வகாலமும் அலைபாய்ந்தபடியே இருக்கும். மனம் கலங்கினாலோ குழப்பம் ஏற்பட்டு, காரியங்கள் கெடுகின்றன. தெளிந்தாலோ காரியங்கள் சிறக்கின்றன. இப்படிப்பட்ட மனதின் இயல்பாகவே நாரதர் திகழ்வதாகக் கூறுவார்கள்.

அடுத்து, அவரது பெயரிலேயே அவருக்கான பொருள் இருப்பதாகவும் கூறுவார்கள். நாதத்தை, ரதம் போல ஓட்டி மகிழ்விப்பவர். இசைக்கு மயங்காத உலகம் எது? எனவே, 'நாத ரதரா'கிய நாரதருக்கு எந்த உலகத்திலும் தடை இருக்க வாய்ப்பில்லை என்றும் கூறுவர்.

ஆனால், உண்மையில் தட்சனிடம் இவர் ஒரு முறை பெற்ற சாபம்தான், இவர் திரிந்தபடியே இருக்கக் காரணம்!

தட்சன் ஆயிரக்கணக்கானோரை தோற்றுவித்து, அவர்களை சம்சாரத்தில் ஈடுபடுத்தி, ஒரு பெரும் ஜனசமுத்திரம் ஏற்படுத்த விரும்பினான். ஆனால், தட்சன் படைத்த அத்தனை பேரையும் சம்சார வாழ்க்கையில் ஈடுபடாமல் தடுத்து, அவர்களுக்கு நாராயண நாமத்தை உபதேசித்து, அவர்கள் முக்தி பெற உதவி செய்தார் நாரதர். இதனால் கோபப்பட்ட தட்சன், நாரதரை அழைத்து, "இனி நீ ஒரு இடத்தில் ஒரு முகூர்த்த காலத்துக்கு மேல் தங்கினால் உனது தலை வெடித்துச் சிதறும்!" என்று சாபம் கொடுத்துவிட்டார்.

அதன் காரணமாக எங்கும் நீண்ட காலம் தங்கிடும் வாய்ப்பு நாரதருக்கு இல்லாமல் போனது. இதனால், ஒரு இடத்தில் நடப்பது, நாரதர் மூலமாக இன்னொரு இடத்துக்குப் போய்ச் சேர்வதும் சுலபமாகிப் போனது.

ஒரு இடத்துக்குச் செல்லும்போது, 'சும்மா பார்க்க வந்தேன்' என்று ஒருவரால் எத்தனை முறைதான் கூறமுடியும்? அப்போது புதிதாக எதையாவது பேச வேண்டும்! அது ரசமான விஷயமாக இருந்தால்தான் கேட்பவர்களும் காது கொடுப்பார்கள்... பதிலுக்கு அவர்களும் எதையாவது கூறுவார்கள். அதையும் கேட்டுக்கொள்ள

வேண்டும். இப்படித்தான் நாரதர் வாழ்வும் மற்றவர்கள் வாழ்விலிருந்து பெரிதும் மாறிப்போனது. ஆனால், நாரதர் புரிந்த கலகங்கள் ஒருபோதும் தவறாகி சிக்கல் ஏற்படுத்தியதே இல்லை. அதனால் பெரும் நன்மைகளே ஏற்பட்டன.

அதற்கும் ஒரு சிறு சம்பவமே சாட்சி!

ஒரு முறை கைலாயத்திற்கு நாரதர் சென்ற போது, அங்கே முனிவர்கள், பூதகணங்களுக்கு நடுவில் நவகிரகங்களும் கூடியிருந்தனர். எல்லோரும் அந்த ஈசனையும் பார்வதியையும் பார்த்தபடி இருக்க, சனீஸ்வரன் மட்டும் முதுகைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தான். கண்களிலும் கட்டு!

இது நாரதரைச் சற்று நெருடியது. நாரதருக்கு மேல், பார்வதிதேவியையும் நெருடிற்று. நாரதர் பார்வதிதேவியிடம் அதற்கான காரணத்தைக் கேட்க, தேவி ஈசனிடம் கேட்டு மறுநாள் விடை பகர்வதாகக் கூறினாள். அதே போல, கேட்கவும் செய்தார். 'சனீஸ்வரனும் எல்லோரையும்போல கண்கட்டை அவிழ்த்துவிட்டு, நம்மை துதித்த படி நிற்பதுதான் அழகு!' என்று கூற, ஈசனும் சனீஸ்வரனை அதே போல நிற்கவைத்தார். இதனால் சனியின் நேர்ப்பார்வை பார்வதிதேவியின் மேல் பட்டது. அதன்பின் தேவி ஈசனைப் பார்த்தபோது, ஈசனின் ரூபத்தோடு அவரது ஐந்து சிரம் கொண்ட சதாசிவ ரூபமும் சேர்ந்து தெரிந்தது. இதனால் இந்த ரூபங்களில் எது உண்மையானது என்கிற குழப்பமும், எதனால் இந்த இருவித ரூபங்கள் தனக்கு தெரிகின்றன என்கிற கேள்வியும் பார்வதிதேவிக்குள் மூண்டெழுந்தன.

ஈசனும் புன்னகைத்தபடி சனீஸ்வரனை திரும்பவும் முதுகைக் காட்டியபடி நிற்கும்படி கூறிட... பார்வதியின் குழப்பம் உடனே அகன்று, அங்கே ஈசனின் தெளிவான முகம் மட்டும் தெரிந்தது. பிறகுதான் தன் சித்த கலக்கத்துக்குக் காரணம் சனியின் பார்வை சக்தி என்பது பார்வதிக்கும் புரிந்தது.

ஈசனும், "தேவி! சனியின் பார்வை உன்னையே குழப்பிவிட்டதே! பூவுலகத்தவரை அது என்ன பாடுபடுத்தும் என்பது இப்போது உனக்குப் புரிகிறதா? என்றும் கேட்டிட... பார்வதியும் சனியின் பார்வை சக்தியைப் புரிந்துகொண்டு, அதை மறு

நாள் நாரதரிடமும்கூறிட, நாரதர் அதைசரியானஒரு சமயத்தில் பயன்படுத்திக் கொண்டதுதான் சிரிப்பு.

அசுர வேந்தனாகிய ராவணன் தேவர்களை தனக்கு குற்றேவல் செய்யவைத்து, சுகம் கண்டான். அவனது அதிகாரம், அகம்பாவம், ஆக்ரோஷம் ஆகியவற்றின் முன்னால் தேவர் உலகமே நடுங்கியது. அதுமட்டுமல்ல... அஷ்டதிக்கு பாலகர்கள் முதல் நவக்கிரகங்கள் வரை அவ்வளவும் பேரும் ராவணனுக்கு குற்றேவல் புரிந்தனர். ஒரு முறை, ராவணன் நவக்கிரகங்களை வரிசையாக படுக்கவைத்து, படிபோல அவர்கள் மேலேறி தனது அரியாசனத்தில் அமர்ந்து கொண்டதோடு, தனது செயலை எண்ணி, தனக்குத் தானே ரசித்தும் சிரித்தான். ராவண சபையும் அதை ஒரு மாபெரும் சாகசமாக பாராட்டி மகிழ்ந்தது.

கிரகங்களுக்கு ஏற்பட்ட இந்த இழிவான நிலை, அங்கேவந்தநாரதரைமிகவும்பாதித்தது. அப்போது அவர் எதிரில் சனி, ராவணனுக்கு முதுகைக் காட்டியபடி படுத்திருந்தான். கண்களிலும் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தான். நாரதரின் கூர்மையான புத்தித்திறன் மகாவேகமாக செயல்படத் தொடங்கியது.

"ராவணேஸ்வரா! அது என்ன சனி மட்டும் உனக்கு முதுகைக் காட்டிக்கொண்டு நிற்கிறான்? அவனையும் மற்றவர்கள்போல உன்னைப் பார்க்க வைத்து வந்தனை செய்யச் சொல்" என்று கூறிட... எல்லோரும் அதைக் கேட்டு, "சனி பார்வை பொல்லாதது...அதனால்தான்"என்றுராவணனுக்கும்கூற முற்பட... "அப்படி என்றால் ராவணேஸ்வரரைவிட சனி உயர்ந்தவனா?" என்று நாரதரும் போட்டுத் தாக்க... அது நன்றாகவே வேலை செய்தது.

ராவணனும சனியை நேருக்கு நேர் பார்க்கச் சொன்னான். "ஒரு அடிமையின் பார்வை இந்த ஈசனின் பக்தனை எதுவும் செய்து விடாது" என்றும் கித்தாப்பு பேசினான். ஆனால், அவனுக்குத் தெரியாது... அந்த சனியின் பார்வை, அந்த ஈசனையும் பார்வதிதேவியையுமே ஆட்டிவைத்த கதை.

சனியும் தன் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு ராவணனை நேருக்கு நேர் பார்த்திட, ஆரம்பமாயிற்று ராவணனுக்கான சரிவு. அதன்

பிறகுதான் சீதாதேவியை கவர்ந்து வரும் கெட்ட எண்ணம் தோன்றியது. அந்த எண்ணம் காரணமாக சீதையை நெருங்கினான்... முற்றாக அழிந்தும் போனான்.

இப்படி, ஒரு பெரிய அசுரனின் முடிவுக்கே காரணமாக இருந்து, நன்மை செய்தவர்தான் நாரதர்.

ரம்பன் அக்னியிடம் பெற்ற விசேஷமான வரம் பற்றியும் நாரதர் தான் செல்லும் இடம் எங்கும் கூறத் தொடங்கினார்.

விஷயம் இந்திரனின் காதுகளையும் அடைந்தது. அந்தக் கணமே இந்திரனை கவலை ஆட்கொண்டது. இத்தனைக்கும் அக்னி, இந்திரனின் ஆணைக்கு கட்டுப்பட்டவன்தான். இந்திரனேகூட அதனை உத்தேசித்து அக்னியை அழைத்துக் கேட்டான்.

"தீத்தேவா... என்ன காரியம் செய்தாய் நீ? உன் தலைவன் நான். என்னை அழிக்க ஒரு அசுரன் வரம் கேட்டால் நீ அதை அளித்துவிடுவதா?" என்று சீறினான். அக்னியோ சிரித்தான்.

"அமரேந்திரா... என்னுடைய சூட்டையே தன் தவத்துக்கான துன்பத் தேவையாக கொண்டு அதைத் தாங்கி தவம் இயற்றினான் ரம்பன். அவன் சகோதரன் கரம்பனை நீங்கள் அழித்தமையால் பாசத்தீயில் விழுந்து என் மூலமாகவே ஆத்ம ஹத்தியும் செய்துகொள்ளப் பார்த்தான். இதை நான் அனுமதித்தால் அவன் செய்த தவத்தையே நான் பொருட்படுத்தவில்லை என்றல்லவா ஆகும்? அவன் என்னால் உயிரை விட்டால் நானல்லவா அழுக்காவேன்? அதனால்தான், அவன் முன் தோன்றி அவனை தடுத்து ஆட்கொண்டேன். அவன் உங்களை வெல்லும் ஒரு பிள்ளை தனக்கு வேண்டும் என்று கேட்ட நொடி அந்த வரத்தை அருளிவிட்டு மறைந்துவிட்டேன்.

அமரேந்திரப் பிரபுவே! ரம்பனுக்கு பிள்ளை பிறந்து அது வளர்ந்து உங்களோடு யுத்தம் புரிய ஒரு நீண்ட காலம் உள்ளது. இந்தக் கால அவகாசத்தை பயன்படுத்தி தாங்கள் அந்த பிள்ளையால் பேராபத்து நேராமல் இருக்கும் வழிவகைகளைப் பாருங்கள்.

பதவி ஆசை காரணமாகத்தான் தாங்கள் நீருக்குள் முதலை வடிவில் சென்று கரம்பனைக் கொன்றீர்கள். ஒரு வகையில் இது அநீதிதானே? தவத்தில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு துன்பம் தரலாகாது என்பதுதானே தர்மம்? தாங்கள் சுயநலத்தின் பொருட்டு அதை மீறியதற்கு இந்த அளவுக்குகூட தங்களுக்கு தண்டனை கிடைக்காவிட்டால் எப்படி?"

- இப்படி அக்னிதேவன் ஒரு நீண்ட விளக்கம் தரவும், இந்திரனிடம் மறுபேச்சில்லை.

ஒரே ஒரு ஆறுதல், ரம்பனுக்கு பிள்ளை பிறந்து அது வளர்ந்துவரும் வரை அவகாசம் இருக்கிறது என்பது மட்டும்தான். அப்படி வரப்போகும் பிள்ளையும் ஒரு மகிஷமாக... அதாவது, எருமையாக இருக்கப் போகிறது. அது எப்படி நிகழப் போகிறது?

அந்த வனத்தில் பெண் எருமை ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அந்தப் பக்கமாய் வந்து கொண்டிருந்த ரம்பனுக்கு அவ்வேளை பார்த்து பெரும் பசி! ஆனால் அந்த வனத்தில் அவன் பறித்து உண்ண பெரிதாய் காய்கனிகள் என்று எதுவுமில்லை. தனக்கு உணவு இல்லாத இடத்தில் ஒரு எருமை மட்டும் பசியாறுவதைக் கண்டு ரம்பனால் பொறுக்க முடியவில்லை.

அசுரர்களுக்கு சில விசேஷ சக்திகள் உண்டு அதில்ஒன்று,விரும்பியவடிவம்எடுப்பது.(ஆனால் அப்படி எந்த வடிவம் எடுத்தாலும், எடுக்கும் வடிவத்தின் இயல்பில் இருந்து மாறுபட்டு செயல்பட முடியாது). ரம்பனும் உடனே தன்னை ஒரு ஆண் எருமையாக ஆக்கிக் கொண்டான். அந்தப் பெண் எருமையை நோக்கிச் சென்று போட்டி போட்டு புற்களை கரித்து உண்ணத் தொடங்கினான். விலங்காக தன்னை மாற்றிக் கொண்ட நொடி, உணர்வு நிலைகளிலும் விலங்குத் தன்மை பரவி, அந்தப் பெண் எருமை மீது காம இச்சை ஏற்பட்டது.

பெண்எருமையோடுஅவன்கலந்துநின்றதைக் கவனித்த இன்னொரு ஆண் எருமை வேகமாக வந்து அவனோ முட்டி மோதி சண்டையும் செய்தது.

ரம்பன் எருமை வடிவம் எடுத்தவன் மட்டுமே. அந்த எருமையோ கருவிலேயே எருமையாக தோன்றி பிறந்து வளர்ந்த ஒரு திண்மையான விலங்கு. எனவே, அதற்கு இருந்த சக்தி, ரம்பனின் சக்தியைவிட அதிகம்! ஒரு கட்டத்தில் அந்த ஆண் எருமை, ரம்பனை தன் கொம்புகளால் குத்திக் கிழித்துப் போட்டுவிட்டது.

ரம்பனும் அடுத்த நொடி மாறுவடிவம் கொண்டு உயிர் அவஸ்தையை காட்டினான். அப்படியே உயிரையும் விட்டான். அதைக் கண்ட பெண் எருமைக்கு, தான் ஒரு அசுரனால் தீண்டப்பட்டது அப்போதுதான் புரிந்தது. தானொரு காட்டு விலங்காய் இருப்பினும் தன் இனம் சேராமல் தான் சோரம் போனதாக உணர்ந்த அந்த எருமை, ரம்பனால் உருவான கருப்பிண்டத்தை வெளித்தள்ளி விட்டு, தன் உயிரையே மாய்த்துக் கொண்டது.

ஒரு விலங்கிடமும் இப்படியொரு நெறிப்பாடு! 'இப்படித்தான் வாழவேண்டும்... இயலாத பட்சத்தில் உயிரை விட்டுவிடுவதே உத்தமம்' என்று ஒரு விலங்கும் எண்ணியதுதான் விந்தை.

அகத்தியமகரிஷி, வரமுனி என்னும் இன்னொரு முனிவருக்கு சாபம் அளித்துவிட்டார். அந்த சாபம் வேலை செய்யுமே...? அதன் செயல்பாடு இப்படி கூட இருந்திருக்கலாம் என்பதே நிர்சனம்!

எது எப்படியோ... அந்தப் பெண் எருமை ரம்பனோடுகூடித்தரித்ததன்கருப்பிண்டத்தைவெளித்தள்ளி விட்டது. அது, சாபம் பெற்ற வரமுனியின் உயிர் அம்சத்தை தன்னுள் ஏற்றும் கொண்டது.

ஒரு அசுரனின் உயிரணுவும், ஒரு மிருகத்தின் உயிரணுவும் கூடிய கருப்பிண்டத்துக்குள் ஒரு மாபெரும் தபஸ்வியின் சாபம் பெற்ற உயிர் அம்சம் வந்து சேர்ந்த நிலையில்... அந்தக் கருப்பிண்டம் ஒரு மகிஷக் கன்றாக மாறி எழுந்தும் நின்றது.

பிறக்கும்போதே தாய், தந்தை என இருவரையும் விழுங்கிவிட்டு தனித்துப் பிறந்து நிற்கும் அந்த மகிஷக் கன்றானது வளர வளர... அதனுள் அது கருவிலேயே பெற்ற அம்சங்களும்... சேர்ந்தே வளரத் தொடங்கியது. ஒரே ஆங்காரம்... மதர்ப்பு... மூர்க்கம்... வெறி துர்குணங்கள் அந்த மகிஷத்துக்குள் காட்டுக் கொடி போல மண்டி வளர ஆரம்பித்தன.

தபஸ்வியின் உயிர் கொண்டு பிறந்ததால், அந்த பலத்தால் நினைத்த வடிவம் எடுப்பதும், விருப்பப் படி எல்லாம் நடப்பதும் சாத்தியமாயிற்று. மகிஷக் கருவில் ஜனித்த காரணத்தால் உடலமைப்பு அந்த மகிஷமாகவே இருந்தது. மொத்தத்தில், உலகத்தில் வேறெங்கும் பார்க்க முடியாத ஒரு தோற்றம், ஆச்சரியமூட்டும் ஒரு கலவையின் தொகுப்பாக மகிஷாசுரனும் பிறந்து, வளர்ந்து அசுர குலத்துக்கே ஒரு நிகரில்லாத அரசனாகவும் திகழத் தொடங்கிவிட்டான்.

அசுரர்களுக்கு அதிபதியாவது மகிஷனுக்கு ஒன்றும் பெரிய செயலில்லை. அவன் எதற்காக இந்த பிறப்பெடுத்தானோ... அது ஈடேற வேண்டுமே!

இந்திரனை வெல்லும் கணக்கு ஒன்று பாக்கி இருக்கின்றதே! அந்தக் கணக்கு மகிஷனிடம் அழகாக வேலை செய்யத் தொடங்கியது. எப்படித் தெரியுமா?

4

"தர்ம ஸிம்ஹாஸநாரூடா, டாகின்யாதி ஸமாச்ரிதா
ஸித்த வித்யாதரா மத்ர்யவதூடீ நிகரஸ்துதா"

'அன்னை – தர்மத்தின் வடிவானவள். அதனையே தனது சிம்மாசனமாகக் கருதி அதில் அமர்ந்திருப்பவள்! 'டாகினி' என்னும் ஏழு யோகினிகளின் தலையாய யோகினி தொழுதபடி நிற்க, சித்தர் முனிவர் முதல் தேவர்கள் மற்றும் அவர்கள் துணைவியரும் தினமும் அவளைத் துதிக்கின்றனர்...'

மகிஷன் ஒரு மாபெரும் அசுர சாம்ராஜ்ஜியத்தை நிறுவி, அதன் இணையில்லாத ஒரு அசுரனாகவும் தன்னை ஆக்கிக் கொண்டுவிட்டான். எப்போதும் அசுர சாம்ராஜ்ஜியத்தில் தர்ம நியாயங்களுக்கோ, கருணை, பாசம் போன்றவற்றுக்கோ பெரிய இடம் கிடையாது. இந்த அம்சங்களை அவர்கள் தங்கள் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்பத் தான் பயன்படுத்திக் கொள்வார்கள். வீரத்துக்குத் தான் இவர்களிடம் முதலிடம் என்றும் கூறிவிட

முடியாது. ஏனென்றால், வீரம்கூட ஒரு நல்ல உணர்ச்சிதான். அதனுள் பல அழகுகள் உள்ளன. இவர்களிடம் ஆக்ரோஷம், வெறி, ஆத்திரம், தலைக்கனம்... என்கிற தடித்த உணர்வுகளே அதிகம். மகிஷனிடம் அவை மட்டுமே மண்டிக் கிடந்ததால், அவனால் எளிதில் அசுர ராஜ்ஜியத்துக்கு அதிபதியாகிவிட முடிந்தது.

இப்படி ஒரு நிலையில்தான் அவன் எதற்காக ஜென்மம் எடுத்தானோ அந்த நோக்கமாக இந்திரனின் நினைப்பும் அவனுக்கு வந்தது.

மகிஷன் அசுரர்களுக்கு தலைவன் என்றால், இந்திரன் தேவர்களுக்கு தலைவன். மகிஷனால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்திரனும் ஆரம்பம் முதலே நடுங்கிக் கொண்டுதான் இருந்தான். இப்போது மகிஷன் தன்னைக் குறிவைத்துவிட்டான் என்பதும் இந்திரனுக்குத் தெரியவந்தது. ஆனாலும், மகிஷன் அருகில் வரட்டும்... பிறகு, அன்றைய சூழலுக்கு ஏற்ப முடிவெடுக்கலாம் என்று விட்டுவிட்டான்.

இந்திரனைக் குறிவைத்த மகிஷனுக்கு சில விஷயங்கள் அவனது அவையோராலேயே உணர்த்தப்பட்டன.

"அசுராதிபதியே, என்னதான் பராக்கிரமசாலியாக நீங்கள் இருந்தாலும் ஒரு சில நடைமுறைகளை உங்களால் மாற்ற முடியாது என்பதே எங்கள் அபிப்பிராயம். எப்பேர்ப்பட்ட தேவனையும் தாங்கள் அடிமைப்படுத்திவிடலாம். ஆனால், அவர்களை அழிக்க முடியாது. அதற்குக் காரணம், அவர்கள் உண்ட அமிர்தம்! அவர்களை அடிமைப்படுத்தி சிறையிலிட்டு நிரப்பினாலும், அவர்கள் அமரத்துவத்தோடு தான் இருப்பார்கள். அன்னஆகாரம் அவர்களுக்கு ஒரு பொருட்டு கிடையாது. நமது இனமோ அப்படி அல்ல. யுத்தம் என்று வந்துவிட்டால், அதில் நம்மவர்கள் அழிந்துபோவது உறுதி. அடுத்து, அவர்களது தேஜஸ் மற்றும் ஆத்ம சந்தோஷம் எல்லாமே முனிவர்கள் புரியும் யாகங்களாலும் அதில் அவர்கள் அளிக்கும் அவிர்பாகங்களாலும்தான் சித்திக்கின்றன. அந்த அவிர்பாகங்களை பெறுபவர்களில் மும்மூர்த்தியருக்கு பின் இந்திரன் முதலான பிரதான தேவர்களும் அடக்கம். நீங்கள் முதலில் 'இந்த அவிர்பாகம் என்பது

அசுர குல சக்ரவர்த்தியான எனக்கும் உரியது' என்கிற நிலையை உருவாக்குங்கள். எங்கே யாகம் நடந்தாலும் அவிர்பாகம் உங்களுக்கே வழங்கப்பட்டாக வேண்டும். இல்லாவிட்டால் ஒரு முனியும் யாகமே புரியக்கூடாது. முனிவர்கள் யாகம் புரிய முடியாத நிலையில் அவர்களுக்கு வரசித்தியும் ஏற்படாது. எனவே, அவர்களுக்கு பலமற்றுப் போய் உங்கள் முன்னால் தலை குனிந்து நிற்பார்கள்..."

இப்படி மகிஷனுக்கு விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அதைக் கேட்டதுமே அவனுக்கு ஆங்காரம் அதிகமாகிவிட்டது. எங்கெல்லாம் யாகங்கள் நடந்தனவோ அங்கெல்லாம் சென்று அவிர்பாகத்தை கேட்டே வாங்கத் தொடங்கிவிட்டான். அதோடு, தன்னையன்றி வேறு எந்த தேவனுக்கும் அவிர்பாகம் சென்று சேரக்கூடாது என்று கட்டளையும் போட்டுவிட்டான்.

'பேய் ஆட்சிபுரிந்தால் சாத்திரங்கள் அவ்வளவும் பிணம் தின்னும்' என்று சும்மாவா சொன்னார்கள். மகிஷனால், தேவருலகம் முதல் மூவருலகம் வரை சகலமுமே மாறத் தொடங்கிவிட்டது.

மழையற்றுப் போன பூமியில் வெக்கை தகிப்பது போல தேவபுவனங்களில் இனம் புரியாத ஒரு வெம்மை. ஒருவர் முகத்திலும் மலர்ச்சி இல்லை. ஒளி விலகி இருள் கவ்வத் தொடங்கிவிட்டதை அவ்வளவு பேராலும் நன்கு உணர முடிந்தது.

அசுரப்பட்டினத்திலோ ஒரே கொண்டாட்டம்! மதுபானங்களைப் பரிமாறிக் கொண்டும், மாமிசத்தை ருசித்துக் கொண்டும் தேவமங்கையர்களை எல்லாம் பிடித்து ஆடச் சொல்லியும் பாடச் சொல்லியும் அட்டகாசம் புரியத் தொடங்கிவிட்டனர்.

'அமுதம் குடித்தவர்கள் என்கிற மமதையா உங்களுக்கு?' என்று கேட்டு உதைக்க வேறு செய்தார்கள். 'மகிஷ மஹாபிரபுவின் பாதார விந்தங்களே சரணம்' என்று சொல்லச் சொல்லி கேட்டார்கள். "அஷ்டாட்சரமும் பெரிதில்லை; பஞ்சாட்சரமும் பெரிதில்லை மகிஷாட்சரம்தான் பெரிது... சொல்லுங்கள்... 'ஓம் மகிஷாய நம'" என்றனர்.

இந்தக் கொடுமை தாங்காமல் பல தேவர்கள் தங்களை அசுர உருவத்துக்கு மாற்றிக் கொண்ட

னர். பலர் மலை குகைகளில் போய் ஒளிந்து கொண்டனர்.

இதெல்லாமே கேவலம் என்று உணர்ந்தவர்கள் நேராக இந்திரனிடம் சென்றனர். அவன்தானே தேவர்களுக்கு அதிபதி? இக்கட்டான இவ்வேளையில் தேவர்களைக் காத்து ரட்சிக்க வேண்டியது அவன் கடமை அல்லவா?

"ஏ, அமரேந்திரா... என்ன செய்து கொண்டிருக்கிறாய் நீ? ஒரு எருமைத் தலையன் தினவெடுத்து புவனங்கள் அவ்வளவையும் நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறான். நீ வேடிக்கையா பார்க்கிறாய்?" என்று இந்திரனிடம் சென்று ஆவேசமாக முறையிட்டார்கள்.

கச்சிதாக நாரதரும் வந்து சேர்ந்தார்.

இந்திரன் பதில் கூறமுடியாதபடி தத்தளிப்பதையும் பார்த்தார். அதுவே இந்திரன் தானாக போருக்குப் புறப்பட மாட்டான் என்பதை உணர்த்திவிட்டது. 'இனி மகிஷனைத் தூண்டி விடுவதில்தான் எல்லாமே இருக்கிறது; இப்படியே விட்டால் அது வேறு மாதிரி திசையில் சென்று விடும். இதை இழுத்துப் பிடித்து ஒரு சரியான திசைக்குள் செலுத்த என்ன வழி' என்று யோசித்தவர், நேராக மகிஷன் முன் போய் நின்றார்.

"நாராயணா - நாராயணா..." என்ற கையோடு, "அசுர மஹா சக்ரவர்த்திக்கு என் அனந்த கோடி வணக்கங்கள்..." என்று தனது பணிவையும் வெளிப்படுத்தினார். மகிஷன் பதிலுக்கு நாரதரை ஒரு பூச்சி போல பார்த்தான். "என்ன மகிஷா... உன்னைத் தேடி வந்திருக்கும் பிரம்மபுத்திரன் நான். என்னையே நீ ஏளனமாக பார்த்தால் எப்படி?" என்று போட்டு வாங்கவும் தொடங்கினார். பிரம்மபுத்திரன் என்று நாரதர் கூறியது ஓரளவுக்கு வேலை செய்தது.

"எப்படி இருக்கிறார் உங்கள் தந்தை?" என்று ஆரம்பித்தான்.

"அவருக்கென்ன... மூன்று சிரசும் மூன்று காலக் கணக்குகளை சதா போட்டபடி இருக்க, கைவிரல்கள் அதன் வர்த்தமானங்களை எழுதிய படியே இருக்க, அன்னை சரஸ்வதியின் அணுக்கத் துணையோடு கர்மமே கண்ணாக இருக்கிறார்..."

"அதனால்தான் என்னை வந்து பார்க்க வேண்டும் என்று உங்கள் தந்தைக்கு தோன்றவில்லை போலும்..." என்ற மகிஷனை அதிர்வுடன் பார்த்தார் நாரதர். மும்மூர்த்தியரில் ஒருவர், பிறப்புக் கடவுள், கலை மகளின் மணாளர்... அவர் வந்து பார்க்கவில்லையே என்று மகிஷன் கருதுகிறான் என்றால், அவன் தன்னை மும்மூர்த்திகளுக்கும் மேல் நினைக்கத் தொடங்கிவிட்டான் என்பது தானே உண்மை?

அதை எப்படி அவனிடம் கூறுவது? நாரதர் சமாளிக்கத் தொடங்கினர்.

"மகிஷப் பிரபு.. நான் வந்தாலே அவர் வந்த மாதிரி தானே?"

"அதுவும் சரிதான்... தாங்கள் வந்த நோக்கம்?"

"தங்கள் திவ்ய தரிசனத்துக்குத்தான்... எங்கே சென்றாலும் தங்களைப் பற்றித்தானே பேச்சாக இருக்கிறது. குறிப்பாக, இந்திர சபையில்தான் தங்களைப் பற்றிய பேச்சு அதிகமாக உள்ளது."

'இந்திரன்' என்ற வார்த்தையைக் கேட்டதுமே மகிஷன் உஷ்ணம் பாய்ந்ததுபோல எழுந்து நின்றான்.

"என்ன பேசுகிறார்கள் நாரதரே? அந்த இந்திரன் கூட இன்னும் என்னை வந்து பார்த்து தெண்டனிடவில்லை. நான் அவனை சம்ஹாரம் செய்வது பற்றிதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்..."

"என்ன... நீ அவனை சம்ஹாரம் செய்யப் போகிறாயா? அவனல்லவா உன்னை சம்ஹாரம் செய்ய போவதாக சொல்லிக் கொண்டிருக்கிறான்..." நாரதர் கோத்து வாங்கியதுதான் தாமதம்... துள்ளிக் கொண்டு எழுந்தான் மகிஷன்.

"ஏய் நாரதா! போ... இப்போதே போய்ச் சொல்லு. நான் அவனை அழிக்க முடிவு செய்துவிட்டேன். அவன் என் ஜென்ம வைரி. அவனை நினைத்தாலே என் குருதி கொப்பளிக்கிறது. அவன் செய்த புண்ணியம், அவனை நான் இவ்வளவு நாட்கள் விட்டு வைத்திருந்தது. இனியும் அவனை விட்டு வைத்தால் அது என் வீரத்துக்கு இழுக்கு..." என்று புஜத்தைத் தட்டிக் கொண்டு கனன்று வெடித்தான் மகிஷன்.

பிறகென்ன?

யுத்தம் தொடங்கிவிட்டது! இந்திரனும் ஒன்றும் ஓடி ஒளியவில்லை. ஒரு கை பார்த்துவிடுவோம் என்று களத்தில் குதித்துவிட்டான். அப்படி குதிக்கா விட்டால், தேவர் உலகமே அவனைப் பார்த்து கோழை என்று கூறி வெட்கித் தலைகுனியும் அபாயமும் நிறையவே இருந்தது.

யுத்த களத்தில் ஆவேசமான மோதல்கள்... அசுரர்கள் பலர் மடிய, தேவர்களோ மரணமில்லா விட்டாலும் களைத்துப் போய் பல இடங்களில் பின்வாங்கினர்.

ஒரு நாளா... இரு நாளா... பல நாட்கள் யுத்தம் நடந்தும் இதுதான் நிலை! கூட்டிக் கழித்துப் பார்த்ததில் வெற்றி, தோல்வி இரு தரப்பிலும் இல்லா விட்டாலும் மகிஷன் தரப்பில் ஆயிரக்கணக்கான அசுர வீரர்கள் மடிந்த உண்மை தெரியவந்தது.

அது அவனை கவலை கொள்ள வைத்தபோது, அவனது அவையில் ஏற்கெனவே அவனுக்கு எடுத் துரைத்த அவனது மந்திரிப் பிரதானிகள், "பிரபோ... நாங்கள் தொடக்கத்திலேயே சொன்னதுபோல தேவர்கள் அமுதம் உண்ட சக்தியோடு மரண பயமின்றி போராடுகிறார்கள். ஆனால், நமது நிலை அப்படி இல்லை. உங்கள் நிலையேகூட அப்படித்தான்! உங்கள் சக்திக்கு இணையான ஒரு ஆயுதம் உங்களைத் தாக்கினால் நீங்கள் மரணமடைந்தே தீர வேண்டும்... என்று மரண பயத்தை அவனுக்கு உருவாக்கவும், அவனிடம் சட்டென்று ஒரு விழிப்பு.

"தேவர்கள் அமுதத்தால், இறவாத நிலை பெற்றார்கள். அதேபோன்ற ஒரு நிலையை நானும் பெற்றுவிட்டால்...?"

"எப்படிப் பிரபோ?"

"அதைத்தான் இனி யோசிக்க வேண்டும்!"

"இறவாத வரம் பெற்றிட தாங்களும் அமுதம் உண்ண வேண்டும். ஆனால், அமுதமோ ஒரு முறை கடையப் பெற்று ஒரு முறையே உண்ண வும் பெற்றுவிட்ட மறுமுறைக்கு இடமில்லாத ஒன்றாகும். அப்படியிருக்க, தாங்கள் இறவா வரம் பெற வேண்டுமானால், அந்த மும்மூர்த்தியர்களில் ஒருவர் தங்களுக்கு வரம் தந்தால் தான் உண்டு..."

மந்திரிகள் எடுத்துக் கொடுத்ததை மகிஷனும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மும்மூர்த்திகளில் அந்த ஈசன் அடியவர்களுக்கு எளியவன்... ஆனாலும், அவ்வளவு சுலபத்தில் காட்சி தர மாட்டான்! விஷ்ணுவோ சரியான உறக்கத்தில் இருப்பவர். இவரும் அவ்வளவு சுலபத்தில் காட்சி தந்துவிட மாட்டார். மூன்றாமவர் பிரம்மா! இவர் தான் அணுகுவதற்கு எளியவர். பெரிதாக மற்றவர்களாலும் துதிக்கப் பெறாதவர். ஈசனின் அடிமுடி காண முற்பட்ட விஷயத்தில் ஈசனால் தண்டிக்கப் பட்டு, பூவுலகில் காணாதவர். எனவே, இவரை அணுகுவதே எளிது என்பதால், பிரம்மா குறித்து தவமியற்றத் தொடங்கிவிட்டான் மகிஷன்.

யுத்தமும் தற்காலிகமாக ஒரு முடிவுக்கு வந்தது.

இந்திரனும் அப்பாடா என்று பெருமூச்சு விட்ட போது, நாரதர் போய் அவன் வயிற்றைக் கலக்கத் தொடங்கினார்."அமரேந்திரா,யுத்தம்முடியவில்லை. தற்காலிகமாக நின்றுள்ளது. அவ்வளவுதான்! மகிஷன் தன்னை மேலும் பலப்படுத்திக் கொள்ளத் தான் தவம் புரியச் சென்றுள்ளான். அவனது வெறும் மூர்க்கத்தையே உன்னால் எதிர்கொள்ள முடியவில்லை. தற்காலிகமாக நின்றுள்ளது. அவ்வளவுதான்! மகிஷன் தன்னை மேலும் பலப்படுத்திக் கொள்ளத்தான் தவம் புரியச் சென்றுள்ளான். அவனது வெறும் மூர்க்கத்தையே உன்னால் எதிர்கொள்ள முடியவில்லை. இப்போது அத்துடனும் தபோ சக்தியும் சேரப்போகிறது. நீ என்னவாவாயோ ஏதாவாயோ என்று இப்போதே நான் நடுங்குகிறேன்" என்று நாரதர் சொல்லவும், அமரேந்திரனுக்கும் கோபம் வந்துவிட்டது.

"நாரதரே... நீரும் ஒரு தேவ புருஷன்தான்! அதை எண்ணி, நான் வெல்வதற்கு என்ன வழி என்று கூறாமல் என்னைப் பலவீனப்படுத்துவது போலவா பேசுவீர்?" என்றான்.

"ஆஹா! வரவேண்டிய கோபம் வந்துவிட்டதே... நல்லது... மிக நல்லது! ஒரு அசுரன் என் தந்தை பிரம்ம தேவன் குறித்து தவம் இயற்றும் போது நீ சும்மா இருக்கலாமா? நீயும் உன்னைப் பலப்படுத்திக் கொள்ள எதையாவது செய்..." என்று கூறிவிட, அப்போது தேவர்களின் குருவான பிரஹஸ்பதியும் வந்து சேர்ந்தார்.

இந்திரன் அவரைப் பணிந்து, "நான் என்ன செய்யட்டும் குருவே... தாங்கள்தான் வழி காட்ட வேண்டும்..." என்றான். பிரஹஸ்பதிக்கு அந்த இக்கட்டிலும் சிரிப்புத் தான் வந்தது. ஏனெனில், அவர் இப்படியொரு பணிவை, இப்படியொரு வாத்சல்யத்தை இந்திரனிடம் பார்த்து வெகு நாட்களாகிவிட்டன.

இந்திரனிடம் மட்டுமல்ல... தேவர் உலகி லேயே அவர் பல அரிய பண்புகளை பார்க்க முடிய வில்லை. பஞ்சபூதக் கலவையாகவே அவர்கள் இருந்தபோதிலும் அதன் ஏற்றத் தாழ்வுகள், முதுமை, வறுமை, வியாதி போன்ற எதுவும் அவர் களுக்கு இல்லை. அதேபோல், பசி தாகமும் கிடை யாது. இன்பத்தை ஒரு எல்லையின்றி நுகர்ந்த படியே இருக்கலாம். ஆனால், இதனாலேயே அவர் கள் தங்களைப் படைத்த இறைவனையே மறந்து எப்போதும் ஏகாந்தம் என்று இருக்கத் தொடங்கி விட்டனர். பூசனைகள், புலனடக்கம், தவநெறி, ஒழுக்கத்துடன் திகழ்தல் ஆகியன எல்லாம் பல தேவர்களிடம் நிலை புரண்டு போய்விட்டது.

வலியில்லை. ஆதலால் எது இன்பம் என்றும் சரியாக தெரியவில்லை. பசியில்லை என்பதால், ருசியிலும் கோளாறு.

இன்னொருபுறம், அமுதம் கடைந்த செயலும் அதை ஒரு சார்புப்படுத்திக் கொண்டதும் அவர் களை தேவர்களுக்கு நிரந்தர எதிரிகள் ஆக்கி விட்டது. இன்று வரை, அவர்களால் ஏதோ ஒரு விதத்தில எதிர்ப்பும் அதை எதிர்த்து செயல்படு வதும்கூட வாடிக்கையாகிவிட்டது.

ஒரு வகையில், இப்படி எல்லாம் நடக்கவில்லை என்றால், தேவர்களின் போர் ஆயுதங்கள் துருப்பிடித்தேகூட அழிந்துவிடலாம்... அவர்கள் கணக்கிலும் மெத்தனம், சுயநலம், கடமை தவறல் என்று ஏகப்பட்ட பாவ மூட்டைகள் இருக்கிறதே... அவற்றை இறக்கி வைத்திட போர்க்களம்தானே சரியான இடம்... அங்கு ஏற்படும் தோல்வியும் அதன் வலியும்தான் இவர்களுக்கும் சரியான நிவாரணிகள்.

இப்படி சகலத்தையும் தனது தேர்ந்த ஞானத் தால் உள்ளுக்குள் வைத்து அலசி ஆராய்ந்து

பார்த்த பிரஹஸ்பதி, இந்திரனைப் பார்த்து, "இந்திரா, பயப்படாதே தைரியமாக யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதே முதலில் பெரிய விஷயமாகும். நீ அந்த மகிஷனுக்கு பயந்து யுத்தம் புரிய யோசித்தால், நீ கோழையாகிவிட்டாய் என்று உலகம் கேலி பேசும். ஒருவேளை, யுத்தத்தில் நீ தோற்றால்கூட அது ஒரு வகையில் அழகுதான். சரணாகதி என்று நாம் இறைவனைத்தான் சரண் புகலாம். ஒரு அசுரனிடம்மட்டும்கூடவேகூடாது..." என்று உபதேசமாக செய்யத் தொடங்கிவிட்டார்.

"குருவே... தங்கள் உற்சாக மொழிகளுக்கு நன்றி. அசுரன் பெரும் மாயன். எதிரியை வெல்ல குறுக்கு வழிகளில் செல்லவும் அஞ்சாதவன். அவனை வெல்ல தாங்களும் அதுபோல ஏதாவது உபாயம் கூறிட வேண்டும்" என்றான்.

"மகிஷனை வெல்ல குறுக்கு வழியா? தேவேந்திரனா இப்படி யோசிப்பது? நேரிய விஷயங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒழிந்ததால்தானே அசுரனே வந்திருகிறான். அவனை அழிக்க அவனைப் போன்ற விஷயங்களே எப்படிப் பயன்பட முடியும்?" பிரஹஸ்பதியாகிய வியாழ குரு யோசிக்கத் தொடங்கினார். இறுதியாக, "இந்திரா! வா, பிரம்மதேவரைச் சந்திப்போம். அவரால்தான் இக்கட்டான இந்தச் சூழலில் தேவருலகைக் காத்திட உரிய வழி காட்ட முடியும்!" என்றார்.

ஒருபுறம், அசுரன் மகிஷனும் பிரம்மனை நோக்கியே தவம் செய்தபடி இருக்கிறான். மறுபுறம், இந்திரனும் அவரை நோக்கி புறப்பட, முந்திக் கொண்டதோ மகிஷனின் தவ நெருப்பு!

பிரம்மன் அவன் முன் தோன்றினார்.

"மகிஷா, வேண்டிய வரத்தைக் கேள்!"

மகிஷன் உடனே பரவசமானான். "தேவா... நான் எவராலும் வெல்லப்படக் கூடாது. அதாவது, எனக்கு மரண பயமே கூடாது..." என்று தான் கேட்க நினைத்ததையும் கேட்டான்.

அவன் அப்படியொரு வரத்தைதான் கேட்பான் என்பது பிரம்மாவுக்கும் தெரியாதா, என்ன?

புன்னகைத்தார் பிரம்மா!

5

'சிந்தாமணி சிலாக்லுப்த த்வாராவளி கிருஹாந்தரா கடாஷ வீஷணா பேஷ கமலாக்ஷி சுரங்கரா.'

அன்னை சக்தியானவள் சிந்தாமணி எனும் இல்லத்தில் வசிப்பவள். சிந்தா மணி இல்லம் என்பது அரிய வகை ரத்தி னங்கள் மின்னுகின்ற ஒரு இல்லமாகும். இந்த இல்லத்து வாயிற்கதவுகளில் நவ மணிகளும் பதிக்கப்பட்டு மின்னியபடி உள்ளன. அப்படிப்பட்ட இல்லத்தில் அன்னை கண் விழித்து தங்களைக் காண வேண்டும் என்று தேவமாதர்கள் காத்துக் கிடக்கின்றனர். எனவே, நவரத்தினங் களுக்கு நடுவில் தேவமாதர்கள் சூழ்ந் திருக்க அமர்ந்திருப்பவள், என்பது மேற் கண்ட வரிகளுக்கான எளிய பொருள் விளக்கம்!

மகிஷன் கேட்ட வரத்திற்குப் பதில் தராமல் பிரம்மா சிரித்தது மகிஷனை சற்று அதிரச் செய்தது.

"பிரம்மதேவனே... தவத்திற்குக் கட்டுப்பட்டு காட்சி தந்த நீங்கள், கேட்ட வரத்தை தராமல் சிரிப்பது எதனால்?" என்று சற்று கோபமாவே கேட்டான்.

"மகிஷா... உன் வரத்தை நினைத்தேன். என்னையும் அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது."

"இறவாத வரம் நான் கேட்டதற்கும் தாங்கள் சிரிப்பதற்கும் என்ன சம்பந்தம்?"

"கோபிக்காதே... சிரிப்பு உன் வரத்தின் பொருட்டல்ல. என் சக்தியின் பொருட்டே!"

"நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை."

"புரியும்படி நேராகவே விஷயத்துக்கு வந்து விடுகிறேன். நீ கேட்ட வரத்தை என்னால் தர முடியாது. என் சிரிப்பு வருத்தச் சிரிப்பு, மகிஷா!"

"என்ன இது பேச்சு... மும்மூர்த்திகளில் ஒருவரா இப்படிக் கூறுவது?"

"அதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் நீ கேட்ட வரத்தை தரும் சக்தி அந்த பராசக்தி

ஒருத்திக்கே உண்டு. நான் மட்டுமல்ல... மகா தேவராலும் கூட அந்த வரத்தை வழங்க முடியாது. எனது தாயாகவும் தந்தையாகவும் விளங்கிடும் மாதவனாலும் ஏலாது...”

“ஏன் அப்படி?”

“பிறந்தவை ஒரு நாள் இறந்தே தீர வேண்டும். இதில் விதிவிலக்கு பெற்றவர்கள் தேவர்கள் மட்டுமே... அந்த விதிவிலக்கைக்கூட அவர்கள் ஆதிசக்தியிடம் வரமாகக் கேட்டு பெறவில்லை. பாற்கடலைக் கடைந்து அமிர்தமாய் பெற்றுத்தான் அடைந்தனர்.”

“என்றால், என் தவத்துக்கு உங்கள் பதில்?”

“என் எல்லைக்கு உட்பட்டு நீ எதை வேண்டுமானாலும் கேள். அவ்வளவு ஏன், யாரால்... எதனால்... உனக்கு மரணம் நேரிடும் என்று கருதுகிறாயோ, அதனால் எல்லாம் மரணம் நேராதிருக்க வேண்டும் என்று கூட கேள். தருகிறேன்.”

“சரி, அப்படியே கேட்கிறேன். இந்த உலகில் நான் பெண் இனத்தையே பரிதாபத்துக்குரியதாகத் தான் கருதுகிறேன். பாவம், அவர்கள்! முப்பெரும் தேவியர்கள் எனப்படும் பார்வதி, சரஸ்வதி, லட்சுமி கூட கணவன்மார்களுக்கு கட்டுப்பட்டவர்களாகத்தான் இருக்கின்றனர்.

கயிலையில் பார்வதி தேவியார் பூஜித்தால் தான் அந்த ஈசனுக்கே மகிழ்ச்சி ஏற்படுகிறதாம். பாற்கடலில் கூட லட்சுமி தேவியார் அந்த விஷ்ணுவுக்கு கால் பிடித்து விட்டவளாகத்தான் அமர்ந்திருக்கிறாள். உங்களது தர்மபத்தினியும்கூட உங்களுக்கு கோவில் கிடையாது என்றானவுடன், தனக்கும் தேவையில்லை என்று உங்களுக்கு அடங்கியே நடக்கிறாள்.

எனவே, ஆபத்தில்லாத ஒரே இனம் பெண் இனம்தான். இந்த இனத்துக்கு அன்பு செய்யத் தெரியும் இல்லாவிட்டால், பாசம் காட்டத் தெரியும். அவ்வளவுதான். எனவே, பெண்ணால் அன்றி வேறு யாராலும் எதனாலும் எப்பொழுதும் எனக்கு மரணம் நேரக் கூடாது என்கிற வரத்தை நான் கேட்கிறேன்...”

இப்படி மகிஷன் கேட்டிட, பிரம்ம தேவன் ஒரு விநாடிகூட தாமதிக்கவில்லை. ‘ததாஸ்து...’ என்று

அந்த வரத்தை தந்துவிட்டார். அடுத்த நொடியே அவரது பிரசன்ன ரூபமும் மாயமாகிவிட்டது.

சிலர் வரையில் சில நொடிகள் கூடினாலும் அது பலவித சிக்கல்களில் கொண்டு சென்று விடலாம். படைப்புக் கடவுளுக்கே இம்மட்டில் எச்சரிக்கையாக இருப்பதே சிறப்பானதாக உள்ளது.

மகிஷனும் வரம் பெற்ற மகிழ்ச்சியில் குதிக்கத் தொடங்கிவிட்டான். முன்னைவிட ஆத்திரமும் ஆவேசமும் மூண்டெழுந்திட, "அடேய் இந்திரா... எங்கே இருக்கிறாய் நீ?" என்றபடி அமராவதிப் பட்டணம் நோக்கி நடக்கவும் ஆரம்பித்தான்.

மகிஷன் திரும்பவும் போர் தொடுக்கும் முகமாக கிளம்பிவிட்டதை அறிந்த இந்திரனுக்கும் வயிற்றில் அமிலச் சிறப்பு நிகழ ஆரம்பித்துவிட்டது. பிரம்மதேவரைச் சந்திக்கச் செல்வதிலும் ஒரு தேக்கம்.

ஏற்கெனவே மகிஷனால் பெருத்த சேதம். சொல்ல முடியாத அளவு மனச்சோர்வு... பல தேவர்கள், 'தேவருலகமே வேண்டாம்' என்று மேருமலைப் பக்கமாக பூலோகம் நாடி ஓடிவிட்ட நிலை... இந்நிலையில் மகிஷன் திரும்ப வீறுகொண்டு வந்தால் வெற்றி அவனுக்கே என்று அப்போதே கூறிவிடலாம்தான். ஆனாலும், அது எவ்வளவு பெரிய இழிவு... எத்தனை பெரிய அவமானம்.

இந்திரன் தத்தளிக்க ஆரம்பித்துவிட்டான். அவனோடு சேர்ந்து அக்னி, வாயு, சூரியன், வருணன், சந்திரன், எமன், குபேரன்... என்று அவனது மகா பலிஷ்டர்களும்கூட மிரண்டு போய் நின்றார்கள்.

'எப்பொழுதும் மகிழ்ச்சி... எந்த நாளும் ஆனந்தப் பரவசம்... மனதுக்குக் கவலை என்றால் என்னவென்றே தெரியாத ஒரு உலகுதான் தேவர் உலகம்' என்று இருந்தது. அடியோடு மாறி, 'எங்கும் பீதி... எவரிடமும் அச்சம் உண்டு... அடுத்து என்னாகுமோ என்கிற கேள்விக்குறி... என கிட்டத்தட்ட கர்ம பலன்களை பூமியில் பிறந்து அனுபவித்திடும் மானிடர்களின் அதே நிலைப்பாடு!

இதில் விநோதம் என்னவென்றால், பூமியில் பிறந்தவர்கள் தவத்தால், தேவன் ஆவதற்கு முயற்சிப்பதுதான் மேன்மையான செயலாக இருந்தது... இருக்கிறது! ஒருவன் தன் தபோபலத்தால், தேவனாகிவிட்டால் அவன் முக்தியடைந்தவனாகிறான். அவனை மாய உலகில் எந்தத் துன்பத்தாலும் எதுவும் செய்ய முடியாது. இதுவே நடைமுறை!

ஆனால், மகிஷப் புயல் தேவருலகை ஆட்டிப் பார்க்கவும், தேவர்கள் பூ உலகை நோக்கி ஓடி ஒளியத் தொடங்கிவிட்டனர். அதாவது, ஒரு மகிஷனால் தேவருலகே பூலோகத்தைவிட மோசமான ஒரு உலகம் ஆகிவிட்டது.

இது எவ்வளவு பெரிய கொடுமை?

இந்தக் கொடுமை கண்டு மிக மனம் வருந்திய ஒரு சிலரும் இருக்கத்தான் செய்தனர்... அவர்தான் அமர சபையின் பிரஹஸ்பதியான வியாழ குரு!

குரு பார்க்கக் கோடி நன்மை என்பார்கள். மானிட ஜாதகத்தில் இவரது அமைப்புதான் ஒருவனை குபேரனாக்குகிறது... இல்லையேல், கோவணாண்டி ஆக்குகிறது. பார்வை பலத்தாலேயே பட்டமரத்தைத் துளிர்க்க வைப்பவர்! ஆனால், தேவருலகை எண்ணி மகிஷன் பொருட்டு, இவர் மனமே சலனப்பட்டது. இவர் இந்திரனை ஊக்குவித்து வழிநடத்தியும் பெரிதாகப் பலனில்லை. எனவேதான், பிரம்மதேவனைப் போய் சந்திக்கும் முடிவுக்கு வந்துவிட்டார்.

இந்திரன் சோர்ந்துதான் போனான். மகிஷனிடம் சரணாகதி அடைவதற்கு சண்டை போட்டபடியே இருப்பதுதான் கௌரவம் என்று அவனுக்குத் தெரிந்த போதிலும்... வெற்றி கிடைக்காது என்று தெரிந்து, வெட்டிச் சண்டை போடுவதில் என்ன பலன் என்கிற கேள்வி அவனுக்குள் எழும்பி விட்டதுதான் காரணம்.

ஊக்கப்படுத்த முன்நிற்கும் பிரஹஸ்பதியிடம் திரும்பத் திரும்ப, "அறிவுரைகள் இப்பொழுது பலன் தராது குருவே! மகிஷனை வெல்லக்கூட வழி சொல்ல வேண்டாம். குறைந்தபட்சம் அவனுக்குப் போக்குக்காட்ட, அவனை ஏமாற்ற வழி இருந்தால் கூறுங்கள்!" என்று கெஞ்ச ஆரம்பித்து விட்டான்.

ஏமாற்றுவது, ஏய்ப்பது, ஓடுவது, ஒளிவது, மாய வேலைகள் புரிவது, எந்த நெறிப்பாடும் இல்லாமல் இருப்பது என்பது அசுரர்களின் செயல். இந்திரன் தானும் அப்படி ஆக என்ன வழி என்று கேட்டால் எதைச் சொல்ல?

பிரஹஸ்பதியும் அசரவில்லை.

"அமரேந்திரா... இது நீயாக வரவழைத்துக் கொண்ட துன்பம். மகிஷன் ரம்பனின் பிள்ளை. அவன் பெற்ற வரம்தான் மகிஷனாக மாறி துரத்து கிறது. உனது இந்தப் பதவிக்கு யார் குறிவைத் தாலும் பதவி ஆசை காரணமாக ஒரு முறையே இன்றி அவர்களை அழித்து விடுகிறாய். அம்மட் டில் நீ தவறிய நெறிதான் இப்போது அரக்க வெறி யாக மாறி உன் முன் நின்றுகொண்டு இருக்கிறது. இப்போதுகூட அதை யுத்த களத்தில் நேருக்கு நேர் நாணயமாக சந்தித்து அனுபவித்து சாதிக்காமல், குறுக்கு வழியையே தேர்வு செய்யப் பார்க்கிறாய். மகிஷன் புதிதாக பிரம்மனிடம் வரம் வேறு பெற்றுவிட்டான். இப்படியொரு நிலையில், உனக்கு வழிகாட்ட என்னால் முடியாது. அந்த பிரம்மதேவனிடம் போய் நில். அவர் என்ன சொல்கிறார் பார்ப்போம். நானும் உடன் வருகிறேன்..." என்று சத்தியலோகத்துக்கு இந்திர சபையையே இடம் பெயரச் செய்துவிட்டார்.

சத்தியலோகத்துள் இந்திரன் புகுந்த அதே நேரம்.. அங்கே அமராவதிப் பட்டணத்துக்குள் மகிஷன் தன் படையுடன் நுழைந்துவிட்டான். அழகுக்கு இலக்கணம் படைக்கும் அமராவதிப் பட்டணம், அவன் எதிரில் ஒரு உபதேவன்கூட இல்லாத நிலையில் வெறிச்சோடிக் காணப்பட்டது.

குறிப்பாக, இந்திர சபையில் இந்திர சிம்மாசனம் மகிஷனைப் பார்த்தது வெறித்தது. அதன் அருகே சென்று தன் கதாயுதத்தால் அந்த சிம்மாசனத்தை அடித்த நொடி, நொறுங்கித் தூள் தூளாகிப் போனது அது! மற்ற அவனது சகாக்கள் ஏனைய இந்திர சபையின் மகா சனங்களை எல்லாம் அடித்து நொறுக்கத் தொடங்கினர்.

ரம்பையும் ஊர்வசியும் ஆடிப்பாடிட, சதாசர்வ காலமும் இசை முழக்கமும் இந்திரனுக்கான புகழுரைகளும் மட்டுமே கேட்ட இடம், யானை புகுந்த பாத்திரக் கடை போலாகிவிட்டது.

அதன் எதிரொலி அங்கே பிரம்மாவிடமும் எதிரொலித்தது.

"தேவர்களே... உங்களின் இக்கட்டான நிலை எனக்கும்புரிகிறது. ஒரு துன்பம்என்றுவந்தால்தான் உங்களுக்கே நான் தேவைப்பட்டிருக்கிறேன். இந்திரா... உல்லாசமாக வாழ்வதற்கு மட்டுமே தேவபிறப்பு என்று எல்லோரும் எண்ணுமளவிற்கு நீ நடந்து கொண்டு விட்டாய். தவன்தான் தேவ னாகிறான். தவம் என்றால் புலனடக்கம்! அதற்கும் உனக்கும் - உன் கூட்டத்தவர்க்கும் சம்பந்தம் இருப்பதாகக் கூறமுடியுமா?

ஆனந்தம் என்பது அருள்வழி வருவதாக இருக்க வேண்டும் என்பது உனக்குத் தெரியாதா? அதை நீ மருள் வழியாக அனுபவித்ததன் விளைவு இது!

நன்றாக அனுபவியுங்கள் என்று உங்களைக் குத்திக் காட்டுவது என் நோக்கமல்ல. உண்மை யான காரணத்தை உலகம் அறிய வேண்டும். தேவ ராயினும் மானிடராயினும் நெறி பிழன்றால், வெறி வசம் சிக்க நேரிடும் என்பது தெரியவேண்டும். அதற்கே இதைக் கூறினேன்" - என்று பிரஹஸ்பதி போலவே பிரம்ம தேவனும் உபதேசிக்கவும், அவ்வளவு தேவர்களும் அப்படியே உடைந்து விட்டனர்.

பிரம்மாவுக்கும் உடைப்பது நோக்கமல்லவே!

"கவலையை விடுங்கள்... நான் படைப்புக்குத் தான் அதிபதி. காத்து ரட்சிக்கும் திருப்பணி திருமாலுடையது. எல்லோரும் வைகுண்டம் செல் லுங்கள். மற்றதை அவர் பார்த்துக் கொள்வார்" என்றார்.

இப்படி மாதவனை நோக்கி இந்திரக் கூட் டத்தை திருப்பி அனுப்பும்போதே பிரம்மதேவ னுக்கு ஒரு உண்மை நன்றாகத் தெரியும். அந்த மாதவனாலும் மகிஷனை எதுவும் செய்ய முடியாது என்கிற சத்தியம்தான் அது!

பெண்ணாலன்றி எவராலும் மரணமில்லை என்கிற வரத்தைத் தந்தவருக்கா தெரியாது? பின் எதன் பொருட்டு அப்படி நடந்து கொண்டார்?

பார்க்கத்தானே போகிறோம்?

திருப்பாற்கடல்!

சேஷாத்திரிநாதனாக அந்தப் பரந்தாமன் பள்ளி கொண்டிருக்க, கால்மாட்டில் மகாலட்சுமி! மார்பி லேயே அவளுக்கு ஒரு இடத்தை அந்த மாத வன் ஒதுக்கிவிட்டபோதிலும், திருவடி நிழல் தான் பெரும் சிறப்பு உடையது என்று உணர்ந் திருந்த மகாலட்சுமி, மாலவன் திருவடி அருகே அமர்ந்திருந்தாள். அதை மென்மையாகப் பற்றி விட்டபடி இருப்பது என்பது, செல்வமானது சேர்ந்து சேர்ந்து விலகுவது போலத்தான் இருந்தது.

உலகையே தன் மோனத்தவத்தாலும் பரம கருணையாலும் ரட்சிக்கும் அந்தக் கருணாமூர்த் திக்கு தனது உடம்பே பாயாகிப் போனதில் ஆதிசேஷனிடம் ஒரு அலாதி மகிழ்ச்சி.

அதிலும் உயிர் திரவமாகிய பாலானது கடலாகப் பெருகிக் கிடக்க, அதன் மீது ஆதிசேஷன் மிதந் திருக்க, அதன் மேல் மாலும் சயனித்திருப்பது என் பது ஏராளமான உட்பொருளை கொண்ட ஒரு விஷ யம்.

அப்படிப்பட்ட பாற்கடலில் ஒரு பெரும் அதிர்வு அதன் பொருட்டு மெல்ல நீலநயனங்களைத் திறந்து கொண்டு மாலும் பார்த்திட எதிரில் பிரஹஸ்பதியின் தலைமையில் இந்திரனின் சபைக்கூட்டம்!"

"ஜனார்த்தனா... பக்தவத்சலா...

பரமதயாளா... மஹாப்பிரபோ...

மாதவா... கேசவா... மாலே... என்று தேவ உதடுகளிடம் ஒரே அபயக்குரல்!

மாலின் சுழித்த உதட்டிலும் ஒரு அர்த்த புஷ்டியுள்ள புன்னகை.

"யாரது... இந்திராதி தேவர்களா? அடடே என்ன ஆச்சரியம் இது? இத்திருப்பாற்கடல் நினைப்புகூட தங்களுக்கு இருக்கிறதா? ஸ்ரீதேவி... பார்த்தாயா இந்தக் காட்சியை! உனக்கே ஆச்சரியமாக இல்லை?"

- திருமாலும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிற ரகமாகத்தான் அவர்களை எதிர்கொண்டார்.

"பெருமாளே...! எங்களை மன்னியுங்கள்! 'தேவமும் மமதையுறும்... அதன் மதியையும்

இருள் சூழ்ந்திடும்' என்பதற்கு சான்றுகளாக நாங்கள் நின்றபடி இருக்கிறோம்.

இன்று தேவருலகமே அசுர உலகமாக மாறி விட்டது. இங்கே சரண் புகுந்திட வந்தவர்களன்றி, மற்றவர்கள் மேருமலைக்கும் கீழே பூலோகம் நாடி ஓடியே சென்றுவிட்டனர். அந்த அளவுக்கு அரக்க மாயை தேவருலகை ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிட்டது.

பெரும் இக்கட்டான இத்தருணத்தில் காக்கும் கடவுளே... எங்களையும் தங்களது பெரும் கருணை காத்து ரட்சித்திட வேண்டும்" - என்ற படி இந்திரன் நெடுஞ்சாண்கிடையாக கீழே விழுந்தான். அவனைத் தொடர்ந்து தேவருலகமே திருப்பாற்கடலின் திருத்தளத்தில் விழுந்து வணங்கியது.

அபயம் என்று வந்துவிட்டால் அனுக்கிரகம் என்பதே அனந்தநாராயணனின் செயல்.

இத்தனை தேவர்கள் தங்களின் பிரதாபங்கள் கீர்த்தி பற்றி எண்ணாமல் காலில் விழும்போது சும்மா இருக்கலாமா?

"நல்லது அமரேந்திரா... உன் பின்னால் நான் இருக்கிறேன்... நீ மகிஷனோடு திரும்பவும யுத்தம் செய்... மகிஷன் உணர்ந்துகொள்ள வேண்டியது இன்னமும் நிறையவே உள்ளது!" என்றார் அந்த மாதொரு மார்பர்.

அதைக் கேட்ட இந்திரனுக்கு தான் திரும்பப் பிறந்து வந்ததுபோல ஒரு புத்துணர்ச்சி.

அவனுக்கு மட்டுமா?

தேவர்கள் அவ்வளவு பேருக்கும்தான்!

விஷயம் இந்திரசபையில் மதுவருந்திக் கொண்டிருந்த மகிஷன் காதுக்குப் போனது.

"ப்ரபோ.... இந்திரன் ஓடி ஒளியவில்லை. மும்மூர்த்திகளில் ஒருவரான மகாவிஷ்ணுவின் சகாயத்தை கேட்டுப் பெற்று அவரையும் தங்களோடு சேர்த்துக் கொண்டு யுத்தம் புரிய வந்து கொண்டிருக்கிறான்" என்று ஒரு அசுரபதி வந்து கூறவும், அவனது எருமை விழிகளில் அனல் காந்தியெடுக்கத் தொடங்கிவிட்டது. மூச்சுக் காற்றில் எரிமலைப் பீறிடல் போல வெப்பம்.

"பாவம், அந்த மகாவிஷ்ணு... எனது வரசித்தி பற்றி தெரியவில்லை. இல்லை, தெரிந்தும் மோத வருகிறாரா?" என்று கேட்டுவிட்டு, கதையை ஒரு சுழற்று சுற்றினான். அதே சமயம் அசுரபதியும், "மகாப்ரபுவே... எதற்கும் ஜாக்கிரதை... மகா விஷ்ணுவும் ஒரு மாயாவி!" என்றான்.

"அந்த மாயாவிக்கு என் மாயத்தாலேயே பதில் சொல்கிறேன்..." என்று கர்ஜித்த மகிஷன், தானறிந்த 'சாம்பரீ' எனும் மாயாவிநோதத்தை நிறைவேற்றத் தொடங்கினான். அதன் காரணமாக அதுவரை ஒன்றாக இருந்த மகிஷன் ஓராயிரம் மகிஷனாகி, பிறகு லட்சம் என்கிற எண்ணிக்கைக்குப் பெருக ஆரம்பித்தனர்.

ஒரு மகிஷனை வெல்லவே வழி தெரியவில்லை. இதில் இத்தனை மகிஷர்கள் தோன்றினால்...?

6

"லீலா பாஷண ஸம்ஸோல கமலாஸந வல்லபா யாமளோபநிஷன் மந்த்ர விலபத் சுகபுங்கவா..."

'ருத்ரயாமளம் என்பது அம்பாள் குறித்த ஒரு ரகசிய மந்திரம். கிளிகள் தான் கேட்டதை எப்படி திரும்பத் திரும்ப சொல்லுமோ... அப்படி, அம்பாளை உபாசிப்பவர்களின் அந்த மந்திர மொழிகள் அவளது சன்னிதானத்தில் சதா ஒலித்துக் கொண்டேயிருக்கும்...' என்பது இதன் பொருள்.

ஒன்றுக்கு நூறாக, பின் ஆயிரமாக மகிஷனின் ரூபங்கள் பார்க்குமிடமெல்லாம் தோன்றத் தொடங்கவும், யுத்தகளத்தில் வந்து நின்ற இந்திரனுக்கு தலையைச் சுற்றத் தொடங்கிவிட்டது.

அவ்வளவு மாயா விநோதம்! பல பட்டைகள் உள்ள கண்ணாடியில் ஒன்றேயான பிம்பம் அவ்வளவு பட்டைகளிலும் தெரியும். அதுபோல ஒன்றேயான மகிஷனும் பிரதிபலித்தான்.

ஒரு மகிஷனை எதிர்க்கவே திராணியில்லாமல் தான் வரிசையாக முதலில் வியாழ ருரு, பின்னர் பிரம்மா, அதற்கும் பின்னர் மகாவிஷ்ணு என்று

இந்திரனும் அவன் கூட்டத்தவரும் சென்றனர். விஷ்ணுவும் காப்பதாக கூறி யுத்தத்தை தொடங்கச் சொல்லிவிட்டார். ஆனால், தொடக்கமே இப்படி படு மிரட்டலாக இருந்தால், இந்திரன் என்னதான் செய்வான்?

விழிபிதுங்கி நின்றான். அவனை சாப்பிட்டு விட்டனர் மற்ற அவன் பலிஷ்டர்கள். இப்படிப் பட்ட சிக்கல்களை எல்லாம் அவர்கள் கற்பனை செய்துகூட பார்த்ததில்லை என்னும் அளவுக்கு இருந்தது மகிஷனின் இந்த சாம்பரீ மாயை!.

இதற்கு சக்தியும் ஒரு முகூர்த்த நாழிகைதான்!

அதன்பின், நெருப்பும் புகையானது எப்படி பரவப் பரவ அழிந்து போகிறதோ அப்படி இந்த சொரூபங்களும் அழிந்து போய்விடும். ஆனால், அந்த ஒரு முகூர்த்த நாழிகை நேரம் போதுமே தேவர்களை கலங்கடித்து நாலாபுறமும் ஓடச் செய்ய...!

அவர்களும் ஓடத் தொடங்கினர்.

இனி, தேவலோகமே வேண்டாம். பாதுகாப் பானது, பரம பவித்ரமானது, சிரேஷ்டமானது, மகிஷனால்கூட பெரிதாக சீண்டப்பட முடியாதது மேருமலை மட்டும்தான்... எனவே, அங்குள்ள இண்டு இடுக்குகளில் புகுந்து தப்பிப்போம் என்று ஓடி ஒளிந்தனர்.

இப்படி எல்லாம் நடக்கவா அந்த மகாவிஷ்ணு 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொன்னார்! தேவர்களுக்கு வாக்குறுதி அளித்துவிட்டு பாற் கடல் படுக்கையில் அனந்த சயனத்தில் அவர் கிடந் தால் என்ன அர்த்தம்?

மகாலஷ்மியை அது மிகவே உறுத்தியது.

கால் மாட்டிலேயே அமர்ந்திருப்பது முக தரிசனத்துக்காக மட்டுமா என்ன... இதுபோன்ற நேரங்களில் உறக்கம் கலைக்கவும்தானே? லக்ஷ்மியும் தாமோதரனை உசுப்பினாள்.

ப்ரபோ, இது என்ன நீடு துயில்? துயிலவேண்டிய நேரமா இது? தேவர்கள் நம் குழந்தைகள்... அவர் கள் சிதறி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மகிஷன் கர்ஜிப்பது இங்கே பாற்கடல் வரை கேட் கிறது. உங்கள் காதில் மட்டும் விழவில்லையா,

என்ன? விழித்தெழுங்கள்... நம் குழந்தைகளைக் காத்திட புறப்படுங்கள். வாக்களித்துவிட்டு அப்படி என்ன தூக்கம்? என்று அந்த விஷ்ணு பத்தினி ஒரு செல்லக் கோபம் காட்டினாள்.

பத்மநாபனும் கண் மலர்ந்தான். அரு அரைச் சிரிப்பும் சிரித்தான்.

"என்ன சிரிப்பு இது?"

"சிரிக்காமல் என்ன செய்வது தேவி? உனது கோபத்தை நினைத்தேன்... சிரிப்பு வந்துவிட்டது..."

"ஏன், எனது கோபத்தால் ஏதும் நடவாது என்பது உங்கள் முடிவா?"

"நமக்குள் எதற்குள் தாக்கம்? உன் தாயுள்ளத் துடிப்பை நான் பாராட்டவே விரும்புகிறேன். அதே சமயம், மகிஷனை அழிக்கும் சாத்தியம் என்னிடம் இல்லை! என்பது உனக்குத் தெரியாதா?"

"பிறகெதற்கு தேவர்களிடம் 'நீங்கள் போங்கள்... நான் பார்த்துக் கொள்கிறேன்...'" என்றீர்கள்?

"பார்க்கத்தான் போகிறேன், இதோ, எனது சக்கராயுதம் என் சார்பாக புறப்பட்டுவிட்டது பார்."

மகாவிஷ்ணு கூறிய நொடி விஷ்ணுவின் வலக்கரத்தில் இருந்து திருஆழிப்படை எனப்படும் சக்கராயுதம் ஒரு வேகமான ரதச் சக்கரம் போல சுழன்றபடி விண்ணில் ஓடத் தொடங்கியது.

மகாலக்ஷ்மியும் அதைக் கண்டு மகிழ்ந்தாள்.

"இது இந்த மகிஷன் கதையை முடித்து திரும்பினால் மகிழ்ச்சியே..." என்றாள். மாதவனிடம் திரும்பவும் புன்னகை.

"இந்தப் புன்னகைக்கு பொருள்?"

"நீ சக்கராயுதம் பற்றி அறியாதவளா, தேவி?"

"நான் அறியாதவளா... சரிதான், தங்களின் திவ்ய சான்னித்யமே அதில்தானே உள்ளது."

"என்றால், நானாகிய அது எப்படி மகிஷனை அழித்திட முடியும்?"

"புரிகிறது, பெண் இனத்தாலன்றி வேறு யாராலும் தனக்கு மரணம் நேரக் கூடாது என்று மகிஷன் வரம் பெற்றுவிட்டதால், தங்களால் இயன்றபோதிலும் அந்த வரசித்தி காரணமாக தாங்கள் ஏதும் செய்திடத் தயாரில்லை. ஒரு

வகையில், இது நியாயமே... அப்படி இருக்க சக்கராயுதத்தை அனுப்பிய காரணம்?"

"அவனை நேரடியாக அழிக்கத்தான் வழியில்லை அவனது மாயா சொரூபங்களை அழிக்கலாம் அல்லவா?"

"ஓ... சக்கராயுதம் அதர்வணாதி மாயங்களை உடைத்தெறியும்; அற்ப சக்திகள் அழிந்துபோகும் என்பதை மீண்டும் நிரூபிக்கத்தான் இந்த ஏவலா?"

மகாலக்ஷ்மி இங்கே கேட்டுக் கொண்டிருந்த நொடி சக்கராயுதம் புயல்வேகத்தில் சுற்றிச் சுழன்று மகிஷனின் சாம்பரீ மாயையின் பிரதி பிம்ப சொரூபங்களை எல்லாம் தவிடுபொடியாக்கத் தொடங்கியது.

சில நிமிடங்களில் அவ்வளவு சொரூபங்களும் மறைந்து ஒழிந்து போயின. சக்கராயுதமும் தன் பணி முடிந்து நல்ல பிள்ளையாக நாராயணன் நுனிக்கை மீது வந்து அமர்ந்து கொண்டது.

ஓடி ஒளிந்துகொண்ட தேவர்கள் நீங்கலாக மற்றவர்கள் இதைப் பார்த்து புதிதாக ஒரு தெம்பினைப் பெற்றதுபோல ஆரவாரம் செய்யத் தொடங்கினர்.

இந்திரனுக்கும் அது புதுத் தெம்பை அளித்தது.

ஆனால், மகிஷன் என்ன அவ்வளவு ஏமாளியா?

மாயத்துக்கு மாயத்தாலேயே அந்த மாயாவி விஷ்ணு பதிலளித்துவிட்டான். அதுவும், மகிஷமாக இருக்கப் போய் சுலபமாக பதிலளித்துவிட்டான். இதுவே அந்த தேவியின் சிம்ம ரூபமாக இருந்தால் என்ன செய்வானாம்?

கேள்வியோடு சிம்ம வடிவம் எடுக்க தாக்க ஆரம்பித்தான் மகிஷன். ஆனால், இந்த முறை சாம்பரீயை பயன்படுத்தி மாயரூபங்களை உருவாக்கவில்லை. நேராகவே வைகுண்டம் நோக்கி புறப்பட்டுவிட்டான்.

அவன் வைகுண்டத்தை எட்டும் முன்பே மகிஷனுக்கு நாரதர் மூலமாக செய்தி ஒன்று வந்தது. அதாவது, 'ஹிரண்யனை வதம் செய்தபோது, கை கொடுத்தது, சிம்மரூபமே. அது மட்டுமல்ல, நரசிம்மம் என்கிற நாமம்

நாரணனுக்கு கிட்டிட காரணமாக இருந்ததும் சிம்ம சொரூபம்தான். எல்லாவற்றுக்கும் மேலாக, அது லோக நாயகியான ஆதிசக்தியின் வாகனம். இப்படி பவித்ரமானவைகளுக்கு காரணமாய் இருந்த சிம்மத்தை எதிர்த்து யுத்தம் செய்ய மகாவிஷ்ணு தயாரில்லை. மகிஷன் மகிஷனாக வரட்டும் பார்க்கலாம்' என்று கூறிவிட்டார் என்னும் அந்த செய்தி மகிஷனை குதிதாளம் போடவைத்துவிட்டது.

"அந்த விஷ்ணு பயந்துவிட்டான்... இந்த காரணங்கள் எல்லாம் உளறல். இந்த சிம்ம ரூபம் ஒன்றும் மகிஷ ரூபத்தைவிட உயர்ந்ததுமல்ல. இப்படிச் சொன்னதற்காகவே அந்த சிம்மத்தை ஒருகை பார்க்கிறேன். இப்போது மகிஷனாகவே தேவர்களை ஆட்டிப் படைப்பேன்..." என்று மகிஷனும் கூறினான். அவன் அப்படி கூறவேண்டும்; சிம்மரூப நாயகியான அந்த ஆதிசக்தி நோக்கி அவன் திரும்ப வேண்டும் என்று திட்டமிட்டுத்தானே நாராயணமூர்த்தி அப்படிச் செய்தார்.

மகிஷனும் மனதுக்குள் சிம்மத்தை ஒழிப்பது என்று குறிவைத்துவிட்டான். அப்படியே அதை இறுதியாக வைத்துக் கொள்வோம் என்கிற முடிவுக்கு வந்தவனுக்குள் இந்திரனின் பெருஞ்செல்வங்களான காமதேனு, கற்பகவிருட்சம், உஜ்ஜை சிரவஸ் என்னும் பாற்கடலில் தோன்றிய குதிரை, ஐராவதம் என்கிற பட்டத்து யானை என்று எல்லாமே அவனுக்குள் வரிசையாக நினைவுக்கு வந்தன. அடுத்த நொடியே இந்திரலோகத்துக்குப் புறப்பட்டு விட்டான். அவன் தன்னை நோக்கியே திரும்ப வருவது கண்டு இந்திரன் இதற்கு மேலும் தாங்க முடியாது என்பதுபோல ஓட்டம் எடுக்கத் தொடங்கினான். ஐராவதம் கூடஓடப் பார்த்தது. முதலில் அதைப் பார்த்து ரசித்து சிரித்த மகிஷன், பின் ஒரே தாவலில் அதன் மேல் ஏறி அமர்ந்து விட்டான். இந்திரன் ஏறி பவனி வரும் வெள்ளை யானை... பூவுலகில் பல நூறு ஆண்டுகள் ஈசனை மலர் கொண்டு துதித்து சாபவிமோசனம் பெற்ற தேவகஜம் இப்போது மகிஷன் அடிமையாகி போனது. ஐராவதமே அகப்பட்ட பிறகு மற்றவை எம்மாத்திரம்? தப்பி ஓடிவிடலாம் என்று பார்த்த உஜ்ஜை சிரவஸை பிடித்து, அவனது சேனாபதிகள் இழுத்து வந்து நிறுத்தினர். மகிஷன் மறுகணமே

அதன் மேல் ஏறிக் கொண்டான். அதை இந்திர லோகம் முழுக்க ஓட ஓட விரட்டினான். இறுதியாக, இந்திர சபையை அடைந்து இந்திராசனத்திலும் அமர்ந்தான்.

அன்று ரம்பன் இந்த வரத்தைத்தானே பிரம்மனிடம் கேட்டிருந்தான். அந்த வரம் இறுதியாக பலித்தேவிட்டது. ஒருவேளை இப்படி கொடுத்து விட்ட ஒருவரம் பலிக்க வேண்டும் என்பதற்காகவே இப்படி எல்லாம் நடந்ததோ என்கிற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

பாவம் இந்திரன். அவனைவிட பாவம், அவனது பலிஷ்டர்கள்!

மொத்தத்தில் தோற்கக்கூடாதவர்கள் தோற்று விட்டனர். உயிருடன் இருப்பது மட்டும்தான் அவர்களின் சிறப்பம்சம்! மற்ற எல்லாமே போய் விட்டது. வியாழ குருவால் உபதேசம்தான் செய்ய முடிந்தது. பிரம்ம தேவனால் வழிகாட்டத்தான் முடிநந்தது. மகா விஷ்ணுவாலோ பெரும் நெருக்கடியை சிறிய நெருக்கடியாக்க மட்டுமே முடிந்தது.

அதர்மம் தற்காலிகமாக வெற்றிபெற்றுவிட்டது.

கூர்ந்து பார்த்திடும்போது, பல நுட்பமான உண்மைகள் தெரிய வருகின்றன. நேர்மையற்றவர்கள், அற்ப சுகபோகிகள், வன்முறையாளர்கள் என்று பலவிதமாய் பார்க்கப்படுகிற அசுரர்கள் தங்கள் இயல்பில் இருந்து மாறி தவம் செய்வதும், ஒன்றை அடைந்திட அதற்காகவே போராடுகின்றவர்களுமாக ஆகிவிடும்போது, அவர்களை நோக்கி வெற்றி வேகமாக சென்று சேர்கிறது.

அதுவே, நேர்மையானவர்கள், அன்பானவர்கள், அருளாளர்கள் எனப்படும் தேவர்கள் தங்கள் இயல்பில் இருந்து சற்று மாறி எப்போதும் சுக போகம், ஏகாந்தம், ஆட்டம்பாட்டம் மற்றும் குறுக்கு வழிகளில் நாட்டம் கொள்ளும்போது அவர்களை திரும்பவும் வழிக்கு கொண்டுவர இது போன்ற சோதனைகளை அவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது..

இது, மானுட சமுதாயம் முழுவதும் அறிந்தாக வேண்டிய ஒரு அடிப்படை உண்மை!

இந்திரனும்கூட இவ்வேளையில் தான் தன் தவறை உணர்கிறான். ரம்பன் வரையில் தான்

செய்த தவறு, இந்திர பதவிக்கு யார் முயன்றாலும் அவர்களை தடுத்து நிறுத்திய கயமை, இந்திர சபையில் வியாழ குரு வந்த போது, அவரை வரவேற்காமல் ரம்பா, ஊர்வசி, மேனகையின் நாட்டியத்திலும் மெய்மறந்திருந்தது என்று அவனுக்குள் வரிசையாக தனது தவறுகள் நினைவுக்கு வருகின்றன.

அதன் விளைவுதான், ஒரு மகிஷன் வளர்ந்து வந்து இன்று தேவருலகமே திண்டாடிவிடக் காரணம். இப்படி ஒரு நிலையை உணர்ந்த பின்னும் வருந்தாவிட்டால் என்ன பயன்?

இந்திரனும் வருந்தினான். தனது மகாபலிஷ்டர்களான வருணன், அக்னி, வாயு, எமன், நிருதி, மற்றும் சப்த கிரகாதிபதிகளுடன் கூடி ஆலோசிக்கத் தொடங்கினான்.

'இந்திரலோகத்தில் அசுர ஆட்சி ஆரம்பமாகி எங்கு பார் மகிஷக் கொடிதான் பறக்கிறது. இதை நீடிக்க விடுவது பேதமை. எப்பொழுது மனம் தவறை உணர்ந்து விழித்துக் கொண்டுவிட்டதோ, அப்பொழுதே நல்ல காலம் ஆரம்பமாகிவிட்டது என்பதுதான் உண்மை. எனவே, நாம் இப்படியே ஒளிந்தும் ஓடியும் வாழ்வை விடுத்து மீண்டும் பழைய பொலிவைப் பெற என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம். எப்போதும் நமக்கு மும்மூர்த்திகளே முதல் துணை. அதிலும், பிரம்மதேவர் நம்மில் ஒருவர் போன்றவர். அவரிடம் சென்று சரண் புகுவோம்' என்று திரும்பவும் அவர்கள் அவ்வளவு பேரும் சென்று பிரம்ம தேவன் முன்பு நின்றனர்.

பிரம்மா இம்முறை எந்த உபதேசமும் செய்யவில்லை.

"வாருங்கள்... உங்களுக்காகவே காத்திருக்கிறேன். நாம் இந்த முறை அந்த மகாதேவனை சென்று சேர்வோம்..." என்று கயிலை நோக்கி அவர்களை வழி நடத்தினார்.

ஆனால், அந்த கயிலைநாதனோ, "வரங்களை தந்து விடுவதில்தான் நான் விசேஷன். அதன் அபாயங்களை வேரறுப்பதில் நாரணனே விசேஷமானவர். அவரே முக்கால உணர்வு நிலைகளோடு எதையும் செய்பவர். மகிஷனின் வரசித்தி, பெண்

ணால்தான் அவனுக்கு அழிவு போன்ற சகலத்தை யும் உணர்ந்த நிலையில் மகிஷனை முன்பே அவர் சிம்மத்தின் பொருட்டு திசை திரும்பிவிட்டவர். எனவே எப்பொழுதோ அந்த மகிஷன் அழிந்திட விதை போட்ட நாராயணனை நீங்கள் மட்டுமல்ல. நானும் உங்களுடன் வந்திட அனைவருமாக நாடிடுவோம். மற்றதை அவரே பார்த்துக் கொள் வார்" என்று அவர்களை அழைத்துக் கொண்டு ஸ்ரீவைகுண்டம் புறப்பட்டார்.

வைகுண்டத்தில் திருமாலின் முகத்தில் அனைவரும் வருவதை அறிந்து ஒரு திவ்யமான புன்னகை!

7

'தூர்வாதள ச்யாமரூபா தூர்வாரமதவிஹ்வலா
நவகோரக ஸம்பத் ஸ்ரீகல்பகாரண்ய குந்தலா'

'அம்பிகை பசுமையான ரூபமும் மனமும்உடையவள். அதேபோல, அனை வரையும் காத்து ரட்சிக்கும் பெருமித உணர்ச்சியை எப்போதும் தன்னுள் கொண்டிருப்பவள். அடர்வான தன் கருங் கூந்தலில் மணமுள்ள மல்லிகை சூடி கண்களுக்கு இனிதாக காட்சி தருபவள்' என்பது இந்த துர்கா சஹஸ்ரநாம வரிகளுக்கான பொருளாகும்!

வைகுண்டத்தில் நாராணன் முகத்தில் அனைவரும் வருவது குறித்து ஒரு மாயப்புன்னகை மட்டுமல்ல. ஒன்றுமே அறியாதவர்போல அப்படியே கண்களை மூடிக்கொண்டு தனது யோக நித்திரையை தொடரவும் செய்துவிட்டார்.

மகாலக்ஷ்மியிடம் அதைப் பார்த்து ஒரு சின்ன திகைப்பு. தேவருலகமே திரண்டு வந்து கொண்டிருக்கிறது... அவர்களுடன் பிரம்ம மூர்த்தியும், கைலாயநாதனான சிவபெருமானும் சேர்ந்தே வைகுண்டம் நோக்கி வருவது என்பது எத்தனை பெரிய விஷயம்! இப்படியிருக்க, இங்கே இவர் இப்பொழுது பார்த்து நீடுதுயிலில் மூழ்க விரும்புவது எந்த வகையில் சேர்த்தி?

மகாலக்ஷ்மியின் கேள்வி குழப்பமாக விரிந்தது. கூடவே அவரை நன்கு புரிந்தவள் என்னும் விதத்தில் நிச்சயம் இதன் பின்னால் ஒரு சூட்சும காரணம் இருக்கும் என்றும் எண்ணினாள். ஆனாலும், மனம் அலை பாய்ந்தது. தனது குழப்பத்தை மனதுக்குள்ளேயே அந்த பரமாந்தமனிடம் விண்ணப்பிக்கிறாள்.

ம்ஹூம்... மாலவனிடம் அசைவே இல்லை.

மாலவனுக்கு மூன்று கோலங்கள்! நின்ற, அமர்ந்த, சயனித்த என்று முக்கோலங்களை ஆழ்வார் பெருமக்கள் அனுபவித்து பாடியுள்ளனர். அதிலும், சயன கோலம் பெரும் உட்பொருள் உடையது. ஆழ்ந்த தத்துவச் சிறப்பு கொண்டது.

பொதுவாக, மனிதர்கள் உறங்கிடும்போது ஓய்வு எடுப்பதாகவும், ஒரு வேலையும் செய்யாதவராகவும் செயலற்று இருப்பதாகவும் பொருள் கொள்வோம். ஆனால, உண்மை வேறு.

தூங்குவது என்பதும் ஒரு செயல்தான். அது சாதாரண செயல் அல்ல. ஒப்புயர்வற்ற செயல்! தூங்கும் போதுதான் நாம் புதுப்பிக்கப்படுகிறோம். நம் உடல் நலன் சீராகிறது. உடலின் உள்ளுறுப்புகள் தங்களை சுத்திகரித்துக் கொள்வதும், பலப்படுததிக் கொள்வதும் நாம் தூங்கும்போதுதான். தூங்காமலே இருந்தால் என்னாகும் என்பதை கண் விழித்துப் பார்த்து தெரிந்து கொள்ளலாம். உடலின் எரிசக்தி மிக அதிகமாக செலவாகி, பெரும் களைப்புக்கு ஆட்பட்டு, மூளைக்கு செல்லும் பிராணவாயுவும் பெருமளவில் தடைபட்டு, எண்ணங்கள் குழம்பிப் போய், 'நாம் யார்... நம் பெயர் என்ன... நாம் எங்கிருக்கிறோம் என்பதெல்லாமும் மறந்து போவது தூங்காதபோது நிகழ்கின்றவைகளாகும்.

இப்படி தூங்குவதற்கு பின்னே பல அரிய ரகசியங்கள் உள்ளன. எல்லோருக்குமே தூங்குவது என்பதும் மிகப் பிடித்தமான ஒன்றுதான். ஆனால், அளவோடு தூங்கி, அளவோடு செயலாற்றுதல் என்பதுதான் நம் வாழ்க்கையின் பலவிதமான நலன்களுக்கு தேவையாக உள்ளது.

இப்போது மகாவிஷ்ணுவின் உறக்கத்துக்குள் புகுவோம். விஷ்ணுவின் உறக்கம் என்பது நம்

பார்வைக்குத் தான் உறக்கம். உண்மையில் அதற்கு யோக நித்திரை என்று பெயர். யோகம் என்கிற சொல்லுக்கு அதிர்ஷ்டம். உடலுக்கான பயிற்சி என்று நாம் பலவாறு பொருள் கொண்டிருக்கிறோம். உண்மையில் யோகம் என்பதற்கான பொருள் 'சேர்க்கை' என்பதாகும். ஒரு விதை முளைத்து மரமாதிறது. மரமாகும் முன் அது ஒரு செடியாக இரந்துதான் மரமாகிறது. அதை வளர்ச்சி என்று குறிப்பிடுகிறோம். அதன் விளைவாக, பஞ்ச பூத சேர்க்கை ஏற்பட்டு, தண்டு பாகம் தோன்றி... கிளைகள், இலைகள், பூ, பழம் என்று தோன்றுகின்றன நம் பார்வைக்கு அது தோன்றுகிறது. உண்மையில்... அது, அத்துடன் சென்று சேர்கிறது என்பதே உட்பொதி.

நாம் உறங்கும்போதும் நம்முள் பல விஷயங்கள் வந்து சேர்கின்றன. சேரக் காரணமாய் அமைதியாக ஒரு இயக்க சக்தி நாம் உறங்கும்போது நடந்தபடியே இருக்கிறது.

மகாவிஷ்ணுவின் யோகநித்திரையிலும் சேர்க்கைதான் நிகழ்கிறது. எப்படிப்பட்ட சேர்க்கை தெரியுமா? உலக இயக்ககதி எனும் சேர்க்கை!

இந்த இயக்ககதி எப்படிப்பட்டது என்பதை விளங்கிக்கொள்ள நாம் ஈசனிடம் செல்ல வேண்டும் அவனது ஆனந்தத் தாண்டவத்தில் அதற்கான பொருள் ஒளிந்து கிடக்கிறது.

ஈசனின் அந்த இயக்ககதியில் இருந்து உலகின் பிரபஞ்ச இயக்கம் வரை அவ்வளவும் பரந்தாமனின் யோகநித்திரையின் போது நிகழ்கிறது.

சற்று மாற்றி, பரந்தாமன் வேறு இந்த பிரபஞ்சம் வேறு இல்லை. பரந்தாமன் யோக நித்திரை கொள்ளும் போது அதுவும் யோக சேர்க்கைகளை தன்னுள் நிகழ்த்திக் கொள்கிறது. காற்று வீசுவது முதல் மழை பொழிவது வரை, ஒரு இடம் காய்வதும் ஒரு இடம் பெய்வதுமான செயல்கள் என்று எதை நீங்கள் இந்த மண்ணில் கண்டாலும்... அது அந்த விஷ்ணுவின் யோக நித்திரைச் செயல் என்று புரிந்துகொள்வதே ஞானமாகும்.

இப்படி உறங்குவது என்பது ஒரு வகையில் தற்காலிகமானது. ஒருவர் உறங்குகிறார் எனும் போதே அவர் விழித்திருக்கிறார் என்பதும் உடன்

மறைந்து இருக்கிறது. விழித்திடாத மரணத்துக்கு ஒப்பான ஒறக்கமும் ஒன்று உண்டோ? அதுதான் பிரளய காலத்தில் நிகழ்ந்திடும் உறக்கமாகும். பிரளயத்தின்போது சர்வலோகங்களோடு அனைத்து உயிர்களும் தங்கள் நிலை அழிந்து விஷ்ணுவுக்குள் ஒடுங்கிவிடும். இப்படி ஒடுங்கிய பின், புதிதாக அனைத்தும் தோன்ற ஆரம்பிக்கும். இந்த கடடத்தில் எல்லாமே புதிது. புல், பூண்டிலே இருந்து உயிரினங்கள் வரை எல்லாமே ஒவ்வொன்றாக வரிசைக் கிரமமாக தோன்றத் தொடங்கி, அந்த வரிசையில் அனைத்தையும் படைப்பதற்காக பிரம்மா முதலாகவும், அவர் படைத்ததை ஒரு கட்டுக்குள் வைத்துக் காத்திட ஈசன் முதல் அக்னி முதலான பஞ்ச பூதாதியர்கள் வரை எல்லோரும் திரும்பத் திரும்பத் தோன்றுவார்கள்.

இப்படித்தான் உலக இயக்கம் இருந்து வருகிறது என்கின்றன நமது புராணங்கள்!

விஷ்ணு யோக நித்திரை கொள்ளத் தொடங்கினார் என்று குறிப்பிட்ட ஆரம்பித்ததன் பின்னே இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன. இனி வரும் சம்பவங்களுக்கும் கூட இந்த யோக நித்திரைக்கும் ஒரு பெரும் தொடர்பும் இருப்பதை இனி பார்ப்போம்.

வைகுண்டத்துக்குள் அந்த பரமேஸ்வரனோடு சேர்ந்து அவ்வளவு தேவர்களும் வந்துவிட்டனர். மாலவனோ யோக நித்திரையில்! ஈசனுக்கு பரந்தாமனின் நித்திரையைப் பார்த்த மாத்திரத்தில் காரணம் புரிந்து விடுகிறது. ஒரு வகையில் ஈசன் வேறு அந்த பரந்தாமன் வேறு இல்லையே? எனவே, அங்கே உறங்குவதும் ஈசன். அந்த உறக்கத்தை பார்த்து புன்னகைப்பவனும் ஈசன் என்றும் கூறலாம்.

தேவர்கள் 'இது என்ன சோதனை! தேவாதி தேவனை விஷ்ணுவை எழுப்புங்கள்' என்பது போல கைலாசநாதனை பார்க்கின்றனர். அவரது பார்வையே பிரம்மதேவன் மீதுதான் செல்கிறது.

ஆம்! ஒரு மகாபிரளயம் ஏற்பட்டு உலகம் முற்றும் அழிந்து அவ்வளவும் ஜலசமாதியாகி, பின் அதுவும் ஓடி அப்படியே விஷ்ணுவிடம் ஒடுங்கி

அடங்கியது. அந்த நிலையில் விஷ்ணுவின்றி ஏதும் இல்லை... விஷ்ணுவுக்குள் இருந்த சக்திதான் அந்த ஆதிசக்தி.

இப்படி ஒரு நிலையில் பிரம்மதேவனும் விஷ்ணுவுக்குள் தானே ஒடுங்கியாக வேண்டும். விஷ்ணுதான் ஒரு வகையில் பிரம்மனுக்கு தாயு மானவ ஸ்வாமி. தந்தையுமான ஸ்வாமி. விஷ்ணு வின் நாபிக் கமலமே பிரம்மாவின் வாசஸ்தலம்.

அந்த வாசஸ்தலத்திலேயே சென்று நாமும் ஒடுங்குவோம் என்று அவர் ஆசைப்படுகிறார்... பிரபஞ்சம் முற்றாக அழிந்துவிட்டதால் அவரது பலமும் தொண்ணூறு விழுக்காடு குறைந்து விஷ்ணுவுக்குள் விஷ்ணுவாக அவர் ஒடுங்கப் போகும்போதுதான், மகாவிஷ்ணுவின் காது வழியே மது கைடபர்கள் ஏனும் இரு அரக்கர்கள் குதித்து ஓடி வந்தனர்.

பிரளயத்தால் பிரபஞ்சம் அவ்வளவும் அவருக்குள் ஒடுங்கியதில் தீய சக்திகளும்தானே இருந்திருக்கும்? அந்த தீயசக்திகள்தான் ஒடுக்கத்தின்போதும் தங்கள் இயல்பு மாறாதபடி இப்படி மது கைபட வடிவம் கொண்டு காது வழியாக குதித்து வரப் பார்த்தது என்றும் பொருள் கொள்வார்கள்.

அந்த அரக்க சக்திகளுக்கு ஒடுங்கும்போதும் ஆர்ப்பாட்டம்... குறிப்பாக, விஷ்ணுவின் திவ்யத் திருமேனியில் நாபிக் கமலம்தான் ஆனந்தமான இடம் என்பது அவர்களின் எண்ணம். அங்கே பிரம்மதேவன் ஒடுங்கப் போனதைப் பார்த்து, அவனைத் தடுத்து நிறுத்தி அங்கிருந்து வெளி யேற்ற ஆவேசமாக முற்பட்டனர்.

'விஷ்ணுவோ ஆழ்ந்த யோகநித்திரை கொண்டு விட்ட நிலையில், தான் மட்டும் என்ன செய்துவிட முடியும்? ஒடுங்குவதில் எந்த இடமாக இருந்தால் என்ன' என்று எண்ணாமல்... அந்த ஒடுக்கம் எதற்கு என்பதையும் விளங்கிக் கொள்ளாமல், மது கைடபர்களை எண்ணி வருந்தத் தொடங்கி விட்டார் பிரம்மா.

பிரம்மனையும் அஞ்ஞானம் விடவில்லை என் பது இதிலிருந்து புலனாகிறது. ஞானம் இருந் திருந்தால், 'பிரபஞ்சமே முற்றாக அழிந்துவிட்டது.

அவ்வளவும் அழிந்து ஒரு புதிய தோற்றம் ஏற்படப் போகிறது. அப்போது, தானும் விஷ்ணுவால் தோற்றுவிக்கப்படுவோம். இந்த மது கைடபர்களும் சிறிது நேரம் நாபிக் கமல வாசர்களாக இருந்து அவர்களும் ஒடுங்கி பின் இல்லாமலே போய்விடுவார்கள்' என்பதை புரிந்து கொண்டு அதற்கேற்ப அல்லவா செயல்பட்டிருப்பார். அவரை யோகமாயை விடாத காரணத்தால், நடப்பதை விளங்கிக் கொள்ளாமல் மது கைடபர்களின் எதிர்ப்பை கண்டு மருண்டு அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள நாபிக் கமலத்துக்குள்ளேயே ஓடி ஒளிய ஆரம்பித்தார்.

எத்தனை மலிவான செயல் இது?

8

"வேணிகைதக பர்ஹாம்சு, விஜிதஸ்மரபட்டஸா
சகஸீமந்த ரேகாந்தலம்ப, மாணிக்யலம்பிகா."

அம்பிகை தகதகக்கும் வாளைப் போன்ற தாழம்பூக்களை தன் தலையில் குடியிருப்பவள். அதுமட்டுமல்ல... அவளது தலைவகிட்டின் மேல் மாணிக்கப் பரல் மின்னும் நெற்றிச் சுட்டியானது அழகு செய்தபடி அமர்ந்திருக்கும்.

அவளே அழகி... அவளுக்கு தாழம்பூவும், மாணிக்கப்பரலும் மேலும் அழகு சேர்க்கின்றன... என்பது மேற்காணும் வரிகளுக்கான பொருளாகும்!

மகாவிஷ்ணுவின் நாபிக்கமலத்துக்குள் ஓடி ஒளிந்து கொண்ட பிரம்மனை மது கைடபர்கள் அவ்வளவு சுலபத்தில் விட்டுவிடுவதாக இல்லை. அந்த நாபிக் கமலத்தையே பிடித்து உலுக்கினார்கள்.

பிரம்மாவுக்கோ சக்தியற்ற நிலை! பிரபஞ்சம் என்று ஒன்று இருந்தபோது, அதில் மானுடம் என்று ஒன்று இருந்தது, அவை யாகம், வேள்வி என்று புரிந்து, அதன் காரணமாக அருளும் பொருளும் ஒரு சுழற்சியில் இருக்கும்போது அதன் காரணமாக படைப்பாற்றல் என்னும் ஒன்று பிரம்மா வசம் இருந்தது. அவரைக் கொண்டே மகாசக்தியானது

அனைத்தையும் படைத்து வழிநடத்தியது. அப்படி அவரைக் கொண்டு படைக்கப்பட்ட அவ்வளவுமே ஊழியால் அழிந்துபோய், உலகம் என்பதே ஒரு ஜல உருண்டையாகிவிட்ட நிலையில் அவரிடம் மட்டும் என்ன சக்தி பெரிதாக இருக்க முடியும்? இதனாலேயே சக்தியை இழந்துவிட்டதாக கருதினார் பிரம்மா.

இந்த சக்தியும்கூட ஸ்தூலம், சூட்சமம் எனும் இருவிதமாய் உள்ளது. ஸ்தூல சக்தி என்பது உடல் சார்ந்தது. உடல் என்று வரும்போது பஞ்ச பூதங்கள் முதல் கோள் ஆதிக்கம் வரை பல சமாசாரங்கள் வந்து விடுகின்றன.

சூட்சமம்... மனம் சார்ந்தது. மனமோ ஒலி சார்ந்தது. ஒலி வடிவில் உள்ளவையே மந்திரங்களாகிய துதி! இவை எந்த நிலையிலும் பலவீனப் படுவதில்லை. நைந்த நிலையில் ஒரு முதியவர் கிடக்கின்றபோதும் அவர் மன உறுதிக்கும் உடல் உறுதிக்கும் சம்பந்தமில்லை மனத்தெளிவும் அப்படிப்பட்டதே!

எனவே, பிரம்மாவும் நாபிக்கமலத்தில் ஒளிந்த நிலையில் தனது ஸ்தூல சக்தியைத்தான் இழந்ததாக கருதினார். சூட்சமமாகிய மனோசக்தி, அதே திறத்தோடு இருந்தது. அதேசமயம், அதனுள் பீடிக்கப்பட்டிருக்கும் அச்சம், கலக்கம், ஆசூயை ஆகியவையும் அதே திறத்தோடு இருந்தன.

உலகம் அழிந்துவிட்டது... இல்லையில்லை... உலகம் ஜலப் பிரளயமாகி உயிர்கள் ஒடுங்கி விட்டன. ஒரு ஆரம்பத்திலிருந்து தோன்றிய உயிரினங்களின் அந்த ஆரம்பமே ஒரு முற்றை சந்தித்து நீருக்குள் நீரோடு நீராக கலந்துவிட்டது. காத்தருள வேண்டிய மகா விஷ்ணுவையே அழிவானது யோக நித்திரை எனும் வடிவில் ஆட்கொண்டு விட்டது. இந்நிலையில் மிச்சமிருப்பது தேவசக்தியின் மிச்சமாக பிரம்மனும் அசுர சக்தியின் மிச்சமாக மது கைடபர்களும்தான்!

இந்து மது கைடபர்கள் பிரம்மனை அழித்து விட்டால் அசுர சக்தியின் கைதான் உலகம் அழிபட்ட நிலையிலும் ஓங்கியிருந்தது என்றாகிவிடும். திரும்ப அனைத்து உயிர்களும் தோன்றி ஒரு புதிய சமுதாயம் மலரும்போது அப்போது வாழப்

போகும் 'த்ருஷ்டாந்திகள்' எனப்படும் முக்கால மறிந்த முனிவர்களால், 'கடந்த பிரளயம் இப்படித் தான் நேரிட்டது. அதில் இறுதியில் அசுர சக்தியே வெற்றி பெற்று, அதுவே படைப்புக் கடவுளையும் அழித்தது' என்பது வெளிப்படும். அதை அறிபவர்கள் "அசுரமே இறுதியில் வெற்றி பெற்றிடும்' என்ற தவறான அனுமானங்களுக்கு ஆட்படுவார்கள். எனவே, எதிர்கால நன்மை கருதியும், அசுரம் எப்போதும் வென்றிடக் கூடாது என்கிற அடியை ஒற்றியும் பிரம்மாவின் மனம் கலங்கித் துடித்தது.

அந்த வேளையில் தாய் தந்தையாக விளங்கிய திருமாலைத்தான் நித்திரை ஆட்கொண்டு விட்டது. ஆனால், அந்தத் திருமாலையும் அவரை ஆட்கொண்ட நித்திரையையும் இயக்கும் மேலான சக்தி என்று ஒன்று இருக்கிறதல்லவா?

அந்த சக்திதானே மகாசக்தி!

நாம், இந்த பிரபஞ்சம், இதன் மற்ற ஒருயிர், ஈருயிர்கள் எல்லாம்... அசைவற்ற பாறை முதல் அலை பாயும் சமுத்திரம் வரை, அரவமற்ற வெட்டவெளி முதல் அதில் இயங்கும் காற்று வரை, உதிக்கின்ற சூரியன் முதல் ஜொலிக்கின்ற நடசத்திரங்கள் வரை எல்லாமே அந்த மகாசக்தியால் வந்ததன்றோ?

அந்தச் சக்தியின் எண்ணம் நல்லவேளையாக பிரம்மாவுக்குள் அவ்வேளையில் தோன்றியது. அந்த சக்தியை நோக்கி பிரார்த்தனை செய்யத் தொடங்கிவிட்டார்.

'தாயே... மகாசக்தி... ஜெகன்மாதா... பிரபஞ்சங்களின் சாவியே... சர்வ உயிர்களின் ஆவியே... சரணம் அம்மா... சரணம்! ஊழி அழிந்து சர்வமும் நாசமாகி அவ்வளவும் நாரணம் நாரணம் என்று நாரணமணைந்து நாரணமாகவே ஆகிவிட்டது (நாரம் என்றால் நீர்... அந்த நீரை அணைந்தபடி கிடப்பவன் என்பதால் விஷ்ணுவுக்கு நாராணன் என்று பெயர்). அந்த நாரணத்தின் பிள்ளை நான் மட்டுமே தேவசக்தியின் மிச்சம். பகல் என்றால் இருள் இருப்பதுபோல தேவத்துக்கு எதிரான அசுர சக்திகளின் தொகுப்பாக மதுவும் கைடபனும் ஒருவருக்கு இருவராகத் தோன்றி, என்னை அழித்து பிரளயக் காலத்திலும் அசுரமே சக்தி படைத்தது என்று நிரூபிக்கத் துடிக்கிறார்கள்.

இது நல்லதல்லவே! எனக்கு என் மரணம் துக்கமில்லை, கலக்கமில்லை. உன்னால் உருவான உலகில் உன்னால் உருவாக்கப்பட்ட எனக்கும் ஒரு நாள் முடிவு உண்டு என்பதை நான் அறிவேன். ஆனால், அது எதன் பொருட்டு என்பது முக்கியமல்லவா? எதிர்வரும் பிரளயத்தில் அரக்கம் வென்றது என்கிற பதிவு கூடாது என என் உள்ளம் பதறுகிறது.

சர்வமும் நீயே எனும்போது 'அரக்கமும் நீயே, தேவமும் நீயே... அரக்கத்தை அழித்திடு என்று எனைத் துதிக்கவைக்கும் தேவமே... உலகின் மாதவமே... மாதவனையே நித்திரையில் ஆழ்த்தி விட்ட மாதவியே... மாதா.. அம்மா... தாயே ரட்சிப்பாய். நான் உன்னால் மாள்வதே எனக்குப் பெருமை. சக்தியற்ற என்னை அவர்களிடமிருந்து காத்தருள்வாய் தாயே'' என்று ஒரு நீண்ட பிரார்த்தனை புரியும் பிரம்மாவின் பிரார்த்தனை சிறப்பை 'ஸ்ப்த சதீ' எனும் மந்திரத் தொகுப்பு வெளிப்படுத்துகிறது.

அதில் அவர் நீயே எல்லாம்... நீயே சர்வமும் ஆகையால், 'நீயே ஸ்வாஹா... நீயே இங்கே ஸ்வதா...' என்பதாக அதைக் காணும்போது தெரிய வருகின்றது.

தேவர்களுக்கு ஆஹுதி அளிக்கும்போது 'ஸ்வாஹா' என்போம். அமரர்களுக்கு... அதாவது, இறந்து ரூபமற்று போய்விட்டவர்களுக்கு பிண்டம் போடும்போது 'ஸ்வதா' என்போம்.

பிரம்மா 'ஸ்வாஹா... ஸ்வதா' என்று இரண்டும் கூறி பிரார்த்திக்கின்றார். தேவர்கள் இருந்தால் 'ஸ்வாஹா' பயன்படும். இல்லாத நிலையில் உலகம் அழிந்து உயிர்கள் ஒடுங்கிய நிலையில் தானும் அழிந்து ஒழியப்போகிற நிலையில் அனைத்துக்கும் காரணமான மூலசக்தியை நோக்கி 'ஸ்வதா' என்பது தானே சரி?

எதற்கு வம்பு என்று இரண்டையும் கூறித் துதிக்கிறார். துதிக்கும்போதுதான் அவருக்குள் எத்தனை விதமான எண்ணங்கள்! எதிர்காலம் என்று ஒன்று இருப்பதாக கருதி, அப்போது தோன்றும் உயிர்களுக்கு இப்போதே நல்ல உதாரணம்தான் ஏற்பட வேண்டுமென்று தேவம், அசுரம் என்கிற பாகுபாடுகள் பற்றி எல்லாம் சிந்தித்து பலவாறாக

துதி செய்கிறார். அந்த பலவாறான துதிக்கு எல்லாம்கூட காரணம் பராசக்திதான்... அவள்தான் தன்னுள் இருந்து இவ்வாறெல்லாம் சிந்திக்கிறாள் என்றும் சிந்திக்கிறார்.

இத்தனை தூரம் படைப்புக் கடவுளே சரணாகதி செய்யும்போது அந்த ஆதிசக்தி ஆட்கொள்ளாமல் போவாளா?

அவளும் தோனறத் தொடங்கினாள்!

சர்வமும் நீராகி உயிரோ உலகமோ முற்றும் இல்லாத நிலையில், ஒரு புறம் படைப்புக்கதிபதி... மறுபுறம் அழிவுக்கதிபதிகள்... படைப்பவன்கூட ஒருவன்தான். ஆனால், அழிப்பவர்களோ இருவர்கள்.

அவள் படைப்பில் எஞ்சி நிற்பவை படைப்பு குறைவாகவும் அழிவு அதிகமாகவும் என்றும் இதை பொருள் கொள்ளலாம்.

ஆனாலும், குறைவான படைப்புக்கதிபதியிடம் தான் பக்தியும், எதிர்காலம் நலமுடன் இருக்க வேண்டும் என்கிற நோ்மையும் இருந்தது. எனவே தான், அந்த எண்ணம் மாதாவையே வரவழைத்து விட்டது.

எப்படித் தெரியுமா? மாகாளி வடிவில்!

கன்னங்கரிய மலைபோன்ற தோற்றம்... பத்து முகங்கள்... அவ்வளவிலும் முக்கண்கள். கைகளும் ஒன்றுக்கு பத்து, கால்களும் பத்து. கழுத்தில் கபால மாலை... அவ்வளவு கைகளிலும் விதவிதமான ஆயுதங்கள்... அம்பாயுதம், கதை, சூலம், சக்கரம், கத்தி, மழுசங்கமம், ஆயுதம் பற்றியிருக்க... காளா முகமும் மின்னல் ஒளியில் செய்தது போன்ற கோரைப் பற்களுமாய் பூமிக்கும் வானுக்குமாய் அன்பான அன்னை மகாசக்தியின் ஒட்டு மொத்த திரட்சியாக தோன்றிவிட்டாள்.

அச்சமூட்டி, கலக்கமூட்டி நம்மை மயக்க வைக்கும் பயங்கர ரூபம்! ஆனால், பிரம்மனுக்குள் துளியும் அச்சம் ஏற்படவில்லை. மாறாக, அசுரத்தை அழிக்க அதனினும் ஆற்றலோடு மாதா வந்து நிற்பது அவருக்குள் ஒரு புது பலத்தை வரவழைத்தது.

அந்த புதுபலத்தோடு மாதாவைத் துதித்தார்.

பக்திப் பெருக்கில் வழிபடமுடியாத ஒரு தவிப்பும் ஆனந்தமும் மேலிட்டது. எப்படித் துதிப்பது

என்றெல்லாம் தடுமாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் எதற்காக துதித்தாரோ அது முந்தியது.

மாதா அரக்கத்திடம் இருந்து என்னைக் காப்ப தன் மூலம் தேவருலகைக் காத்திட வேண் டும் என்று மண்டியிட்டு பிரார்த்தித்துக் கொண் டார். கூடவே, என் தாயும் தந்தையுமான ஜனார்த் தனனை ஆட்கொண்ட உன் யோகமாயை விலக வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

மது கைடபர்களை அழிக்க வேண்டும் என்று வேண்டியதுவரை சரி... ஆனால், அவர்களிடம் ஒரு விநோத வரசித்தி இருந்தது. அதாவது, அவர்களை எந்தவொரு சக்தியாலும் அழிக்கமுடியாது என்பதே அது. அவர்களாக வேண்டுமானால் தங்களை அழித்துக் கொள்ளலாம். அப்படி ஒரு வரசித்தி உள்ளவர்களை எப்படி அழிப்பது? வரத்தை எவர் தந்திருப்பினும் அதற்கு பின்னால் இருப்பவள் ஆதிசக்திதானே.

அந்த சக்திதான் காளியாக மாறி எதிரில் நின் றாள். பிரம்மனின் பிரார்த்தனையையும் ஏற்றுக் கொண்டாள். யோகநித்திரையில் ஆழ்ந்திருக்கும் விஷ்ணு மூலமாகவே அவர்களை அழிக்க திரு உள்ளம் கொண்டாள்.

அடுத்த நொடியே மாதவனின் யோக நித்தி ரைக்கு காரணமான தாமஸீ என்னும் தாமஸி தேவி விஷ்ணுவை ஆக்ரமித்திருந்த நிலையிலிருந்து விலகிவிட விஷ்ணுவின் நீலநயனங்கள் கண் விழித்தன!

9

"புஷ்ப பாண சராலீட, கரநம்மில்ல பூஷணா
பாலசந்த்ர கலாப்ராந்த ஸத்ஸீதா பிந்து மெளக்திகா!"

'அன்னையானவள் மன்மதனின் மலர்க்கணைகளை எல்லாம் பூட்டிக் கொண்டு அழகுடன் காட்சி தருகிறாள். பிறைச்சந்திரனைத்தோற்கடிக்கும் அழகு டன் காணப்படும் அவள், நெற்றித் திலக மும்... அதற்குப் போட்டியாக முத்துச் சரங்களை இருபுறமும் அணிந்திருக்

கிறாள்!' என்று வியக்கிறது ஸ்ரீ துர்கை யின் இந்த சஹஸ்ரநாம வரிகள்!

பிரம்மன் காளிதேவியிடம் வரம் கேட்டிட திருமாலின் உறக்கத்தை... அதாவது, அவரை ஆட்கொண்ட தாமஸீ தேவியின் ஆக்கிரமிப்பை காளிதேவியும் அகற்றிட, திருமாலின் உறக்கமும் கலைந்தது.

சொல்லப்போனால் அது பொறுப்பில்லாத உறக்கமல்ல... ஒரு காரணம் கருதி, மேற்கொண்ட உறக்கம்! இப்படி உறங்கப் போய்த்தான் பிரம்மா காளிதேவியையே அழைக்க நேர்ந்தது. காளியும் பிரளயத்தில் சர்வமும் மூழ்கிவிட்டதைக் கண்ட நிலையில் மது கைடபர்களின் மிச்சத்தையும், பிரம்மனின் வருத்தத்தையும் உணரவும் அதனால்தான் சாத்தியம் ஆயிற்று.

எப்படியோ பிரம்மாவின் ஆத்மார்த்தமான பிரார்த்தனை பலித்து, ஜெகத்ரட்சகனான திரு மாலும் கண் விழித்து எழுந்துவிட்டார். அவர் எழுந் திருப்பதைப் பார்த்த மது கைடபர்கள் சற்று அதிரத் தான் செய்தனர். ஆனாலும், தங்களது வரசித்தியை உத்தேசித்துக் கண்விழித்த திருமாலைப் பார்த்து வருத்தப்படவும் செய்தனர். அப்படியே கேலியாக வும் சிரித்தனர். திருமாலோ கண்கள் சிவக்க அவர்களைப் பார்த்தார்.

அவரது மகரக் காதுகளின் வழியாக பிறந்தவர் கள் மது கைடபர்கள். அவரது புத்திரர்கள் என்றும் கூறலாம். தங்களுக்கு தந்தை போன்ற திரு மாலை... உலகமே பரம்பொருளாக கருதி வழி படும் ஜனார்த்தனனை அவர்களால் பக்தி யுடனோ... குறைந்தபட்சம் வெல்லப்பட முடியாத பரமாத்மா என்கிற தெளிவுடனோகூட பார்க்கத் தெரியவில்லை.

நெருப்பென்றால் சுட வேண்டும். பூவென்றால் மணக்க வேண்டும்; நீர் என்றால் பள்ளம் கண்ட இடத்தே பாய வேண்டும் என்று விதி இருப்பது போல, அசுரம் என்றாலே நல்லது எதுவுமே அவர்களுக்குப் புலப்படக் கூடாது என்பதுதான் விதியோ?

இது தெரிந்தோ என்னவோ... திருமாலவனும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கவோ... உபதேசங்

கள் புரியவோ இல்லை. நேராக யுத்தம் தொடங்கினர்.

அவர்கள் வரசித்தி அவர்களுக்கு எப்படித் தெரியுமோ... அப்படியே மாலவனுக்கும் தெரியும்தான். அப்படி, வெற்றி கிடைக்காது எனத் தெரிந்தும் எதற்கிந்த யுத்தம்?

யுத்தக் காட்சியைப் பார்த்தபடி நிற்கும் பிரம்மா, எப்படியும் திருமால் அவர்களை சம்ஹாரம் செய்து விடுவார் என்கிற நம்பிக்கையோடுதான் இருந்தார். கூடவே, விஷ்ணுவிடமிருந்து வந்தவர்களே விஷ்ணுவுக்கு எதிராக போர் புரிகிறார்களே... அது எப்படி பரமாத்மாவிடம் இருந்து இப்படியொரு துர்க்கண அரக்கர்கள் தோன்ற முடியும்... என்றெல்லாம் படைப்புக் கடவுளிடமே குழப்பங்கள்!

யுத்தமோ தொடர்ந்தபடியே இருந்தது. ஒரு நாள், இரு நாள் என்று நீராழி மேல் ஓடி ஓடி நடந்த யுத்தமானது வாரங்களைக் கடந்து நீடித்தது. நீண்ட நெடிய யுத்தத்துக்குப் பிறகே தாங்கள் எப்படி வெல்லப்பட முடியாதவர்களோ... அப்படி விஷ்ணுவும் வெல்லப்படமுடியாதவராக இருக்க வேண்டும்; அதனால்தான், அழிவு நேராதபடி யுத்தம் மட்டும் நீடித்தபடி இருக்கிறது என்கிற ஒரு நுட்பம் மெல்ல மது கைடபர்களுக்குப் புரியத் தொடங்கியது.

விஷ்ணுவும் களைப்படைந்து விட்டவர் போல், யுத்தம் புரிவதை நிறுத்தினார். அவர் அப்படிச் செய்ததே மது கைடபர்களை உற்சாகம் கொள்ளச் செய்தது.

"ஏ விஷ்ணு... என்ன சோர்ந்துவிட்டாய்? களைப்பாக இருக்கிறாயா?" என்று கேட்டு சிரித்தனர்.

"ஆமாம், களைப்பாகத்தான் இருக்கிறது. உங்கள் வீரத்தை நினைக்கையில் மலைப்பாகவும் இருக்கிறது..." என்று அவர்களை உயர்த்துவதைப் போலவும் பேசினார் திருமால்.

"அப்படி வா வழிக்கு... இப்போதாவது உனக்குப் புரிந்ததே! ஆனாலும், ஒரு துரதிர்ஷ்டம் பார்... எங்களின் இந்த வீரத்தைப் பார்த்து பாராட்டவோ வியக்கவோ பிரம்மனைத் தவிர ஒருவர்கூட இல்லை!" என்று இருவரும் வருந்தினர்.

"நாங்களும் அழிந்துவிட்டால் நீங்கள் இருவர் மட்டும் இருந்து எந்த உலகத்தை எவர் பொருட்டு ஆள முடியும்? யோசியுங்கள்!" என்றார் விஷ்ணு.

"அதுவும் சரிதான். நாங்கள் ஆள்வதற்கு நீங்கள் இருவராவது மிஞ்சியிருக்கிறீர்களே... அம்மட்டில் மகிழ்ச்சி. உங்களைக் கொண்டே புதிய உலகை தோற்றுவித்து அதில் எங்கள் சாம்ராஜியக் கொடியையும் பறக்கவிடுவோம். நீங்களும் எங்களுக்கு கட்டுப்பட்டு அடிமைகளாக சேவகம் புரிய வேண்டும்..." என்றுறு இருவருமே எகத்தாளம் பேசினர்.

"நாங்கள் அடிமைகள் என்றால், நீங்கள்?" விஷ்ணு அவர்களைப் பார்த்து ஒருவித சூட்சும உணர்ச்சியுடன் கேட்டார்.

"நாங்கள்... நாங்கள்... இருவரும் என்ன கூறுவது என்று தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ம்! என்ன நாங்கள், நாங்கள்... நீங்கள் யார்? என்னைக் கேட்டால் 'உலகைக் காத்து ரட்சிக்கும் தொழிலுக்கு கர்த்தா' என்பேன். பிரம்மனும் அப்படித்தான். படைப்புக்கு அதிபதி! அப்படி அதிபதிகளாக இருக்கப் போய் தான் வரம் தரும் ஆற்றலோடு உள்ளோம். உங்களிடம் அப்படி என்ன இருக்கிறது?"

விஷ்ணு அவர்களைத் தூண்டிவிட, அவர்களுக்கு சீறிக்கொண்டு வந்தது கோபம்.

"ஏ... விஷ்ணு. போதும் உன் பேச்சு! எதற்கு இப்போது உன் பழங்கதை? கர்த்தா, வரம் தரும் ஆற்றல் என்று உன் பழைய பெருமைகளைப் பேசுவதால் இப்போது யாருக்கு என்ன லாபம்?"

"அதற்கில்லை. நான் உள்ளதை சொன்னேன்."

"நீ அப்படிச் சொன்னது போல தெரியவில்லை. இப்போதும் நானே ஜெகத்துக்கு அதிபதி, நானே கடவுள் என்று கூறுவது போலதான் உள்ளது."

"சரி, நீங்கள் இருவருமே இனி ஜெகத்துக்கு அதிபதி என்றும் வைத்துக் கொள்வோம். உங்களால் என்னைப் போல வரம் தர இயலுமா?"

அவர்கள் இருவரும் விஷ்ணுவின் பேச்சைக் கேட்டு இடிச் சிரிப்பு சிரித்தனர்.

"எதற்கிந்த சிரிப்பு?"

"சிரிக்காமல் என்ன செய்வது? எல்லோருக்கும் வரம் தந்து வந்த நீ, எங்களிடம் வரம் வேண்டும் அளவுக்கு மலிந்துவிட்டாயே... அதை எண்ணியே சிரித்தோம்..."

"நான் மலிந்துவிட்டதாகவே இருக்கட்டும் நீங்கள் பதிலைச் சொல்லுங்கள்... உங்களால் வரம் தர முடியுமா?"

"ஏன் தரமுடியாது? உன்னையே களைப்படைய வைத்துவிட்ட எங்களால் என்னதான் முடியாது?"

"அப்படியானால் நான் என்ன வரம் கேட்டாலும் தருவீர்களா?"

"முதலில் வரத்தைக் கேள். பிறகு பார்!"

இருவருக்கும் விஷ்ணுவின் தந்திரம் புரியவில்லை.

"வேண்டாம். உங்களால் நான் கேட்கும் வரத்தை எல்லாம் தர முடியாது. முடிந்தாலும், தர மாட்டீர்கள். ஏனென்றால், அதுதான் அசுரர்களின் வழக்கம்..."

"அடேய், லட்சுமி மணாளா... நாங்கள் அசுரர்களாக இருக்கலாம். ஆனாலும், உறவு என்றோ, நண்பர்கள் என்றோ இருவரும் இல்லாத இந்த பிரளய வேளையில் உனக்கு வரம் தர மறுத்து எங்களுக்கு ஆகப் போவதுதான் என்ன?"

"அதனால்தான் பயமாக இருக்கிறது. யாரும் இல்லாத இந்த உலகில் நீங்கள் சொன்னபடி நடந்தாலும் பாராட்ட ஆளில்லை. நடக்காவிட்டாலும் யாரென்று கேட்க ஆளில்லையே!"

"போதும்... உனக்கு என்ன வரம் வேண்டும்... வேகமாக கேள்!"

"திரும்பவும் கூறுகிறேன்.. வாக்கு தவறக் கூடாது. அப்படி வாக்கு தவறாமல் இருந்தால்தான் கர்த்தாக்கள் ஆகவும் முடியும்..."

"சரி, எங்கள் இருவர்மேல் ஆணை. நாங்கள் வாக்கு மட்டும் தவறவே மாட்டோம். நீ எங்கள் உயிரையே கேட்டாலும் சரி... வாக்கு மட்டும் தவற மாட்டோம். நீ உன் வரத்தைக் கேள்!"

அவர்கள் அப்படிச் சொன்னதுதான் தாமதம்... விஷ்ணு அவர்களைப் பார்த்து, "நீங்கள் இருவரும்

தான் இப்போது உலகம். உங்களை என்னாலேயே வெல்ல முடியவில்லை. இப்படிப்பட்ட மாவீரர் களான உங்களை நான் யுத்தத்தில் ஜெயிக்க வரம் தரவேண்டும்...!" என்றார் விஷ்ணு.

மது கைடபர்கள் இருவருக்கும் அப்போதுதான் புத்தி என்பதன் கூர்மையும், அதன் சக்தியும் புரிந்தது. நெடுநேரம் வரை விஷ்ணு கேட்ட வரத்தை தந்திட தைரியம் இல்லாது, ஸ்தம்பித்து நின்றே விட்டனர்.

விஷ்ணு இப்போது அவர்களைப் போலவே சிரிக்கத் தொடங்கினார்.

"எனக்குத் தெரியும்... வரம் தரும் தெய்வத் தன்மை அசுரர்களுக்கு வராது என்று எனக்கு நன்றாகத் தெரியும்..." என்று அவர்களுக்கு நடுவில் சுருதி கூட்டத் தொடங்கினார். அடுத்த விநாடியே இருவரும் ஆவேசமாக, "ஏய் விஷ்ணு... வாயை மூடு. நீ கேட்ட வரத்தை உனக்கு தந்திட நாங்கள் சித்தமாகிவிட்டோம் ஆனால், ஒரு நிபந்தனை..." என்றனர்.

"அதுதானே பார்த்தேன்... கேட்ட வரத்தை அப்படியே தந்துவிட நீங்கள் என்ன பிரம்ம தேவனா... இல்லை ருத்ரனா?" விஷ்ணுவிடம் பரிகாசம்.

"போதும் நிறுத்து... நீ எப்படிப்பட்டவன் என்று எங்களுக்கும் தெரியும். எங்களைப் போன்ற பல அசுரர்கள்கூட எவராலும் வெல்ல முடியாத வரத்தைத் தான் கேட்டனர். ஆனாலும், ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டு, எதனாலாவது மரணம் நேர வேண்டும் என்று ஒரு விதிப்பாட்டைக் கூறி வரம் கேட்கச் சொன்னபோது, அவர்களும் புத்தி சாலித்தனமாக ஒரு பெண்ணாலன்றி யாராலும் எவராலும் எக்காலத்திலும் மரணம் நிகழக்கூடாது என்றுதான் வரம் பெற்றனர். இப்படி வரம் தரும் போது நீயும் உன் தேவாதி தேவர்களும் நிபந்தனை விதிக்கலாம். ஆனால், நாங்கள் விதிக்கக் கூடாதோ?" என்று எதிர்கேள்வி கேட்டனர்.

"சரி, என்ன நிபந்தனை?"

"எங்களை நீ நிலத்தில்தான் யுத்தம் செய்து வெல்ல வேண்டும். வேறு எங்கும் கூடாது..." என்றனர்.

காரணம் பிரளயத்தில் ஒரு அடி நிலம் கூட பூவுலகில் இல்லை. சர்வத்தையும் நீர் சூழ்ந்திருக்கிறது. விஷ்ணுவும் அவர்களின் புத்திக் கூர்மையை ரசித்தவராக, "நல்லது. ஏற்கிறேன்..." என்றார்.

அவர்கள் இருவரும் சிரித்தனர்.

"எதற்கிந்த சிரிப்பு?"

"சிரிக்காமல் என்ன செய்வது? இந்த ஜலக் காட்டுக்குள் நாங்கள் உள்ளவரை உன்னால் எங்களை என்ன செய்ய முடியும்?"

அவர்கள் கேள்விக்கு பதில் கூறாமல் அடுத்த நொடியே விஷ்ணு ஆதிசக்தியை எண்ணி தவம் புரியத் தொடங்கிவிட்டார்.

பிரம்மாவுக்குள் மேலும் குழப்பம் அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால், என்ன ஆச்சரியம்! விஷ்ணுவின் தவம் வேகமாக கலைந்த நிலையில் அவரது தொடை இரண்டுமே மண் பரப்பு போல பூமி அம்சமாக மாறத் தொடங்கி ஒரு பெரிய நிலப்பரப்பும் தோன்றத் தொடங்கியது.

மது கைடபர்களுக்கும் தங்களின் அந்திமக் காலம் நெருங்கிவிட்டது புரிந்துவிட்டது!

10

"சூலி காதம்பி நீச் லிஸ்ட் சந்த்ர ரேகா லலாடிகா
சந்த்ர மண்டல சம்யுக்த பௌம குங்கும ரேகிகா..."

'அம்பிகையின் முக லாவண்யத்தை கவிதா ரசம் சொட்டச் சொட்ட வர்ணிக்கும் வரிகள் இவை.'

அவளது கூந்தல் கார்மேகம் போலிருக்க, அந்த மேகத்திடை தெரியும் பிறை நிலா போல அம்பிகையின் நெற்றி விளங்குகிறதாம். அந்த நிலா நெற்றியில் சிகப்புக் குங்குமமோ சந்திரனோடு சேர்ந்த செவ்வாய் கிரகம் போல காட்சி தருகிறதாம்!

மோகாவிஷ்ணுவாகிய அந்த பரந்தாமனின் தொடை பரப்பு ஒரு பெரும் நிலப்பரப்பாகிவிட, அதைப் பார்த்து மதுவும் கைடபனும் நடுங்கிப் போயினர்.

வெற்றி என்பது ஸ்தூல பலத்தால் ஆனது என்று எவர் சொன்னது? அது சூட்சுமமான அறிவு பலத்தாலும் ஆனது. அவ்வளவு ஏன்? அறிவு பலமே பிரதானமாகி ஸ்தூல பலத்தை எல்லாம் அது நொறுக்கித் தள்ளிவிடும் என்கிற உண்மை எல்லாம் அந்த இரு அசுர மகா பிரபுக்களுக்கும் அப்போதுதான் புத்தியில் உறைக்கவும் செய்தது.

தொடை நிலமானதுமே விஷ்ணு அவர்கள் இரு வரையும் தன் கரங்களால் தூக்கி தொடை மீது வைத்தார். இருவரும் விஷ்ணுவை நடுக்கத்தோடு பார்த்தனர். போட்ட ஆட்டங்கள் அவ்வளவும் அடங்கி, பேசிய பேச்சுகள் எல்லாம் ஒடுங்கி, இன்னும் சொற்ப நேரத்தில் சம்ஹாரம் செய்யப்படப் போகிறோம் என்கிற எண்ணமே அவர்களை பாதி அழித்துவிட்டது. மிச்சத்தை விஷ்ணுவின் திருச் சக்கரம் பார்த்துக் கொண்டது. கிறுகிறுவென புறப் பட்ட அந்த திருஆழி அவர்கள் இருவரின் சிரசை நறுக்கித் தள்ளிவிட்டு, மீண்டும் பரந்தாமன் நுனிவிரலுக்கே வந்து அமர்ந்து கொண்டது.

அதை தன் ஞானக்கண்களால் உணர்ந்த பிரம் மனின் கமல நயனங்களில் ஆனந்த நீர்த்திரை! 'மதுவும் கைடபனும் மாய்ந்திட ஆதிமூல காரணமே, அன்னை சக்திதான்! அவள் மட்டும் விஷ்ணுவின் தாமஸ நித்திரையை கலைக்காமல் போயிருந்தால் இதெல்லாம் நிகழ்ந்திருக்குமா?'

பிரம்மதேவன் ஞாபகமாய் இந்த அற்புதச் சம்ஹாரத்துக்கு காரணமான அந்த ஆதிசக்தியை எண்ணி, துதி செய்தார். அப்படியே வரங்கள் தருவதில் காட்ட வேண்டிய புத்திசாலித்தனத்தை பற்றி எல்லாமும் ஒருமுறை எண்ணிப் பார்த்துக் கொண்டார்.

அம்மட்டில் ஜனார்த்தனனே வல்லவர். யாருக்கு எங்கே எப்படி என்ன விதமாய் வரம் தர வேண்டும் என்பதிலிருந்து, எப்போப்பட்ட வரம் பெற்றவனையும் எந்தவிதமாய் அணுகி சம்ஹரிக்க வேண்டும் என்பதையும் அவரே நன்கறிந்தவர். அதனால்தானே காத்து ரட்சித்திடும் கஷ்டமான பணியை அந்த ஆதிதேவி விஷ்ணுவுக்கு அளித்திருக்கிறாள்?

எப்படியோ மது கைடப வதம் முடிந்தது. பிரளயத்தின் மொத்த அழிவோடும் அவர்களது

அழிவும் சேர்ந்து கொண்டது. அவர்களது உடம் பாகிய சதைக் கொழுப்பில் இருந்துதான் பிரளயத் துக்கு பின்னான புதிய உலகம் படைக்கப்பட்டது. அசுரக் கொழுப்புக்கு மேதஸ் என்று பெயர். அதிலிருந்து தோன்றிய உலகையே மேதினி என்கிறோம்.

மேற்கண்ட மது கைடப அசுர சம்ஹார நிகழ்வை சற்று தத்துவார்த்தமாகவும் பார்ப்பது நல்லது. ஏன் என்றால் புராணங்கள் அவ்வளவும் தத்துவத்தை தங்களுக்குள் மறைமுகமாக பூட்டிக் கொண்டிருப்பவை. ஒரு தத்துவத்தை சில வரிகளில் எழுதிவைத்து, அதை பல காலத்துக்கும் காப்பாற்றுவது கஷ்டமான காரியம். பின்னால் வருபவர்கள் தங்கள் விருப்பம் மற்றும் தாங்கள் புரிந்து கொண்டதற்கு ஏற்ப அந்த தத்துவத்தை மாற்றியும் திரித்தும் எழுதிவிடும் அபாயம் அதனால் நிறையவே உண்டு. ஆனால் அந்த தத்துவங்களை கதைகளாக்கி வைத்துவிட்டால் இந்த பாதிப்புக்கே இடம் இல்லை.

அந்தவகையில்மதுகைடபவதம்பற்றியபுராண கதை கூறும் மறைமுகமான தத்துவார்த்தங்கள் நமக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல... ஆழ்ந்த ஞானத்தையும் தரவல்லவையாகும்.

மது கைடபர்கள் இருவரும் உலகம் முற்றாக ஆரிந்துவிட்ட நிலையில், விஷ்ணுவின் காது வழியாக பிறந்து வந்தவர்கள் என்று பார்த்தோம். உண்மையில், மது கைடபர்களை சப்த வடிவாக பார்க்க வேண்டும். காது என்பது சப்தத்தை கேட்டு கிரகித்துக் கொள்ளும் தன்மை உடையது. காதுக்குள் நல்லதும் விழும்; கெட்டதும் விழும். உலகம் பிரளத்தில் அழிந்துவிட்ட நிலையில், நல்லவை நாராணனுக்குள் ஒடுங்கி, ஒரு விதத்தில் முக்தி பெற்றுவிட்டன. ஆனால், கெட்ட சப்தமாகிய பாவ கர்மங்களுக்கு உள்ளே இடம் இல்லாது போயிற்று. எனவே, அவைதான் மது கைடபர்களாக வந்தன.

மது கைடபர்கள் உலகின் ஒட்டுமொத்த கெட்ட சக்தியின் வடிவங்கள். இதில் மது என்கிற பெயர் போதை தரும் மதுவைத்தான் குறிக்கிறது. மதுவானது மனதை மயக்கத்தில் ஆழ்த்துகிறது. மனம் என்பதே சப்த வடிவம்தானே? அதில்

மயங்கிய சப்தமான மது... அதன் காரணமாக மனதில் எழும் கூச்சல்தான் கைடபம். அதாவது, அமைதிக்கு எதிரானவை இந்த இரண்டுமே!

பிரளயத்தின் முடிவில் இவற்றையும் விட்டு வைத்திட அந்த சக்தி விரும்பவில்லை. நல்லவை கூட மிஞ்சியிருக்கலாம். தீயவை துளிகூட இருத்தல் ஆகாது. அப்போதுதான் புதிய சிருஷ்டியைத் தொடங்கும்போது சமநிலையோடு துவக்க முடியும் அதன் பிறகு மாயையை களத்தில் இறக்கி விட்டால் அது தன் பணியை செய்யத் தொடங்கி, மாயைக்கு ஆட்படுவோர், படாதோர் என்கிற இரு பிரிவுகள் மெல்ல உருவாகத் தொடங்கும். மாயைக்கு ஆட்பட்ட இனம் பாவம் புண்ணியம், புண்ணியம் பாவம் என்கிற வட்டத்துக்குள் சிக்கி, அடுத்த பிரளயம் வரும் வரை சுழலத் தொடங்கிடும்.

புதிய உலகை படைக்கும்போது ஏன் மாயையை களத்தில் இறக்க வேண்டும்? மாயை இல்லாவிட்டால் எல்லோரும் மாயா வசப்படாமல் நல்லவர்களாகவே மட்டும் இருப்பார்களே... அதனால் உலகில் போட்டி பொறாமை பசி, தாகம் என்று எந்த தவறான விஷயங்களும் இல்லாமல், உலகம் அமைதியில் திளைக்குமே என்று பலருக்கு தோன்றலாம்.

உண்மையில் மாயைதான் வாழ்க்கையை ருசிமிக்கதாகவே ஆக்குகிறது. வெற்றியும் தோல்வியும் அதனால் தான் ஏற்படுகிறது. இரு அணியினர் விளையாடுவதற்காக களத்தில் இறங்குகின்றனர். இருவருக்குமே வெற்றி, தோல்வியில் துளிக் கூட நாட்டமே இல்லை என்றால் அந்த விளையாட்டை அவர்கள் எதற்கு விளையாட வேண்டும்? வெற்றி பெற வேண்டும் என்று இரு அணியினரும் மோதும்போதுதான் சுவை உருவாகிறது. பார்ப்பதற்கும் களை கட்டுகிறது. இந்த விஷயத்தை உற்றுப் பார்த்திடும்போது, நமக்கு பல உண்மைகளும் தெரியவரும்.

ஒரு விளையாட்டில் ஒருவர் வெற்றி பெற்றிடும் போது இன்னொருவர் தோற்றே தீர வேண்டும். ஒரு விளையாட்டில் இப்படி இரு கூறாக மாறும் விஷயம் தான், வாழ்க்கையில் பாவ புண்ணியமாக விளங்கி மனித வாழ்க்கையை வழி நடத்துகிறது. தர்மநெறிப்படி வாழ முற்படுவது

என்பதுதான் வாழ்வின் தலையான நோக்கம். அதில் துளி விலகினாலும் பாவம் வந்துவிடுகிறது. அந்த பாவத்தை விலக்கியாக வேண்டும் என்கிற ஒரு கட்டாயமும் ஏற்பட்டு விடுகிறது. அந்த பாவத்தை அனுபவித்து முடிப்பதற்குள் வேறொன்றில் இன்னொன்று வந்துவிடுகிறது. இப்படியே மாறி மாறி சிலந்தி வலைக்குள் விழுந்த பூச்சி கணக்காய் நாம் ஆகிவிடுகிறோம்.

புராணங்களுக்குள் புகுந்து பார்க்கும்போது தான் நமக்கு இவை எல்லாமும் விளங்கும்.

சரி... அப்படியே நாம் திரும்பவும் மகிஷனை அடைவோம். மகிஷன் அழிந்தாக வேண்டும். அதற்கு வழி என்ன? இவன் பொருட்டு தேவர்களின் உலகமே கண்ணாடிப் பாத்திரம் கணக்காக உடைந்து சுக்கு நூறாக அல்லவா எல்லா பக்கங்களிலும் தெறித்துக் கிடக்கின்றனர். மகிஷனும் இந்திரனின் சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டான். அவனது வஜ்ராயுதத்தை தனது முதுகு சொறிவதற்கு பயன்படுத்தி, அதை அல்பமாக்கி விட்டான்.

அமுதம் கடைந்த போது கிடைத்த அற்புத செல்வங்களான ஐராவதம், கற்பக விருட்சம், உச்சை சிரவஸ் போன்ற சகலத்தையும் தனதாக்கிக் கொண்டு உச்சை சிரவஸை வான்வெளி எங்கும் ஓட ஓட விரட்டி வேடிக்கைப் பார்க்கிறான்.

மொத்தத்தில் உன்னதங்கள் அவ்வளவையும் கேவலத்தில் போட்டு வறுத்து எடுத்துக் கொண்டிருக்கிறான் மகிஷன்.

இதற்கு முடிவைத் தேடி தேவர்கள் முதலில் பிரம்ம லோகத்திற்கம், பின் அங்கிருந்து கைலாயத்துக்கும் அதற்கும் பின் வைகுண்டத்துக்கும் மாறி மாறி நடந்தே களைத்துவிட்டனர்.

எவ்வளவுதான் களைத்தாலும் மீட்சி அடையாமல் விடுவது சாபக்கேடன்றோ? அதேபோல, எத்தனை முறை முயன்றாலும் எப்போது மிகச் சரியாக முயற்சிக்கிறோமோ அப்போது வெற்றிகரமாகி விடுகிறது. அப்படி ஒரு முயற்சியாகத்தான் தேவர் உலகமே ஒன்றுதிரண்டு நிற்கிறது. பிரம்மா, சிவன், விஷ்ணு என்கிற முப்பெரும் சக்திகள் படை சூழ்ந்திட.... அவ்வளவு பேரும் தங்களின் இறுதி யத்தனமாக புரிந்த செயல் எது தெரியுமா?

தியானம்

ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? வருந்தியும், புலம்பியும், அரற்றியும், அழுதும், ஓடியும், ஒளிந்தும், எதிர்த்தும், மோதியும், சாடியும், சார்ந்தும், சரிந்தும், நிமிர்ந்தும் என்று எத்தனை விதங்கள் உண்டோ அத்தனையாலும் ஏற்படாத ஒரு மாற்றம் இதனால் மட்டும் ஏற்பட்டு விடுமா?

11

**'கேசாப்ர முக்த கோதண்ட ஸத்ருக்ப்ப்ரூல திகாஞ்சிதா!
மார சாபலஸத் சுப்ர ம்ருகநாபி விசேஷகா...'**

எப்பொழுதும் அழகிய வானவில்லானது மேகத்தில் சூரியக் கதிர்கள் குறிப்பிட்ட ஒரு கோணத்தில் படும்போதுதான் ஏற்படும். அத்தகைய ஒரு வானவில்லைப் போல விளங்குகிறது அன்னையின் திருமுகத்திலுள்ள புருவங்கள் இரண்டும்!

அப்படிப்பட்ட புருவங்களானது மாறனின் வில்லைப் போலவும் இருக்கின்றன. இந்த புருவங்களுக்கு மையத்தில் அன்னை கஸ்தூரி திலகத்தை அணிந்திருக்கிறாள். அந்த திலகம் நடுநாயகமாய் நின்று ஜொலிக்கின்றது!

தேவருலகமே தியானத்தில் மூழ்கிவிட்டது. நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமும் பலவித சிந்தனைகளையும் உருவாக்கும் ஒரு செயல்பாடு!

மானிட இனம் கடைத்தேற உதவுவது தியானம். தியானிப்பது என்றாலே மனதை ஒருநிலைப் படுத்துவது என்பதுதான் பொருள். ஒருநிலைப் படுத்தி, ஒன்றே ஒன்றைப் பற்றி மிகத் தீவிரமாய் சிந்திப்பது என்றும் கூறலாம். இப்படி, மானிட இனம் தியானம் புரிவதும் தேவருலகை எண்ணித்தான்! அப்படியிருக்க, தேவருலகமே தியானம் புரிகிறது என்றால் அது ஆச்சரியமளிப்பதுதானே?

சுட்டுப் பொசுக்குவது தீயின் குணம். அந்த தீயை பொசுக்கவல்ல ஒன்று இந்த உலகில் கிடையாது. தாகம் தணிப்பது நீரின் இயல்பு.

அந்த நீருக்கு தாகம் ஏற்பட்டால் அதை எதை அருந்தும்?

இப்படி, ஏவர் குறித்து நாம் தியானிக்கிறோமோ அவர்களுக்கே தியானம்தான் கடைநிலை ஆயுத மாக கைகொடுக்கிறது என்றால், தியானத்தின் சக்தியை என்னவென்பது!

அப்படிப்பட்ட ஒரு தியானத்தில் தேவருலகமே ஈடுபட்ட போதிலும் அவர்களின் தியானத்தில் ஒரு சிறு மாற்றம். அது என்ன தெரியுமா? அந்த தியானத்தின்போது அந்த மகாவிஷ்ணுவிடமும் சரி, ஈஸ்வரனிடமும் சரி, ஒருவித கோபம் இருந்தது.

அமைதிமயமான தியானத்தில் தேவருலகம் ஈடுபட்டால், பின் அதன் உச்சம் என்பது செய லற்ற நிச்சலமான மோனநிலைதானே? இப்படி, தேவர்கள் தியானத்தில் செயலற்ற ஒரு மோன நிலைக்குப் போய்விட்டால் அதன்பின் மகிஷனை யார் வந்து அழிப்பது?

எனவேதான், இந்த தியானம் புரியும்போது ஒருவகை கோபம் அந்த மும்மூர்த்திகளிடமேகூட அடித்தளமாக அமைந்திருந்தது. சொல்லப் போனால், செயற்கையாக ஒரு கோபத்தை உரு வாக்கிக் கொண்டு தியானித்தனர். இதை சற்று மாற்றி கோபத்தை தியானத்திற்கான மைய நெருப் பாக வைத்தனர்; அந்த நெருப்பு அப்படியே மிக்க கூர்மைக்கு தன்னை மாற்றிக் கொள்ளத் தொடங்கியது.

தீபச்சுடரும் வெப்பமானதே... ஆனால், அதைப் போல ஆயிரம் மடங்கு வெப்பமானது, மின்னலின் ஒரு துண்டுச் சுடர்! அப்படி ஒரு மின்னல் சுடர்போல் தியானத்தில் மும்மூர்த்திகளின் கோபாக்னியும் மாறத் தொடங்கியது.

இந்தக் கோபம், ஒரு வகையில் பார்த்தால் இவர்களின் கருணையால் பிறந்தது என்று கூறலாம். ஒரு அரசன் தன் மக்களை ரட்சிப்பதற்காக அவர்கள் மேல் உள்ள கருணையால் எதிரியோடு கோபத்தோடு யுத்தம் புரிகிறான். ஒரு பறவை தன் குஞ்சுகளைக் காப்பாற்ற அதை கைப்பற்ற வரும் கழுகிடம் கோபத்துடன் யுத்தம் புரிகிறது.

என்ன ஒரு ஆச்சரியம் பாருங்கள்! கருணையின் முனைப்பாக இங்கே கோபம் விளங்குகிறது. அந்த கோபாக்னி மகாவிஷ்ணுவின் தியான

உச்சத்தில் நிலைச்சுடராய் அவர் உடம்பினின்றும் பிரிந்து விண்ணேறத் தொடங்கியது. பரமனின் கோபாக்னியோ வெண்ணீறு போல ஜொலித்தது. பிரம்ம கோபாக்னி செந்நிறத்தில் ஒளிர்ந்தபடி விண்ணேகியது.

இந்த மூன்று சுடர்களும் விண்ணிடை ஒன்று பட்டபோது ஒரு பேரொளி உருவாகிற்று. அதை நேருக்கு நேராக பார்க்கும் வல்லமை அங்குள்ள சூரியனிடம்கூட இல்லை. ஒருவனது கண்களேகூட கூசிப்போயின. அப்படியொரு ஒன்று பட்ட சுடரொளி அது!

மெல்ல அதனிடையே ஒரு பெண்ணின் உருவம் தெரிய ஆரம்பித்தது. அதன் உருவமும் சிரச கேசம், புஜங்கள், கழுத்து இடை, விரல்கள் என்று ஒவ்வொரு தேவரின் தியான ஒளியாலும் உருகிக்கொள்ள ஆரம்பித்தது.

யமனின் தியான ஒளி கேசமாக, வருணனின் தியான ஒளி தொடைகளாக, இந்திர ஒளி இடையாக, சந்திர ஒளி மார்பகங்களாக, அஷ்டவசுக்களின் ஒளி விரல்களாக, குபேரனின் ஒளி காதுகளாக... இப்படி ஒவ்வொரு தேவரும் புரிந்த கோபத்தின் தளததில் அமைந்த தியானச் சுடர்கள் மொத்தத்தில் ஒரு அழகிய பெண்ணின் மொத்த உடம்பாக பரிணமித்த நிலையில்... கொவ்வைச் செவ்வாயும் குறுநகையும் மின்ன, தீடசண்ய சுடர்மிகு விழிகளுடன் வைத்த கண்களை எடுக்கவிடாத தேஜஸுடன் அந்த ஆதிசக்தி உருவாகிவிட்டாள்.

எவளொருத்தியால் தேவருலகு முதல் மூவருலகு தொட்டு புவனங்கள் முற்றாக தோன்றி, அதனுள் ஆயிரமாயிரம் உயிர்களும் தோன்றினவோ... அவை திரும்ப ஒன்றுபட்டால் அங்கே திரும்ப அந்த ஆதி ஜெகத்காரணி தோன்றித்தானே தீரவேண்டும்?

அம்பிகையும் தோன்றிவிட்டாள். அந்தக் காட்சி தேவருலகை பரவசத்தில் ஆழ்த்திவிட்டது.

சொல்லப்போனால், இப்படி ஒரு காட்சிக்காக ஆயிரம் மகிஷன்களும் தோன்றலாம். ஏன் என்றால், அவனை அழித்தாக வேண்டியதன் பொருட்டல்லவா இப்படி ஒரு நோக்கு! இப்படி ஒரு போக்கு?

விண்ணிடை தெரிந்த அம்பிகைக்கு, ஒன்றல்ல... பதினெட்டு கரங்கள்! அப்படி ஒரு கோலத்தில் அவளை தரிசித்த மாத்திரத்தில் தேவருலகே ஜெயகோஷமிடத் தொடங்கிவிட்டது.

அம்பிகையை தங்கள் ஒருமையால் தோற்றுவிக்கச்செய்தாயிற்று! அவளையுத்தத்திற்கு தயார்ப்படுத்த வேண்டுமே? எனவே, தியானத்தில் ஈடுபட்டு கலைந்த நிலையில் தேவர்கள் அவ்வளவு பேரும் தங்கள் சக்தியை முழுமையாக திரட்டி, அதை ஒரு ஆயுதமாக்கி, அந்த ஆயுதங்களை அன்னையின் காலடியில் ஒரு பரிசுப்பொருள்போல வைக்கத் தொடங்கிவிட்டனர்.

அந்தப் பரமன் தனது சூலாயுதத்தையே அவள் திருவடிகளில் கிடத்தினான். அடுத்து, திருமால் தனது சக்கரப் படையை அப்படியே சூலத்துக்கு பக்கமாய் வைத்துவிட்டார். மற்றவர்களும் அணிவகுத்து நின்று தம்தம் ஆயுதங்களை வழங்கத் தொடங்கினர்.

இமயாதிபதியான இமவான், அம்பிகை கம்பீரமாக அமர்ந்திட சிம்ம வாகனத்தையே பரிசாகக் கொடுத்துவிட்டான். இந்தப் பட்டியலில் மாதவனைத் தாங்கும் ஆதிசேஷன்கூட தன் பங்கிற்கு ஒளிமிகுந்த தனது நாகமணியை பரிசாகத் தந்ததுதான் பெரிய ஆச்சரியம். அந்த நாகமணி ஒரு ஆரமாக மாறி, அன்னையின் திருமார்பில் அப்படியே ஜொலித்தது.

மொத்தத்தில், ஒரு ஒளிப்பிழம்பை அழகிய பெண் வடிவமாக்கி, அதன் காலடியில் தேவருலகம் தன் மொத்த சக்திகளையும் கொட்டிக் குவித்து, அந்த சக்தியை சிம்மவாகினியாகவும் ஆக்கிப் பார்த்து, கைகூப்பித் தொழத் தொடங்கிவிட்டது.

இப்படிப்பட்ட அதி அற்புத செயல்பாடு நடந்தது ஒரு கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில்! இந்த நாள் மஹாளயத்துக்கு முன் வந்த காரணத்தால், அம்பிகை இங்கே மஹாலக்ஷ்மியாகவே பார்க்கப் பட்டாள். அதன் காரணமாகவே பதினெட்டு புஜங்களும்கரங்களுமானஇவளை 'அஷ்டாதசபுஜமஹாலக்ஷ்மி'யாக கண்டு, தேவருலகம் அந்த நாமத்தாலேயே பூஜித்தது.

இவளையே சண்டி என்று 'துர்கா சப்தசதி' கூறுகிறது. இந்த பதினெட்டு கரங்களிலும் அக்ஷ

மாலை, தாமரை, அம்பு, சத்தி, வஜ்ராயுதம், கதை, சக்கரம், திரிசூலம், கோடரி என்கிற ஒன்பது ஆயுதங்களும் வலக்கையில் முடிந்துவிட, இடது பாகத்தில் சங்கு, மணி, பாசம், சக்தியாயிதம், காலதண்டம், கேடயம், வில் மதுபாத்திரம், கமண்டலம் என்கிற ஒன்பதுடன் அம்பிகை காட்சி தருகிறாள்.

இவள் வசம் தேவருலகமே ஆயுதங்களை திருவடிகளில் கிடத்தியதல்லவா? அவை அவ்வளவையும் ஒரு நாள் இவளே தேவர்களுக்குத் தந்திருந்தாள். அப்படித் தந்ததை ஒரு மாபெரும் துஷ்ட சக்தியை அழிப்பதற்கு அவள் வசமே திருப்பித் தந்த அந்த நாள் தான், ஆயுத பூஜை தினமாக நம்மால் இப்போது கொண்டாடப்படுகிறது.

இப்பொழுதில் நமது ஆயுத பூஜை நோக்கம் என்பது அவளுக்கு நம் வாழ்வாதாரமான ஆயுதங்களை அவள் திருவடி நிழலில் கிடத்தி, நாம் வாழ்வாங்கு வாழ்ந்திட அருள் வேட்டை நிகழ்த்துவதுதான்.

எப்படியோ மகிஷனை அழிக்க தேவி அவதரித்து விட்டாள். அஷ்டாதச புஜ மகாலக்ஷ்மியாக அவள் சிம்மத்தின் மேல் ஆரோகணித்து மகிஷ வேட்டைக்கும் புறப்பட்டுவிட்டாள்.

மகிஷனுக்கும் செய்தி சென்று சேருகிறது. அவனும் ஒரு கன்னி தன்னை நோக்கி யுத்தம் புரிய வந்திருப்பதை எண்ணி கேலிச்சிரிப்புடன் யுத்தகளத்துக்கு வந்து பார்க்கிறான். அவன் அசுரனானபோதிலும் கொடுத்து வைத்தவன். மிகப் பெரிய பேறு பெற்றவன். தேவர்க்கும் மூவர்க்கும் கிட்டாத காட்சிக்குரிய தேவியின் தோற்றம் அவன் எதிரில்... ஒரு க்ஷணம் அவனது அசுர குணத்தையும் மீறிக்கொண்டு அவனுக்குள் ஒரு திக்குமுக்காடல் ஏற்படுகிறது.

12

'கர்ண பூரித கல்ஹார காங்க்ஷிதா பாங்க வீக்ஷணா
ஹீரா சயோத் பலாகார விலஸத் கிருஷ்ணதாரகா!'

அம்பிகையின் காதுகளில் அழகிய ஆம்பல் மலர்கள் செருகப்பட்டு, அவற்

றின் கூரிய பொம்டு முனையானது அம்பி கையின் முகத்தில் இலங்கும் நிலை... அல்லி மலர்களைப் போன்ற கண்களைப் பார்த்து வியக்கின்றனவாம். அதாவது, அசலாகிய ஒரு புஷ்பமே அன்னையின் கண்களிரண்டையும் பார்த்து அசந்து போகிறதாம். அந்த அளவுக்கு அன்னை யின் திருமுகத்தில் அவளது விழிகள் காட்சி தருகின்றனவாம்!

அம்பிகையின் எழில் தோற்றம் மகிஷனை ஒரு விநாடி கால அவஸ்தைக்கே ஆளாக்கி விடுகிறது.

எந்த திருவுருவுக்காக தேவரும் மூவரும் தவம் இயற்றினார்களோ... எந்த திருஉருவின் திருவடிகளை மட்டுமாவது பார்த்துவிட வேண்டும் என்று முனிவர்களும் ரிஷிகளும் மனதை ஒரு புள்ளிக்குள் அடக்கி போராடுகின்றார்களோ... அந்த திருஉருவம் மகிஷனை தவறாக எண்ணச் செய்துவிட்டதுதான் ஆச்சரியம்!

மகிஷாசுரனை தேவி சம்ஹரிக்கும் சம்பவத்தை தேவிபாகவதம் ஒருவிதமாகவும், துர்கா சப்த சதி ஒரு விதமாகவும் கூறுகிறது. மகிஷன் தேவியைப் பார்த்து மையல் கொண்டது தேவிபாகவதத்தில்! சப்த சதியோ அந்த மையலை தவிர்த்து அவனது அய்ராத எதிர்ப்பை அணு அணுவாக விவரிக்கிறது.

இவ்வேளையில் சான்றோர்களுக்கும் சரி... சாமான்யர்களும் சரி... பல கேள்விகள் எழும்.

பல கோடி ஆண்டுகள் தவம் செய்தாலும் கிட்டாத தரிசன பாக்கியம் ஒரு அசுரனுக்கு அவனது கொடுமையான செயல்கள் மூலமாகவும் கிட்டி விடுகிறதே... இது நியாயம்தானா? ஒரு மூர்க்கனை இப்படியெல்லாம் தரிசனம் தந்துதான் அழிக்க வேண்டுமா? அன்னை நினைத்தால் அவனை வேறு விதத்தில் சுலபமாக அழிக்க முடியுமோ?

இந்தக் கேள்வியிலிருந்து 'அவள்தானே உலகை படைத்தவள்... உலகில் உருவான நல்லவை தீயவை அனைத்துமே அவள் அருளால்தானே உருவாயின! அப்படியிருக்க, அவற்றுக்குள் ஏற் படும் மோதல்களை அன்னை நினைத்த மாத்தி ரத்தில் நேர் செய்ய இயலாதா? அதாவது, அவ

ளால்தானே மகிஷனும் உருவானான். அவள் படைத்த மகிஷனை வதைக்க அம்பிகை ஒரு யுத்தம் நிகழ்த்தவேண்டுமா, என்ன?' இப்படியும் கேள்விகள் எழலாம்.

நுட்பமாக சிந்தித்தால் இதற்கான விடை கிடைத்து விடும். அம்பிகை இங்கே தானாக வர வில்லை. தேவர்கள்தான் தங்கள் தியான பலத் தால் அவளை தோற்றுவித்து, தங்கள் ஆயுதங் களை அவளுக்கு வழங்கி, 'எங்களை நீதான் காத்து அருள வேண்டும்' என்கின்றனர். அவளும் தேவசக்திகளின் பரிதாப நிலையை உத்தேசித்து யுத்த கோலம் பூணுகிறாள்.

இப்படி இவளை யுத்தத்துக்கு தயார்ப்படுத்திய வர்களைப் போலத்தான் அவளிடம் பக்தி செலுத் தும் நாம் எல்லோரும்! துன்பம் வரும்போதெல்லாம் நாம்இவளை துதி செய்வோம். அந்த துன்பம் நீங்கிய பிறகோ மாயா உலகின் பிடிக்குள் சிக்கி, இன்பமாய் வாழ்ந்திட என்னவெல்லாம் வழியுண்டோ... அதில் செல்லத் தொடங்கிவிடுவோம். ஒரு வகையில், நம் பக்தியாலே அம்பிகையை பீடிப்பதும், பின் மறப்பதும் அல்லது சற்று அவளை விலக்கிவைப்ப தும், பிறகு அவள் காலடியில் விழுந்து கதறு வதும்தான் நம் வழக்கம்.

மகிஷன் போன்ற அரக்கர்கள் இதற்கு நேரெதி ரானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களை முழுமையான மாயைக்குள் வைத்துக்கொண்டு... அதற்காக அன்னையிடம் அஞ்சாதவர்களாக, அவசியப்பட்டால் அன்னையோடு யுத்தம் நிகழ்த்தவும் தயாராக உள்ளனர்.

சுருக்கமாகக் கூறுவதனால், பக்தியோடு சரணா கதி புரிந்து, மாயை வசம் உழன்று திரும்பத் திரும்ப தவறு செய்து, பின் திரும்பத் திரும்ப வருந்தித் திருந்துபவனைவிட, மாயையாகவே இருந்து விடுகின்றவன் அன்னை முன் ஒரு விதத்தில் மேலானவனாக உள்ளான். எனவே தான், அவனுக்கு மற்றவர்களைவிட வேகமாக தரிசனமும் யுத்த முடிவில் முக்தியும் வாய்த்து விடுகிறது.

மகிஷனுக்கும் அப்படித்தான் நேரப்போகிறது.

அம்பிகையை நேரில் கண்ட மகிஷன் எடுத்த எடுப்பில் அவளோடு போர் புரிய தயாராக இல்லை. 'எவளோ ஒரு கன்னிப்பெண்... இவளோடு நான் மோதுவது என் வீரத்துக்கு இழுக்கு!' என்றே எண்ணுகிறான்.

அம்பிகையோ அவனை ஒரு சிறு குழந்தை யாகவே பார்க்கிறாள். அவன் எதிரில் விண்ணுக்கும் மண்ணுக்குமாக விஸ்வரூபம் எடுத்து நிற்கிறாள். பதினெட்டு கரத்தோடு அன்னை நிற்கும் அந்த விஸ்வரூப கோலம் என்பது, எக்காலத்திலும் எந்த ஒரு தவசிக்கும் கிடைக்காத கோலம்! அவர்களுக்கு இப்படி ஒரு கோபத்தோற்றத்தை பார்த்திடும் அவசியம்தான் கிடையாதே? எனவே, இந்தக் காட்சி முதலும் கடைசியுமான அரிய காட்சி.

இதற்கு பொருள் 'அற்பனே... இதைக் கண்ட பிறகாவது திருந்திவிடு' என்பதுதான்.

அவனோ 'இந்தப் பெண் சில நிமிடங்கள் கண்கட்டு செய்து என்னை பயமுறுத்தப் பார்க்கிறாள்' என்றே எண்ணுகிறான்.

இங்கேயும் நமக்கு சில கேள்விகள் எழலாம்.

'மகிஷன் நல்லவனாகிவிட வேண்டும் என்று அன்னை கருதினாலே, நல்லவனாகிவிடமாட் டானா? எதற்கு இந்த பெருமுயற்சி? அன்னை இப்படி முயற்சிப்பதை பார்த்தால், 'அன்னை அவனைப் படைக்கவில்லை. அன்னைபோலவே அசுரனும் தானாக உருவாகியிருக்க வேண்டும்' என்று தானே தோன்றுகிறது?

ஒரு மனிதன் விழித்திருக்கும் நிலை, தூங்கும் நிலை என்று இருவித நிலைப்பாடுகள் உள்ளன. இதில் விழித்திருக்கும்போது 'நாம் இருக்கிறோம்' என்பதில் ஐயப்பாடு இல்லை. தூங்கும்போது நாம் என்னவாகிறோம்? அப்போது நாம் இருக்கிறோமா, இல்லையா?

திரும்பவும் விழிப்பு வந்து நாம் எழுந்திருப்பதை வைத்து, 'நாம் இருந்ததால்தானே மீண்டும் விழிப்பு வந்தது. எனவே, நாம் உறக்கத்தின்போது இருக்கிறோம்; ஆனால், நாம் இருப்பதை உணரமுடியாத நிலையில்!' என்று ஒரு விடை கிடைக்கிறது.

'அது எப்படி? ஒன்று இருக்கிறது என்றால் எல்லா காலங்களிலும் இருந்துதானே தீர வேண்டும்' என்று மறுகேள்வி எழும். 'அது ஒருவித மரணநிலை. பிறகு, விழிப்பு ஏற்படுவது என்பது மீண்டும் பிறக்கும் நிலை' என்றெல்லாம் வியாக்கியானங்களை வெளிப்படுத்துவார்கள் பலர். இதெல்லாம் தர்க்கம். இப்படி நம்மைச் சுற்றியே நாம் உணர்ந்தும் உணராமலும் புதிராக உள்ள விஷயங்கள் பற்பல உண்டு.

மகிஷன் விஷயமும் அப்படித்தான்! அம்பிகை இங்கே அவன் வரையில் என்ன நினைக்கிறாள் தெரியுமா? 'நாம் ஏன் இவனை நல்லவனாக்க வேண்டும் என்று எண்ண வேண்டும்? அவனாகவே நாம் அளிக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நல்லவனாக மாறுகிறானா என்று பார்ப்போம்!'

மகிஷாசுர வதத்தை இப்படி உளவியல் ரீதியாக விரிவாகப் பார்த்திட ஒரு காரணம் உள்ளது. ஒரு வகையில், மாயையில் சிக்கியிருக்கும் நமது மனம்கூட மகிஷன் போலத்தான்! அம்பிகையாகப் பார்த்து நம் மேல் கருணை கொண்டு சிந்தித்தாலன்றி நம்முள் பக்தியோ பணிவோ வராது. இதைத்தான் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்றார் தாயுமானவர்.

ஆதிசேஷனும் விலங்கு ரூபம்தான்... அனுமனும் விலங்கு ரூபம்தான். கருடனும், நந்தியும்கூட விலங்கு ரூபங்கள்தான்... அவ்வளவு ஏன், அம்பிகையை தாங்கும் சிம்மமும் விலங்குதானே? இவை எல்லாம் நாம் வணங்கும் நிலையில் அல்லவா இருக்கின்றன. மகிஷன் மட்டும் ஏன் மாறுபட்டுப் போனான்?

அம்பிகை கருணை செய்யாததால்...! அவள் கருணை இல்லாதவை எப்படி இருக்கும் என்பதை இந்த உலகமும் எப்போது உணர்வது? இப்போது மகிஷன் மூலமாக நாம் அதை காண்கிறோம்.

அம்பிகையின் விஸ்வரூபத்தை மாயரூபமாக கருதிய மகிஷனும் அசராமல், "இப்படி விஸ்வரூபம் எடுத்துவிட்டதாலேயே உன்னை என்னால்தான் கொல்லமுடியும் என்றில்லை... என் படையில் ஒரு பகுதி போதும் உனக்கு!" என்கிறான்.

அதேபோல, அம்பிகைமேல் அவனது படை தான் முதலில்பாயத் தொடங்குகிறது. ஒரு வகை யில் இப்படி நடப்பதும் நல்லதுதான். மகிஷன் மட்டும் அழிக்கப்பட்டால் போதுமா என்ன... அவ னது அஞ்ஞானத்தின் வகையறாக்களும் அழிக்கப் பட்டால்தானே முற்றாக அவனை அழித்தாக ஆகும்? இல்லாவிட்டால் அவனது மிச்சங்கள் காத்திருந்து பின்னாளில் வேறு வடிவத்தில் கிளம்பி வரலாம் அல்லவா?

மகிஷனின் படையும் ஒன்றும் லேசானதல்ல. சிஷீரன் என்று ஒரு சேனாதிபதி. சாமரன் என்று ஒருவன். மஹாஹனு, உதக்ரன், சுசிலோமன், பாஷ்கலன், பிடாலன் என்று அவனுக்கு ஏழு சேனாதிபதிகள்.

சப்தஸ்வரங்கள் போல இவர்கள் சப்த ரகங் கள்! இவர்கள் ஒவ்வொருவருக்கும்கூட தனித் தனியே வர சித்தி உண்டு. சிஷீரன் எப்போது கொல்லப்பட்டாலும் உடனே உயிருடன் எழுந்து விடுவான். இவனைத் தொடர்ந்து பன்னிருமுறை கொன்றால் மட்டுமே இவன் முற்றாக உயிர் துறப்பான்.

உதக்ரனுக்கு ஆயுதங்களால் மரணம் கிடை யாது. வாளோ வேலோ எதுவும் இவனை சொல்ல முடியாது.

சுசிலோமன் மண் மீது நின்றபடி இருக்க... அவனைக் கொல்ல முடியாது. அவனை விண்ணில் ஏறச் செய்து பின்னர்தான் கொல்ல முடியும்.

பாஷ்கலனை தலையால் அடித்தால்தான் உயிர் போகும். பிடாலனை வெட்டிய உடனேயே உடம்பின் முக்கிய பாகத்தை விழுங்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் அவை ஒன்றுசேர்ந்து உயிர்த்தெழுந்து விடுவான்.

இப்படி இவர்களிடம் ஆளுக்கொரு வரசித்தி!

இவர்கள் தனித்தனியே அம்பிகை மீது தங்கள் படைகளோடு யுத்தகளத்துக்கு வந்து தங்கள் வீரத்தைக் காண்பிக்க தொடங்கிவிட்டனர்.

ஒருவிதத்தில் அம்பிகைக்கு இவர்களைக் காண பரிதாபமாக இருந்தது. காலடியில் நடமாடும் எறும்புக் கூட்டத்தை கருணையோடு பார்க்கும் ஒருவர் அவற்றை மிதித்துவிடாதிருக்க

காலைத் தூக்கி வேறு இடத்தில் வைப்பார். அந்த எறும்புகளுக்கோ அறிவோ ஆற்றலோ அறவே கிடையாது. அது அந்த கால்களை கடிக்க முயன்று, கருணை உள்ள மனத்தவரைகூட கோபம் கொள்ள வைத்து, பின் அவர் கால்களாலேயே மிதிபட்டு முடிவை தேடிக்கொள்ளும்.

இவர்களிடமும் அம்பிகை அவ்வாறே நடந்து அவர்களை அழிக்கிறாள். ஒரு கட்டத்தில் அம்பிகையின் சிம்மம் அவளை விட்டு விலகிப்பாய்ந்து அசுரப் படைக்குள் புகுந்து ஒரு ஆட்டம் போடுகிறது.

அதன் கர்ஜனைக் குரல் விண்ணுலகெட்டும் எதிரொலித்திட, முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும் கூப்பிய கரங்களோடு அந்த திருக்காட்சியை குன்றாத பரவசத்தோடு பார்த்தபடி உள்ளனர்!

13

'நேத்ர பங்கேரு ஹாந்தஸ்த்த ப்ரமத்ப்ப்ரமர தாரகா!
கரளாவ்ருத கல்லோஸ நிமேஷாஞ்சன பாஸீரா...'

அன்னையின் விழிகள் இரண்டும் ரீங்காரமிட்டுப் பறக்கிற கருவண்டு களைப் போல் இருக்கின்றனவாம். இமை களும் அதில் பூசப்பட்டிருக்கும் கருமை யான மையும் பாற்கடலின் கரையோரம் ஒதுங்கிய அரிய ஆலகால விஷத்தை போன்றிருக்கின்றனவாம்.

விஷம் என்பது உயிர்களுக்கு முடிவைத் தரக்கூடியது. அதேபோல, அன்னையின் அழகிய விழிகள் இரண்டும் நம்மீது பட்டாலும் நமக்கொரு விமோ சனம் உண்டு. நமக்கும் பிறவிக்கான முடிவு ஏற்பட்டு விடுகிறது.

மேற்காணும் துர்கா சஹஸ்ரநாம வரிகளின் பொருள் இது போன்ற சூட்சமத்தையே விளக்குகிறது!

தேவியும் மகிஷனும் போர் புரியும் யுத்த களத்தில் தேவியின் சிம்மமும் களத்தில் இறங்கி

கர்ஜிக்கத் தொடங்கிவிட, யுத்தகளம் ஒரு பெரும் வக்ரம் நோக்கிச் செல்லத் தொடங்கியது. மகிஷன், "முதலில் என் படைகளுக்கு பதில் சொல். பிறகு என்னிடம் வா!" என்று தன் தளபதிகளை முன் நிறுத்தவே, தேவியும் பதிலுக்கு தனது அரிமாவை அவிழத்துவிட்டாள்.

அது, யுத்தகளத்தில் யானை மேலமர்ந்து போர் புரிய வந்த சாமரனைத்தான் குறிவைத்தது. யானையில் முன் மத்தகப் பகுதி மேல் கால் வைத்து ஏரிய அரிமா, சாமரன் முன் தன் பின்னிரு கால்களால் நின்றபடி எழுந்து, தன் வலது முன் காலையே ஒரு கரமாக பாவித்து சாமரனின் கன்னத்தில் ஒரு அறைவிட்டது.

அறையா அது? சாமரனுக்கு பொறி கலங்கி விட்டது. அவன் சுதாரிப்பதற்குள் அடுத்த அடி... சாமரனின் தலை துண்டாகி கீழே விழப் போனது. அதை சிம்மமானது கீழே விழவிடவில்லை. அதை பாய்ந்து கவ்விக் கொண்டு திரும்பி வந்து ஆக்ரோஷமாய் நிற்கும் தேவியின் காலடியில் போட்டது.

தேவியின் சிம்மத்தின் இந்த வேட்டை மற்ற வர்களை சிலிர்த்தெழ வைத்தது, பதிலுக்கு அவர் கள் 'இந்த சிம்மத்தை முதலில் ஒழித்துவிட்டுத் தான் அடுத்த வேலையைப் பார்ப்பது' என்பது போல சிம்மத்தை சுற்றி வளைக்க முற்பட்டனர்.

சிம்மமாவது அசருவதாவது?! அது பதிலுக்கு சுற்றி வந்து அவர்களை கர்ஜித்தே பயமுறுத்தியது. 'அன்னைக்கும் மகிஷனுக்குமான யுத்த களத்தில் நிகழ்ந்த இதுபோன்ற காட்சிகளை விஸ்தாரமாக பார்க்க வேண்டுமா? இரண்டு படைகளும் மோதிக் கொண்டன... அன்னை இறுதியில் வெற்றிபெற் றாள் என்று சொன்னால் போதாதா?' என்று சிலர் கேட்கலாம்.

யுத்த களத்து காட்சிகளை விஸ்தாரமாய் பார்ப் பதில் பல நுட்பங்கள் உள்ளன. அன்னையானவள் மகிஷனை அழிக்க அவளுக்கு ஒரு நொடிப்பொழுது போதும். ஆனால், அந்த நொடிப் பொழுதுக்குள் அவள் செல்லவே விரும்பவில்லை. யுத்தம் நீடிக்க நீடிக்க அவள் மகிஷனுக்கும் சரி, மற்றவனுக்கும் சரி, சந்தர்ப்பங்களை அளித்துக் கொண்டே இருக்

கிறாள். ஆனால், அஞ்ஞானிகளான மகிஷப் படை யினருக்கும் சரி, மகிஷனுக்கும் சரி... அது புரிய மறுக்கிறது. இதுதான் அஞ்ஞானத்தின் குணம்!

சத்தியத்தை எதிர்ப்பதும் அதை அடக்கி ஆள நினைப்பதும்தான் அஞ்ஞானத்தின் குணம். அது இறுதிவரை தன்னை மாற்றிக் கொள்ளவே கொள்ளாது. கீழே விழ நேர்ந்தால் உடைந்து போவது என்பது எப்படி கண்ணாடியின் தன் மையோ, அப்படி ஓர் இயற்கையான குணம் இது.

இந்தக் குணத்தை, இதற்குண்டான பதில் குணத்தோடு சந்திப்பதுதான் சரி! அதாவது, அசு ரன் என்பவன் இறுதிவரை திருந்தாதவன் என் றால், அதே இறுதிவரை திருந்த சந்தர்ப்பம் தருவது தான் தேவ சக்தியின் தன்மை. அதைத்தான் தேவி இங்கே செய்கிறாள்.

தேவியின் சிம்மமே, அசுரனின் படைத்தளபதி களை... அவர்களின் வரசித்தி அறிந்து, அதற் கேற்ப கொன்று முடிக்கிறது. விட்டால் அது மகி ஷனையேகூட இரண்டில் ஒன்று பார்த்துவிடும். ஆனால், தலையிருக்க வாலாடக் கூடாது. மகி ஷனை தேவி சம்ஹரித்தால் அவள் 'அஷ்டாதச புஜ மஹாலக்ஷ்மியாக' வடிவெடுத்து, கோலத்தில் எழுந்து நிற்பதற்கு ஒரு சிரேஷ்ம் இல்லாமல் போய்விடுமே?

இறுதியாக மகிஷன் தானே களத்தில் இறங்கு கிறான். எருமை சிரசும் மனித உடம்புமாக இருந்த மகிஷன் முற்றாக தன்னை ஒரு எருமையாகவே மாற்றிக் கொண்டு யுத்தகளத்தில் பிரவேசிக் கிறான்.

தேவியின் யுத்தகளத்தில் சிம்மத்தோடு கூடி அவளது பரிவாரங்களும் யுத்தம் செய்தன. மகிஷன் எருமை வடிவில் அவர்களுக்கு நடுவில் புகுந்து, அவர்களை தன் சிரத்தில் உள்ள கொம்புகளால் குத்தியும் காலால் மிதித்தும் கொன்றான்.

மரணமிலா பெருவாழ்வு பெற்ற தேவியின் பட யினரைப் பொறுத்தவரை அது மரணமில்லை. மாறாக, அது ஒரு மாற்றம். அவனால் உயிர் பிரிந்த மாத்திரத்தில் திரும்ப அவர்கள் உருக்கொண்டார் கள்.

இப்படி, மகிஷன் எருமையாக மாறி தேவியின் படையோடு மோதிவிட்டு, ஆக்ரோஷமாக சிங்கம் கர்ஜித்ததுபோலவே தன் இயல்புப்படி, மூர்க்கமாக கத்தினான். அப்படியே தன் கொம்புகளால் மேகக் கூட்டத்தை கிழித்து, கண்ணில் பட்ட மலைகளை பெயர்த்துப் போட்டு, ஒரு அட்ட காசத்தை முடித்துவிட்டு, நேராக அன்னை மீது பாய்ந்தான். அன்னை எதனாலோ அவனைப் பார்த்து சற்று பரிதாபப்பட்டு, ஒரு தாயானவள் அறிவிழந்துவிட்ட தன் மகனைப் பார்ப்பது போல பாசத்தோடு பார்த்தாள்.

இந்தப் பாசம் வேலை செய்தது. மகிஷம் அப்ப டியே அந்தப் பாசத்துக்கு கட்டுப்பட்டு அமைதியாக நின்று விட்டது. ஆனால், உள்ளடக்கமாக இருந்த மகிஷனின் அஞ்ஞானத்தில் மாற்றமில்லை. எரி கிற நெருப்பை கொண்டு தண்ணீரையே தீண்டி னாலும், அது சூடாகி நெருப்பின் குணத்தையே நம்மிடம் காட்டும். அது போல எருமை மாடாகிய மகிஷம் அடங்கினாலும், மகிஷனின் மனது உடனே சுதாரித்து மனித வடிவம் எடுத்து அன்னையே நோக்கிப் பாய்ந்தது.

இப்படி தன் மாயாசக்தியால் மாறிமாறி வடிவங் கள் எடுத்து யுத்தம் செய்த மகிஷனை, இதற்கு மேல் பொறுக்க முடியாது என்னும் ஒரு கட்டத்தில் அன்னையும் சம்ஹாரிக்க தயாராகிவிட்டாள்.

மகிஷன் பெற்ற அவ்வளவு வரசித்திகளும் வெளிப்பட்டுவீணாக வேண்டும் என்று அன்னை விரும்பினாள். அவ்வளவும் வெளிப்பட்டு அழிந்து முடிந்தது. இப்போது மிச்சம் இருப்பது அவன் உயிர் ஒன்றுதான். அதை சம்ஹரித்து விட்டால் அதன்பின் எந்த தீயவைக்கும் அஞ்ஞான மிச்சத்திற்கும் இடமில்லை.

அஞ்ஞானத்தை மட்டும் மிச்சம் வைக்காமல் அழித்து எடுத்து ஒழித்துவிட வேண்டும். அது அணுக்கதிர் போன்றது. அது ஒரு துகளின் கோடியில் ஒரு துண்டு பகுதியாக இருந்தாலும் சரி, அந்த கோடியாகவே இருந்தாலும் சரி... இரண்டுக்கும் ஒரே மதிப்பு தான்!

அன்னையின் எதிரில் நின்ற மகிஷன் தன் நெஞ்சில் அடித்துக் கொண்டு யுத்த கோஷம்

இட்டான். பழைய படி மனித உடம்பும் எருமை சிரசுமாக தன் முந்தைய தோற்றத்துக்கே வந்து விட்டான்.

தன் இரு கொம்புகளால் அன்னையின் வயிற்றை கிழிக்கும் ஆவேசத்தோடு தலையை குனிந்தவனாக, கொம்பினை ஈட்டி முனைபோல நீட்டிக் கொண்டவனாக பாயப் பார்த்தான்.

அதுதான் தருணம் என்று அன்னையின் வீர வாளும் மின்னலாய் ஒரு வீச்சு வீசியது. அப்படியே கழுத்திலே வாள்வெட்டு பட்டு அன்னையின் காலடியில் விழுந்தான். விழுந்தவன் நெஞ்சின்மீது அன்னை தன் திருக்கால்களை தூக்கி வைத்து அழுத்தினாள். அப்போதுகூட அவன் திருந்தி 'மன்னித்துவிடு தாயே' என வேண்டவில்லை. (வேண்டவும் மாட்டான்). மாறாக, அந்த நிலையிலும் வேறு ஏதாவது மாயவடிவம் எடுத்து, அந்த உடம்பை விட்டு வெளியேற முடியுமா என்று பார்த்தான். அடுத்த நொடி அன்னையின் சூலாயுதம் அவன் கழுத்தில் இறங்கி; அவனது பிராண மூச்சு வெளியேறாவண்ணம் தடுத்து நிறுத்தியது.

அந்த நொடிதான் அவனுக்குள்ளும் மரண வேதனை ஆரம்பமாயிற்று. அவனது அகோரக் கூக்குரல் எட்டுத் திக்கும் எதிரொலிக்கத் தொடங்கி, மொத்த தேவருலகையே அந்தக் காட்சியைப் பார்க்கச் செய்தது. சில நொடிகளுக்குப் பின் மகிஷன் உயிர் பிரிந்து உடம்பும் அடங்கியது.

அப்போது பதினெட்டு கரங்களுடன் ரத்தச் சிவப்பாய் தோன்றிய அம்பிகையின் திருமுகத்தில், அதுவரை எவரும் பார்த்திராத ஆங்காரம்! அவளைச் சுற்றிலுமான வெளி எங்கும் ஒளியும் தகிப்பும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த உஷ்ண ஜ்வாலம்!

எந்தத் திருவடிக்காக தேவரும் மூவரும் தவம் இயற்றிக் கொண்டிருக்கிறார்களோ... அந்த திருவடிகள் அசுரனின் நெஞ்சின்மேல் இருப்பதை பார்க்கும்போது, தேவனாக இருப்பதைவிட அசுரனாய் இருப்பது தான் மேலோ என்றுகூட அங்கிருக்கும் தேவர்களுக்கு தோன்றுகிறது.

அவ்வளவு பேரும் மலர்மாரி பொழிகின்றனர். ஆனந்தக் கூத்தாடுகின்றனர். அன்னையை சாந்தப்

படுத்தும் விதமாக அவளைப் போற்றித் துதிக்கத் தொடங்குகின்றனர்.

மகிஷனை அன்னை மர்த்தளம் புரிந்த அந்த திருக்காட்சியால் அம்பிகை இங்கே மகிஷா சுரமர்த்தினியாகிறாள். துர்கமனை சம்ஹாரம் செய்ததாலே துர்கை ஆனாள். இங்கே மகிஷனை மர்த்தனித்தால் மகிஷாசுரமர்த்தினி ஆகிறாள். மர்த்தனம் என்றால் ஒன்றை அதன் தன்மை கெடாதவாறு மாற்றுவது. அரிசியைக் கரைத்து மாவாக்கும்போது அரிசியின் வடிவம் மாறுகிறது. ஆனால், தன்மை மாறவில்லை... அது போன்றது இதுவும்!

அன்னையோடு கடைசிவரை ஈடுகொடுத்து நின்றதாலோ என்னவோ... அவளை வணங்கிடும் போது அவள் காலடியில் கிடக்கும் மகிஷனையும் சேர்த்தே வணங்குகிறோம். மறுபுறம் அவளது அரிமா நின்றிட. நமது துதிகள் அதற்கும் சேர்த்துத்தான்!

இப்படி அன்னை சக்தியின் ராஜ்ஜியத்தில் அவளது உள்ளார்ந்தவைகளுக்குள் ஆயிரம் நுட்பங்கள்... அதில் ஆயிரம் அர்த்தங்கள்!

மகிஷனை அவள் சம்ஹரித்ததன் வரலாறு, அவளது குணம், அவளது வீரம்... அவளது தன்மையை நாம் ஓரளவு புரிந்துகொள்ள துணை செய்யும். அவளது கருணையை நமக்கு உணர்த்தும சம்பவங்கள் எவ்வளவோ உள்ளன. அவற்றையும் காண்போம்!

14

'தீக்ஷணாக்ரதார ப்ரத்யும்ந சஸ்த்ர ப்ரயஸ்த்த்ர வீஷணா... முக சந்த்ர ஸ்தாபூர லுடன் மீநாப லோசநா'

அன்னையின் பார்வை கூர்மையான அம்பு போல இருக்கிறது. மீன்கள் போல வும் இருக்கிறது! இதுவே அஸ்திரம் போல வும் இருக்கிறது. அதாவது, அன்னை யின் பார்வையானது அம்பாக, மீனாக உருவகப்படுத்தப்பட்டாலும், அது அஸ்தி ரம் போல தாக்கி நமது பாவங்களை

உடைத்தெறிவதாக உள்ளது என்கின்றன இந்த வரிகள்!

அன்னை சக்தி மூவரும் செய்த பெரு முயற்சியால் அஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மியாக தோன்றி, பின் மகிஷனை சம்ஹாரம் செய்து மகிஷாசுரமர்த்தினியான வரலாற்று பார்த்தோம்.

அழிக்கப்பட வேண்டிய அசுரன் ஒரு வழியாக அழிக்கப்பட்டு, தேவருலகம் தப்பித்தது. தங்களுக்கு கருணை செய்த அன்னை மகாசக்தியை தேவருலகமே கொண்டாடத் தொடங்குகிறது. மீண்டும் ஒரு தர்ம ராஜ்ஜியத்தை நிறுவிக்காட்டிய அவளுக்கு நன்றி காட்ட வேண்டியது தேவர்களின் கடமையல்லவா?

எனவே, பூவுலகில் எப்படி தெய்வங்களை தேரில் வைத்து இழுத்துவந்து மலர்மாரி பெய்து, விழுந்து வணங்க வேண்டுவோமோ... அதுபோல அன்னையை தேவர்கள் வரவேற்று அழைத்துச் செல்கின்றனர். இந்திரன் தன் இந்திரசபைக்கு அன்னையை அழைத்துச் சென்று தனது ஆசனத்தில் அமரச் செய்து அவள் காலடியில் அமர்ந்து கொண்டு தனது பணிவையும் பக்தியையும் காட்டி மகிழ்கிறான்.

ஹிரண்யனை நரசிம்மமூர்த்தி சம்ஹாரம் செய்த போதும், ஹிரண்யன் அமர்ந்த சிம்மாசனத்தில் பிரகலாதன் அமர்ந்துவிடவில்லை. அதில் நரசிம்ம மூர்த்தியை அமரச் செய்து புனிதப்படுத்திய பிறகே அதில் அமர்ந்தான் அதேபோல இங்கே இந்திரன் நடந்துகொள்கிறான்.

அன்னையின் திருமுகத்திலும் ஆயிரம் சூரியனின் ஒருமித்த ஒளிபோல ஒரு தேஜஸ்! மனதுக்குள் அன்பும் கருணைம பிரவாகமாக பெருக்கெடுக்கிறது அவளிடம்! அனைவரும் மாறி மாறி துதி செய்யச் செய்ய, அவள் உள்ளம் குளிர்ந்து போகிறது.

அரிய அவ்வேளையில் அவளும் தேவர்களைப் பார்த்து, "உங்களுக்கு வேண்டிய வரங்களை கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்!" என்கிறாள். அவ்வாறு அவள் கூறுவது அருள்வது போலவும் இருக்கிறது; தேவர்களை ஆழம் பார்ப்பது போலவும் இருக்கிறது.

அசுரம் தழைப்பதே தேவம் புரியும் தவறு களால்தான். இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற நியதிகள் உடைபட்டு, சதாசர்வ காலமும் இன்பத்தில் வீழ்ந்து கிடக்கும்போது, இன்பத்தின் அருமையும்கூட தெரியாமல் போய்விடுகிறது. அப்படி எல்லாம் இவர்கள் இருக்கப்போய்தான், மகிஷன் உருவானான். அவனை ஒழிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. இந்தப் போராட்டத்தில் அவர்கள் பாடம் கற்றுக் கொண்டது உண்மை என்றால், அது இப்போது அவர்கள் கேட்கப்போகும் வரத்தில் தெரிந்துவிடும்.

அன்னையின் முகத்தில் ஒரு குறும்புப் புன்னகையும் தெரிகிறது. நல்லவேளையாக தேவர்கள் அன்னையிடம் 'அதைக் கொடு, இதைக் கொடு...' இதுபோல இன்னொரு முறை அசுரன் எவனாவது தேவருலகை, ஆட்டி வைக்க வந்தால், அவனை நின்ற இடத்திலேயே எரித்து விடும் நெருப்புக் கண்களை கொடு... என்றெல்லாம் சுயநலமாக எதையும் கேட்டுவிடவில்லை.

"அம்மா, எப்பொழுதும் உன்னை [redacted]வாத மனதை எங்களுக்கு கொடு... அதுபோதும்" என் கின்றனர்.

உண்மையில் இதுதான் மிகப்பெரிய சுயநலம் அதாவது, அன்னையிடம் வரங்களை கேட்பதற் கும் பதிலாக அன்னையையே கேட்கும் செயல்!

அன்னையும் அழகான புன்னகையோடு அவர் களுக்கு அதை அருள்கிறாள். அப்போது தேவர்கள் ஒரு சின்ன திருத்தம் சொல்கின்றனர்.

"அம்மா, இந்த வரம் எங்களுக்கு மட்டுமல்ல... உன்னை எந்த ஒரு உயிர் துதி செய்தாலும் அவர் களை நீ ஓடிச் சென்று ரட்சித்துவிட வேண்டும். அம் மட்டில் தேவர், மானிடர், கந்தர்வர், கிம்புருடர், நாகவர், அரக்கர் என்கிற பாகுபாடே இருக்கக் கூடாது" என்கின்றனர்.

இதை இவர்கள் கேட்டாலும் கேட்காவிட்டா லும், அதுவே அன்னையின் திரு உள்ளம்! பௌர் ணமியன்று தோன்றும் சந்திரனைப் பார்த்து, "ஹே சந்திரா... நீ அடுத்த பௌர்ணமி அன்றும் இதேபோல பிரகாசிக்க வேண்டும். மறந்துவிடக் கூடாது" என்று ஒருவ சொன்னால் எப்படி இருக்கும்? அப்படித்தா [redacted]துவும்!

தேவியின் மகாத்மியத்தை பற்றி கூறும் 'ஸப்தசதி' என்கிற மார்க்கண்டேய புராணத்தில் இந்த விஷயங்கள் காணக் கிடைக்கின்றன.

அன்னை துர்க்கையின் அடிப்படைத் தோற்றங்கள் ஒன்பது! வந்ஹி துர்கை, வனதுர்கை, ஜல துர்கை, விஷ்ணுதுர்கை, சூலினிதுர்கை, அசுரிதுர்கை, தீபதுர்கை, வைணதுர்கை மற்றும் மகாதுர்கை.

எதற்கு இப்படி தனித்தனித் தோற்றங்கள்? ஏன், சர்வ உலகின் ஒரே தொகுப்பாக... தேவர்கள் மூவர்கள் ஆகியோரின் ஒரே உள்ளடக்கமாக... அன்னை ஆதிபராசக்தியாக மட்டும் எப்போதும் இருக்கக்கூடாது? இப்படி கேள்விகள் எழலாம். ஆனால், இப்படி அவள் பிரிந்து தோற்றம் கொண்டிருப்பதன் பின்னே சூட்சும காரணங்கள் உள்ளன.

உலகில் ஒரு உயிர் பிறக்கும்போதே அதற்கு ஒரு கணக்கு ஆரம்பமாகி விடுகிறது. அனுபவித்து தீர்க்க வேண்டிய பலன்கள் பட்டியலிடப்பட்டும் விடுகின்றன. இந்த பலன்களை உற்று கவனித்தால், அது ஒன்பது வகைக்குள் அடங்கிவிடுவது புரியும். துக்கம், மகிழ்ச்சி, கோபம், ஹாஸ்யம், சாந்தம், தாமசம், சிருங்காரம், பயம், வீரம் என்பதே அவை! இவற்றை நவரசங்கள் என்றும் சொல்வார்கள்.

நம் வாழ்வில் நமக்கு ஏற்படும் சிக்கல்களை தரம் பிரித்தால், அது நம் மனதை தாக்கி ஆட்கொண்டவிதத்தை நுட்பமாக கவனித்தால்... இந்த ஒன்பதுக்குள் ஏதாவது ஒன்றில்தான் அது அடங்கும். அப்போது நமது துன்பத்துக்கு ஏற்ப இந்த ஒன்பது உறையும் ஒருத்தியிடம நாம் சென்று நின்று அவளுக்கான மந்திர ஜபத்தில் கவனத்தை செலுத்தினால் போதும்... நாம் மெல்ல அந்த துன்பத்தில் இருந்து கரை சேர்ந்துவிடுவோம். இப்படி நாம் பிரத்தியேகமாக முயலும்போது ஒரு ஆழ்ந்த ஈடுபாடும் நமக்கு ஏற்படும்.

ஆக, நம் மனங்களின் இயல்பு கருதியே அந்த ஆதிசக்தி இப்படித் தன்னையே ஒன்பதாக பகுத்து தந்திருக்கிறாள். ஒரு கோணத்தில் பார்த்தால் அவள் தனது ராஜ்ஜியத்தை இப்படி நிர்வாகம் செய்கிறாள்! இதையே அபிராமி அந்தாதியில்

அபிராமி பட்டரும் 'ஒளிநின்ற கோணங்கள் ஒன் பதும் மேவி உறைபவளே' என்று பாடித் துதித்தார்.

இந்த ஒன்பதுதான் நவசக்தி எனப்படுகிறது. அதுவே நவராத்திரியாகி கொண்டாடப்படுகிறது. இந்த அம்சங்களின் அடிப்படையில்தான் நவரத்தினங்களும் வந்தன.

நமது பூஜை, பிரார்த்தனை ஆகியவை நமது எண்ணமாகிய சப்தத்தால் ஆனவை. அந்த சப்தத்தின் ஒருவித அபூர்வ வடிவமே இந்த வார்த்தைகள். இதில் ஸ்ரீம் என்பது மஹானுக்கு உரியது. க்லீம் என்பது காமன் பீஜமந்திரம். ஹ்ரீம் என்பது சக்தி பீஜம்.

இவற்றைச் சொல்வதால் நம் மனதுக்குள் என்னவெல்லாம் ஏற்படுகிறது? இதனால் ஏற்படும் அதிர்வுகள் நமக்கு செய்யும் நன்மை என்ன?

இந்த மந்திரங்களை உற்சாகமாக சொல்லும் போது, நம் மனமானது அந்த மந்திரங்களோடு கைகோத்துக் கொள்ளும். இதனால் ஏற்படும் அதிர்வுகள் நமக்கு செய்யும் நன்மை என்ன?

இந்த மந்திரங்களை உற்சாகமாக சொல்லும் போது, நம் மனமானது அந்த மந்திரங்களோடு கை கோத்துக் கொள்ளும். இதனால் நமது உணர்வு, உடலின் நாடி, நரம்புகள் எல்லாமே தூண்டப்படு கிறது. அப்படித் தூண்டப்படுவதில்தான் அற் புதமே இருக்கிறது. தூண்டுதல், காரணமாக உடம் பின் அலைவரிசைகளே மாறிப் போகிறது. நமது துயர் தீர்க்கும் ஒரு அலைவரிசை அன்னை துர்கை யின் ஒன்பது அம்சங்களிடம் ஒன்பதுவிதமாக இருக் கிறது. அந்த அலைவரிசையோடு நம் உடம்பின் அலைவரிசை சென்று கலந்து இரண்டும் ஒன்றா கிறது. இப்படி ஆகிடும்போது துன்பம் நீங்குகிறது.

புரிந்து மந்திரம் கூறி வணங்கும்போது இன்ன மும் அதிகமாகிறது. இறை கருணையும் நமக்கு வந்து சேர்கிறது.

அன்னை சக்தியின் வழிபாட்டில் ஓம் ஹ்ரீம் என்னும் சொல்லுக்கு ஒரு தனித்த முக்கியத்துவம் உண்டு. இது எதனால்? இதன் பின்னே ரசமான ஒரு கதை இருக்கிறது.

சத்யவிரதன் என்று ஒருவன். இவன் இன்னொரு திரிசந்திரன் என்றால் மிகையில்லை.

உயிரே போவதாக இருந்தாலும் பொய் மட்டும் சொல்லமாட்டான். இவன் அந்த ஆதிசக்தியின் பக்தன்.

ஒரு நாள், சத்யவிரதன் காட்டுக்குள் அமைதியான ஒரு இடம் தேடிப் போய் அங்கே அமர்ந்து கொண்டு பலவிதமான எண்ணங்களோடு இருந்தான். அப்போது பன்றி ஒன்று அம்பு பட்டு அலறியபடி அவன் முன் வந்து விழுந்து துடித்தது. அதைப் பார்த்து பதைத்துப் போனான் சத்யவிரதன். அம்பை நீக்கி, மூலிகை மருந்து போட்டு அந்தக் காயத்தை சுத்தப்படுத்த முயன்றபோது வேடன் ஒருவன் அவன் எதிரில் வந்து நின்றான். "நான் வேட்டையாடிய பன்றி இது. ஆகவே, இது என்னுடையது. இதை என்னிடம் கொடுத்து விடு" என்றான்.

அவன் அந்த பன்றியை 'என் பன்றி, என்னுடையது இது' என்று கூறியது சத்யவிரதனைத் தூண்டியது. காட்டில் திரிந்த ஒரு பன்றி இவனது அம்புக்கு இரையானதால், அது அவனுக்கு உரியதாகிவிடுமா என்று ஒரு கேள்வி அவனுக்குள் எழும்பியது.

அவன் தைத்தது அம்பு. சத்யவிரதன் காட்டியதோ அன்பு. உண்மையில் அந்த பன்றி அம்பெய்தவனுக்கு சொந்தமா? இல்லை, அன்பெய்தவனுக்கு சொந்தமா? கேள்வியின் முடிவில் அன்புக்குதான் ஒன்று அடிமையாக முடியும்; சொந்தமாகவும் முடியும் என்கிற ஞானத்தின் மேலீட்டில், "இந்த பன்றி என்னுடையது, அப்பனே!" என்றான் சத்யவிரதன்.

சொல்லவில்லையே... அந்தப் பன்றி வலியோடும் ஓடிவந்து விழுந்து பெருமூச்சோடும் விடுத்த சப்தம்தான் ஹ்ரீம்... ஹ்ரீம்... ஹ்ரீம்...

15

'மௌக்திகாவ்ருத தாடங்க மண்டலத்வய மண்டிதா!
கந்தர்ப்பத்வஜதா கீர்ண மகராங்கித குண்டலா'

அன்னையின் அணிகலன்களில் காதுத் தாடங்கங்களுக்கு ஒரு தனியிடமும் அழகும் உண்டு. இந்தத் தாடங்கங்களில் ஒன்றை வானில் வீசி எறிந்தே அபிராமிபட்டர் பொருட்டு அமாவாசை இரவிலும் நிலவை வரவழைத்தவள் இவள்.

முத்துக்களைக் கொண்டு வினயப் பட்ட இந்தத் தாடங்கங்கள் அவளது காதுகளில் மகர மீன் வடிவில் காட்சி தரு கின்றனவாம். இந்த மகர மீன்தான் மன் மதனின் சின்னம். எனவே, அழகிய மன் மதனே மீன் வடிவில் அன்னையின் திருக் காதினை அலங்கரிக்கிறான் என்றும் பொருள் கொள்ளலாம். இதைத்தான் 'மக ராங்கித குண்டலா' என்னும் சொற்கள் எடுத்தியம்புகின்றன.

அந்தப் பன்றியின் ஹீனமான வலிச் சப்த மானது பெருமூச்சோடு கலந்து 'ஹ்ரீம்... ஹ்ரீம்... ஹ்ரீம்...' என்று வெளிப்பட்டது! அந்த சப்தம் சத்ய விரதனுக்குள்ளும் பெரும் கருணை நெகிழ்வைத் தோற்றுவித்து வேடனை எதிர்க்கும் ஒருவித தெம்பையும் அது அவனுக்கு வழங்கியது.

"வேடனே... நீ அம்பாலடித்ததால் இது உன் னுடையது என்றால், நான் அன்பாலடத்ததற்கு என்ன பயன்? அன்பு பெரிதா? அம்பு பெரிதா? நீயே சொல்!" என்றான்.

வேடனுக்கு அவனது பொருள் செறிந்த கேள்வி புரியவில்லை. அவன் வரையில் இந்தப் பன்றி அவனுக்கான உணவு... அவ்வளவே!

இடையில் ஒரு அதிசயம்போல 'ஹ்ரீம்... ஹ்ரீம்' என்று பெருமூச்சிட்ட அந்தப் பன்றி மிகவேகமாக குணமாகி, படுத்த நிலையிலிருந்து எழுந்தும் நின் றது. அதன் கண்ணிரண்டிலும் ஒரு புது ஒளி தெரிந் தது. ஒளி அதனிடம்மட்டுமில்லை...சத்யவிரதனிட மும்தான்! அந்த நொடியில் அவன் சகல வித்தை களுடன் கூடிய சாஸ்திர ஞானமுடைய ஒரு மகா பண்டிதனின் தோற்றப் பொலிவுக்கும் ஞானத்துக் கும் ஆட்பட்டு விட்டான். அந்த வேடனிடமும் மனதிலிருந்து தவிப்பும் திகைப்பும் விலகி, அவ னிடமும் ஒரு மனத்தெளிவு. இவற்றுக்கு இடை யில் ஒரு பேரொளிப் பிழம்பு அங்கே தோன்ற. அத னூடே அன்னை ஸ்ரீவித்யா கோலத்தில் காட்சி தந்து மறைந்தாள்.

'ஹ்ரீம்... ஹ்ரீம்... என்னும் உச்சாடனம் அன்னை துர்கையின் பீஜாட்சர மந்திரமாகும். இதனை பொருள் உணர்ந்தோ... உணராமலோ,

எப்படிக் கூறினாலும் இந்த உச்சாடனம் அன்னையின் திருச்செவிகளை அடைந்து அவளையும் அழைத்து வந்துவிட்டது.

ஒருவரின் பெயரைச் சொல்லி அழைத்திடும் போது அவர் திரும்பிப் பார்த்துப் பொருட்படுத்துவதைப் போல், இங்கே ஒரு பன்றியின் முனகலில் வெளிப்பட்ட தனது மந்திரச் சொல்லுக்கு செவிசாய்த்து அன்னையும் திருக்காட்சி தந்தாள்!

அது மட்டுமா?

அந்தப் பன்றி, சத்யவிரதன், வேடன் மூவருமே தெளிந்தனர். சத்யவிரதன் ஒரு மகாபண்டிதன் ஆனான். அவனது கருணையான செயல் அடைந்த மறுவடிவம் அது. பன்றிக்கும் அப்போதே அவலப் பிறப்பு நீங்கி மோட்ச கதி கிட்டியது. வேடனும் ஞானம் பெற்றான்.

இந்தச் சம்பவம் ஒரு பீஜாட்சர மந்திரத்தின் சக்தியை மட்டுமே உணர்த்தவில்லை; அன்னையைப் பொறுத்தவரையில் அவள் சகல உயிர்களுக்கும் பாரபட்சமின்றி கருணை புரிபவள் என்பதும் இதில் புலனாகிறது.

அன்னையின் கருணை என்பது இதுபோல சாமான்யர்களுக்கு மட்டுமல்ல, தேவர்களுக்கே பெரிதும் தேவைப்படுகிறது. குறிப்பாக, பரந்தாமனாகிய அந்த கிருஷ்ண பரமாத்மா மானிட அவதாரம் எடுத்த வேளையில் அவரது அவதார காரியத்திற்கே அது பயன்பட்டது!

அசுரனாகிய கம்சனை அழிக்கும் பொருட்டு பரந்தாமன் கிருஷ்ணாவதாரம் புரிந்தான் என்பதை அறிவோம். கண்ணன் பாலகனாய் அவதரித்த போது முதலில் அந்த பாலகனைக் காத்து ரட்சித்தது அன்னையின் காளி சொரூபம்தான்!

சிறைக்குள்ளே தேவகிக்கும் வசுதேவருக்கும் கண்ணன் பிறந்த அதே இரவில் யசோதைக்கு ஒரு பெண் குழந்தை வடிவில் அந்த அம்பிகை பிறந்தாள். வசுதேவர் கண்ணனை ஒரு மூங்கில் கூடைக்குள் வைத்து தலையில் சுமந்தபடி நடக்கையில், பிரளயம் ஏற்பட்டுவிட்டது போல பெரு மழை பொழிந்தது. இதனாலே கம்சனின் கவனமும் தற்காலிகமாக பிரளயத்தின் மேலேயே இருந்தது.

ஒருவழியாக குழந்தைகள் இடம்மாறிய நிலையில் சிறைக்குள் தேவகிக்கு பெண்குழந்தை பிறந்ததாக ஒரு செய்தி கம்சனை அடைய... அவனும் ஒரு உடைவாளுடன் அப்போதே அந்தக் குழந்தையைக் கொல்லும் நோக்கமுடன் வந்தான். பிறந்த குழந்தையை வானில் வீசி எறிந்து கீழே விழும்போது வாளால் வீசிக் கொல்வதே அவனது கொலை முறை.

அவ்வாறே அந்த பச்சைப் பெண் குழந்தையை வானில் வீசினான். அடுத்த நொடியே அந்தக் குழந்தை காளி வடிவம் எடுத்து கோரமுகம் காட்டிச் சிரித்தது.

கம்சன் அரண்டுபோன நிலையில் 'கம்சா... உன் புத்தியைவிட பிரபஞ்ச சக்தி பெரிது. உன் வீரத்தை விடவும் தர்மத்தின் தீரம் பெரிது. உன் மதியை விடவும் அதையே படைத்த விதி பெரிது. தொடக்கம் என்று ஒன்று இருந்தால் அதற்கு முடிவென்பதும் நிச்சயம் உண்டு. உன் முடிவை நீ விரைவில் காண்பாய். உன் அரக்கத்தை அழிக்கும் எனது அம்சம் கொண்ட அவதாரம் நிகழ்ந்துவிட்டது. இனி நிகழ வேண்டியது நிகழ்ந்தே தீரும்...' என்கிற வாக்குடன் மறைந்தாள்.

அதேபோல இடம்மாறி வளர்ந்த கிருஷ்ணனும் பின் கம்சனை சம்ஹரித்து அவதார நோக்கை ஈடேற்றினான்.

பராந்தாமன் தன் அவதாரத்தில் ஏன் அம்பிகையின் அம்சத்தைக் கொள்ள வேண்டும் என்கிற கேள்வி எழலாம். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

தேவிக்குப் பிறக்கும் குழந்தைகளை கம்சன் கொன்று கொண்டே வர - தேவகியும், வசுதேவரும் கலங்கிப் போய் 'இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவுதான் எப்போது?' என்று கேட்டுத் துடிக்கிறார்கள். அவரது துடிப்பை அறியும் கர்க்க மகரிஷி, மேருமலை உச்சியில் தேவியைத் தொழுது ஒன்பது நாட்கள் நடந்திடும் படியாக தேவி நயவக்ஞத்தை புரிகிறார். அதன் விளைவாகவே தேவியாகிய அன்னை 'திருமாலின் அவதாரத்தின்போது எனது அம்சம் அந்த அவதாரத்தில் சித்திக்கும்' என்று கூறியதோடு, தானே யசோதை வயிற்றில் பிறந்து வந்து, கம்சனால் கொல்ல முற்படும்போது அவனுக்கு எச்சரிக்கையும் விடுத்து ரட்சிப்பேன் என்றாள்.

அதுதான் நிகழ்ந்ததும் முடிந்தது!

அன்னையும் கிருஷ்ண பரமாத்மா வடிவில் 'சர்வமும் நானே' என்று கூறி, போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கும்போது விஸ்வரூப தரிசனம் தருகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்கு அரசனாக இருந்து ஆட்சிபுரிந்த தருணம்.

துவாரகையில் சத்ராஜித் என்று ஒரு யாதவனும் வாழ்ந்து வந்தான். இந்த சத்ராஜித் சூரியனைக் குறித்து தவம் செய்து பெரும் தனவானாக விரும்பினான். உலகிலேயே தனக்கு விஞ்சிய ஒரு செல்வந்தன் இருக்கக் கூடாது என்பதெல்லாம் இவன் விருப்பம். இவனது தவத்துக்கு மகிழ்ந்த சூரியனும் அவனுக்கு வரமளிக்கத் தயாரானான். வற்றாத செல்வத்தோடு, எடுத்த காரியம் யாவிலும் வெற்றி பெற்றிட வேண்டும் என்று இரண்டு வரங்களை ஒரே வரமாகத் தொகுத்துக் கேட்டான்.

பொதுவில், இதுபோன்ற ஆசைகளோடு பெறப் படும் வரங்கள் அவற்றைப் பெறுபவர்களுக்கு பெரும் சோதனைகளையே உருவாக்கும். சூரிய பகவான் அதை சத்ராஜித்துக்கு உணர்த்தியும் அவன் தன் விருப்பத்திலிருந்து மாறவேயில்லை. சூரிய பகவானும் அவன் கோரிய வரத்தை தந்ததாக வேண்டிய கட்டாயத்தில், தன் வசம் இருந்த சமந்தகமணி என்னும் ஒரு ஒளி உமிழும் கல் ஒன்றை சத்ராஜித்துக்கு வழங்கினார்.

இந்த சமந்தகமணி, உலகின் அரிய பொக்கிஷங் களில் ஒன்று. காமதேனு, கற்பக விருட்சம், விக்கிர மாதித்தனின் அரிய சிம்மாசனம் போன்றவற்றின் வரிசையில் இடம்பெற்றிருக்கும் இந்த சமந்தக மணி, அமுதம் வேண்டி பாற்கடலைக் கடைந்த போது கிடைத்த ஒன்று.

விஷ்ணு அம்சமான இந்த சமந்தகமணியானது எவரிடம் இருக்கிறதோ அவரிடம் பொன்னும், பொருளும் பெருகியபடியே இருக்கும். அதாவது, தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு பொன்னை இந்த மணியானது தந்துவிடும். அடுத்து, எடுத்த காரியம் யாவிலும் அது வெற்றியையே தந்திடும்.

சத்ராஜித்தும் அந்த சமந்தகமணியைப் பெற்று துவாரகையிலேயே பெரும் செல்வந்தனாகி விட்

டான். ஒரு கட்டத்தில் அரசனான ஸ்ரீகிருஷ்ணனின் கஜானாவில் உள்ள நிதியைவிடவும் அதிக பொன்னும், மணியும் சத்ராஜித்துக்குப் பெருகவே, அவனுக்குள் தானே இந்த துவாரகைக்கு அரசன் என்கிற மமததையும் தோன்றிவிட்டது.

"இன்று நான் துவாரகையை வெற்றிகொண் டேன். விரைவில் இந்த உலகையே வெற்றி கொண்டு விடுவேன்..." என்றெல்லாம் அவனும் பேச ஆரம்பித்து விட்டான். ஸ்ரீகிருஷ்ணனின் காது களுக்கும் சத்ராஜித்தின் இந்த எக்காளக் குரல் எட்டவே செய்தது. ஆனால், ஸ்ரீகிருஷ்ணன் அதை பொருட்படுத்தவில்லை. அவர் ஒன்றும் சாமான்ய மனிதர் அல்லவே!

ஆனால், காலம் இப்படியே போய்விடுவதில் லையே...? ஏற்கனவே சமந்தகமணியைத் தரும் போதே சூரியன் எச்சரிக்கை செய்ததுபோல ஏதா வது நடந்தாக வேண்டுமே? நடந்தால்தானே இது மாய உலகு. இங்கே அனைத்தையும் மாயை சூழ்ந் துள்ளது என்பது எதிர்கால சந்ததிகளுக்கும் புலனாகும்!

விதி, சத்ராஜித்தின் தம்பியான பிரசேஜனஜித் வடிவில் விளையாடத் தொடங்கியது.

பிரசேனஜித்தும் அந்த சமந்தகமணியை அண்ணன் சத்ராஜித்துக்கு தெரியாதபடி எடுத்துக் கொண்டு அதை தானும் பரீட்சித்துப் பார்க்க விரும் பியவனாக ஒரு காட்டுக்குள் புகுந்தான். அந்தக் காட்டுக்குள் சாபம் காரணமாக ஒரு அரச குமாரன் சிங்கமாக மாறி அலைந்து கொண்டிருந்தான்.

அந்த சிங்கத்தை வேட்டையாட வேண்டும் என்பது பிரசேனஜித்துக்கும் நோக்கம். தன்னை வேட்டையாடவே பிரசேனஜித் வந்திருக்கிறான் என்பதை சிங்கமும் தெரிந்து கொண்டது. சமந்தக மணியோடு அவன் வந்திருப்பதைப் பார்த்து அந்த சிங்கம் சற்று அச்சப்படவும் செய்தது. 'சமந்தகமணி உள்ளவரே எங்கும், எதிலும் வெற்றி பெறுவர்' என்பது அந்த சிங்கத்துக்கும் தெரியும். எனவே, பிரசேனஜித்தின் கண்களில் படாதபடி ஒளிந்து கொண்டது அந்த சிங்கம்.

இந்நிலையில், அந்த காட்டில் ஒரு குளம்!

குளத்தைப் பார்த்த பிரசேனஜித் அதில் இறங்கி நீராட விரும்பி தன்வசம் உள்ள சமந்தக

மணியில் இருந்து ஆடைகள் வரை அவ்வளவை யும் கழற்றி கரையில் போட்டுவிட்டு குளத்தில் இறங்கினான். ஒளிந்த நிலையில் இதை கவ னித்துக் கொண்டிருந்த சிங்கம், உடனேயே ஒரு முடிவுக்கு வந்து ஓடிச் சென்று தனது குகைக்குள் பாதுகாப்பாக வைத்துவிட்டு திரும்பி வந்தது.

குளித்து முடித்து எழுந்த பிரசேனஜித், கரை மேல் சிங்கம் நிற்பதைப் பார்த்து அதிர்ந்தான்.

16

'கர்ண ரத்நெலிக, சிந்தார்க கமநீய முகாம்புஜா
காருண்யஸ் யந்தி வதஜா கண்டமூல ஸீகுங்குமா!'

அன்னையின் திருமுகத்தில் அவள் காதில் அணிந்துள்ள ரத்தினக்கற்கள் ஏகமாய் ஜொலிக்கின்றனவாம். அந்த ஜொலிப்பு, தாமரை மலர்ந்தது போன்ற அன்னையின் முகத்தின் தேஜஸோடு போட்டுயிடுகிறதாம். அவள் திருமுகத்து கன்னங்களில் குங்குமப் பூவைப் போன்ற நிறமானது சாந்து பூசினாற்போல பொலி கிறதாம். இவையினூடே அன்னையின் நயனங்களில் கருணை பொங்கி வழிகின் றது என்பதே மேற்காணும் இரண்டு வரிகளின் ஆழ்ந்த பொருளாகும்!

பிரேசனஜித், சிங்கத்தை எதிர்பார்க்கவில்லை. மணியையும் பார்த்தான். சிங்கமோ கர்ஜித்தது. பிரசேனஜித்தை யுத்தத்துக்கும் அழைத்தது. பிர சேனஜித்தும் தான் ஒரு மாவீரன் என்கிற மமதை யோடு அந்த சிங்கத்தோடு போரிட தீர்மானித்தான. அவ்வேளையில், 'எவர் வசம் சமந்தகமணி உள் ளதோ அவரே வெற்றி பெறுவார்' என்பது அவன் புத்திக்கு எட்டாமல் போய்விட்டது. சிங்கமானது பிரசேனஜித்தை மட்டுமல்ல, அவன் ஏறி வந்த குதிரையையும் கொன்றுவிட்டது.

பின் அதனிடம் ஒரே எக்காளம்! சமந்தகமணி தன்வசம் வந்துவிட்டதால், தான் இனி வெல்லப்ட முடியாத ஒரு பலசாலி என்று அறிவிக்காத குறையாக, காட்டுக்குள் திரியத் தொடங்கியது.

கண்ணில் பட்ட மிருகங்களை எல்லாம் தாக்கியது. காடே குலுங்கிப் போனது.

அந்தக் காட்டில்தான் கரடி ராஜாவான ஜாம்பவான் வாழ்ந்து வந்தார். ஜாம்பவான் ராமாயணத்தில் அனுமனுக்கு அவன் பலத்தை எடுத்துக் கூறியவர். கரடி உருவம்... ஆனால், முனீந்த்ரர்களின் குணம் கொண்டவர். தரிகால ஞானி. மிகுந்த பலசாலியும்கூட! எல்லாவற்றுக்கும் மேலாக பரம ராமபக்தர் அவர்.

காட்டு ராஜாவான அவரிடம், காட்டில் வசிக்கும் மிருகங்கள் எல்லாம் ஒன்றுதிரண்டு வந்து சிங்கத்தின் அட்டகாசத்தையும் அதன் கழுத்தில் சமந்தகமணி இருப்பதையும் கூறின.

அடுத்த நொடியே சமந்தகமணியின் சக்தியை யூகித்துவிட்டார் ஜாம்பவான். அது எப்படி சிங்கத்துக்கு கிடைத்தது என்பதும் அவருக்கு புரிந்து விட்டது. கத்திக்கு கத்திதான் பதில் ஆயுதம்! களவு புரிந்து சிங்கத்துக்கு பாடம் கற்பிக்க சிங்கம் உறங்கும் சமயத்தில் அதன் கழுத்திலிருந்து சமந்தகமணியை அபகரிக்கத் திட்டமிட்டார்.

அதேபோல செயல்பட்டு சமந்தகமணியை அடைந்த ஜாம்பவான், அதன்பின் சிங்கத்தையும் கொன்று போட்டுவிட்டு சமந்தகமணியுடன் தான் வாழும் குகைப் பகுதிக்கு சென்றுவிட்டார்!

இப்படியாக சமந்தகமணி சூரியனிடம் இருந்து சத்ராஜித்துக்கும், சக்ராஜித்திடம் இருந்து பிரசேனஜித்துக்கும், பின் சிங்கத்துக்கும், இப்போது கரடி ராஜாவான ஜாம்பவானிடமும் போய்ச் சேர்ந்தது.

அதே வேளை, நாட்டுக்குள் சத்ராஜித் சமந்தகமணியையும், தம்பி பிரசேனஜித்தையும் தொலைத்து விட்டு தவித்தபடி இருந்தான். ஒருவேளை, தன் தம்பி அதை எடுத்துச் சென்றிருந்தாலும் திரும்பி வந்திருக்க வேண்டுமே... என்னாயிற்றோ தெரியவில்லையே என்று பதைத்துப் போனான்.

அப்போது கண்ணனுக்கு எதிரான கௌரவர்களின் கூட்டத்தைச் சேர்ந்த சிலர் அப்போதே சத்ராஜித்திடம் சென்று, "சமந்தகமணியை களவாடி உன் தம்பியையும் பிடித்து வைத்திருப்பது அநேகமாக கண்ணனாகத் தான் இருக்க வேண்டும்!" என்று ஆரம்பித்தனர்.

கரைப்பார் கரைத்தால் கல்லே கரைந்திடும் போது சத்ராஜித் எம்மாத்திரம்?

கண்ணன்தான் தன்னுடைய முன்னேற்றத்தைப் பொறுக்காதபடி இவ்வாறு நடந்து கொண்டு விட்டான் என்று நம்பியது மட்டுமல்ல. கண்ணனிடமே நேரில் சென்று கோபித்துக் கொள்ளவும் செய்தான் சத்ராஜித்! கண்ணன் எவ்வளவு சொல்லியும் சத்ராஜித் சமாதானம் ஆகவில்லை.

துவாரகை முழுக்க விஷயம் பரவியது! 'இளவயதில் வெண்ணெய் திருடிய கண்ணன் இன்னமும் திருட்டை மறக்கவில்லை. இப்போது சமந்தக மணியையே அபகரித்துக் கொண்டுவிட்டான்' என்று பலரும் பேசத் தொடங்கிவிட்டனர்!

இதுபழிச்சொல்! பழிஎன்பதுபரந்தாமனைக்கூட விடுவதாக இல்லை. கண்ணனுக்கும் 'தான் இனியும் வாளாதிருந்தால் பொய்யை மெய் என்று எல்லோருமே எண்ணத் தொடங்கிவிடுவார்கள். பரம் பொருளான தனக்கு வேண்டுமானால் மெய்யும் பொய்யும் ஒன்றானதாக இருக்கலாம். ஊர் அப்படி எண்ணாது. இதுமாயை சார்ந்த உலகு. ஒரு தவறை ஒன்பதாக உயர்த்தி பார்க்கும்' என்று சிந்தனை ஓடவும், காணாமல் போன பிரசேனஜித்தைத் தேடிக் கொண்டு அப்போதே கிளம்பிவிட்டான்.

பிரசேனஜித் சென்றதாகக் கூறப்படும் காட்டுக்குள் குளத்தின் அருகில் முதல் குதிரையின் உடல் கிடந்தது! பின் பிரசேனஜித்தின் உயிரற்ற ரத்தச் சகதியான உடல் கிடைத்தது! அங்கேயிருந்து சிங்கம் ஒன்றின் கால் தடங்கள் சென்றதை வைத்து, அதைப் பின்தொடர்ந்து சென்றதில், சிங்கமும் இறந்துகிடந்தது கண்ணனின் கண்களில் பட்டது. அங்கிருந்து கரடியான ஜாம்பவானின் கால் தடங்கள் கண்ணில் பட்டன. கிருஷ்ணன் அதையும் பின்தொடர்ந்தான். இறுதியாக, ஜாம்பவானின் குகை வாயிலையும் அடைந்தான்.

அங்கே ஜாம்பவானின் மகன் கழுத்தில் சமந்தக மணி இருக்க... அவனும் தீவிரமாய் பலாப்பழத்தில் இருந்து கண்களை உரித்தபடி இருந்தான். கண்ணனுக்கு புரிந்துவிட்டது. அதை அவனிடம் இருந்துஎடுப்பதற்காகஅருகில்சென்றபோதுஜாம்பவானும்வந்துவிட்டார்.வந்தவருக்குகண்ணனைப்

பார்த்த மாத்திரத்தில் ஒரு சிலிர்ப்பு. ராமன்தானே கண்ணனாகவும் வந்திருக்கிறான்! அந்த அவதாரத் தாக்கம்! ஆனால், 'தான் வணங்கும் தேவன் அற்பமான ஒரு சமந்தகமணியைப் போய் அடைய முயல்வானா... ஒருவேளை, இவன் கண்ணன் வடிவில் வந்திருக்கும் யாரோ ஒரு மாயக்கள்வனாக இருக்குமோ?' என ஜாம்பவானுக்குள் ஒரே குழப்பம். இறுதியில் கண்ணனை ஒரு கள்வனாகவே கருதி யுத்தம் புரியவும் தயாராகிவிட்டார்.

கண்ணனுக்கோ ஜாம்பவானை திருப்பித் தாக்க கஷ்டமாக இருந்தது. முந்தைய ஜென்ம நினைவுகளும் எழும்பின!

ராமனாக இருந்த சமயம்... சீதையும் திரும்ப கிடைத்துவிட்ட நிலையில், ராமன் வானர வீரர்கள் அவ்வளவு பேருக்கும் நன்றி கூறிவிட்டு அயோத்தி புறப்படுகிறான். அப்போது ஜாம்பவான் அழுதார்.

"ராமா! உன்னைப் பிரிவதை நினைத்தால் வேதனையாக உள்ளது..." என்றவர், "ராமபிரானே, என்றும் உன்னைப் பிரியாது உனது அடியோடு கிடக்கும் வரம் தரமாட்டாயா?" என்று கேட்கவும் செய்தார். அப்படியே எந்த ஜென்மத்திலும் உன்னை மறவாத உள்ளத்தைத் தந்தால் அதுபோதும் என்று கேட்டுப் பெற்றுக் கொண்டார்.

இப்படித் தன்னையே எண்ணியபடி வாழும் ஒரு பக்தனை... அவன் அடிக்கிறான் என்பதற்காக வெல்லாமா திருப்பி அடிப்பது? சிரித்துக்கொண்டே தாங்கிக் கொண்டான் கண்ணன். மனதுக்குள் சமந்தகமணியின் சக்தியை மட்டுமல்ல, தனது சக்தியையும் இந்த உலகம் அறிய இதுவே ஒரு வாய்ப்பு என்றும் கருதிக் கொண்டான்.

கண்ணன் அடியைத் தாங்கத் தாங்க ஜாம்பவானுக்கு ஆத்திரம்தான் அதிகமாகியது. அதுமட்டுமல்ல... இவன் ஒரு மாயாவி என்கிற எண்ணம் வலுவடையத் தொடங்கிவிட்டது. ஆனால், கிருஷ்ணனுக்கோ தனக்கேற்பட்ட பழி நீங்க வேண்டும் என்பதோடு, அதற்கு காரணமான கர்மத்தை தான் இதுபோல துன்பப்பட்டாவது தீர்த்துவிட வேண்டும் என்பதே எண்ணமாக இருந்தது.

'கிருஷ்ணனுக்கென்ன? துவாரகை மன்னன் அவன்! கோபியர்களுடன் குலாவுவது... வெண்

ணெய் திருடித் தின்பது... மாயங்கள் புரிவது... இது தானே அவன் வேலையே! அவனுக்கு மனிதர் களின் எந்த துன்பம் பற்றி தெரியும்?' என்கிற கேள்விக்கெல்லாம் தான் வார்த்தையில் பதில் கூறிடாது, சம்பவம் வாயிலாகவே பதில் கூற விரும்புபவன் போல, ஜாம்பவானின் கதாயுத அடிகளை தொடர்ந்து தாங்கிக் கொண்டான்.

காட்டில் இப்படி ஜாம்பவானிடம் கண்ணன் அடிபடுவதை திரிலோக சஞ்சாரியான நாரதர் வானசஞ்சாரம் செய்தபடி வரும்போது பார்த்து விட்டு பதைபதைத்துப் போனார். அவர் நேராக அவனைப் பெற்றெடுத்த தந்தையான வசுதேவ ரிடம்தான் சென்றார். விஷயத்தைக் கூறவும் வசுதேவருக்கு அதிர்ச்சி!

கம்சனில் இருந்து எவ்வளவோ அசுரர்களை அழித்த கண்ணன், ஜாம்பவானிடம் பதிலுக்கு பதில் யுத்தம் புரியாமல் அடிகளை வாங்கிக் கொண்டு மட்டும் நிற்கிறான் என்பது அவருக்கு பலவித யூகங்களை தோற்றுவித்தது.

"நாரதரே... கண்ணன் காரணமில்லாமல் இவ் வாறு நடந்து கொள்ள மாட்டான். இதற்கு எது காரணமாக இருக்க முடியும்?" என்று கேட்டார்.

"அறியாமல் அடித்தபடி இருப்பவன்... ஒரு பரம பவித்ரன்! பூர்வஜென்மத்தில் மட்டுமின்றி, இப் போதும் ஒரு ஸ்ரீராம பக்தன்... பகவான் பக்தனுக்கு எதையோ உணர்த்த விரும்புகிறார் என்று கருதுகிறேன்" என்றார்.

கண்ணன் மேல் விழும் அடியின் சப்தம் வசு தேவரின் காதுகளிலும் விழுந்தது! "ஐயோ... என் அருமைப் புதல்வனை இப்படியா ஒரு அற்பக் கரடி போட்டு அடிக்கும். நான் இப்போதே சென்று அந்தக் கரடியோடு போர் தொடுக்கிறேன்" என்று கொந்தளித்தார்.

நாரதர் தடுத்தார்.

"இந்த அவசரம் கூடாது வசுதேவரே... பரந் தாமன் ஏதோ ஒரு முடிவோடுதான் இவ்வாறு நடந்து கொள்கிறார். இந்த யுத்தம் நிற்க வேண்டும் என்றால், எனக்கு தெரிந்து ஒரே வழிதான் உள் ளது..." என்ற பீடிகை போட்ட நாரதரும், வசுதேவரை அவர் என்ன சொல்வாரோ என்பது போல பார்த்தார்.

"இது ஒரு தர்மாவஸ்தை! அந்த சமந்தக மணியை ஒவ்வொருவரும் திருடியே எடுத்துச் சென்றுள்ளனர். எவரிடம் அது இருந்ததோ அவர்களை எல்லாம் அது பலி வாங்கிவிட்டது. சமந்தகமணியை உடைய ஜாம்பவானையும் அது பலி வாங்கிவிடலாம்.

கிருஷ்ண பரமாத்மா ஒரு வேளை பொறுமை இழந்து வீராவேசமாய் தன் சக்ராயுதத்தை பிர யோகிகத்தால் ஜாம்பவானும் அதன்பின் அழிந்து விடுவார். ஆனாலும் வர் வரையில் 'காலமெல்லாம் என் நாமம் உனக்கு துணையிருக்கும்' என்று சொன்னது முதல் சர்வமும் பொய்யாகிப் போவது மட்டுமல்ல. சில பழைய கணக்குகளின்படி அநேக நல்லகாரியங்கள் வேறு நடந்தாக வேண்டி உள்ளது.

எனவே, இவ்வேளையில் ஜாம்பவான் தானா கவே தான் யுத்தம் செய்து தண்டித்துக் கொண் டிருப்பது தான் பெரிதும் போற்றி வணங்கும் இறைவனாகிய ஸ்ரீராமனைத்தான் என்பதை உணர வேண்டும். அப்படி உணர்ந்துவிட்டால் எல்லாம் நலமாக முடிந்துவிடும்.

அதற்கு ஒரேவழிதான்உள்ளது. அதுதான்அந்த ஆதிசக்தியான மகாதேவிக்குச் செய்யவேண்டிய நவாவரண பூஜை! ஒன்பது நாட்களுக்கு சண்டி ஹோமத்துடன் புரியவேண்டிய, தேவிக்கான பூஜைகளிலேயே மிகமிக பவித்ரமான பூஜை இது! இந்த பூஜையை கர்மசிரத்தையாக செய்தால் தேவி மகிழ்வாள். அவள் மகிழ்ந்து அருளத் தொடங்கி விட்டால் ஜாம்பவானின் மாயை விலகி, தான் யுத்தம் செய்து கொண்டிருப்பது ஸ்ரீராமபிரானின் அம்சமான கிருஷ்ணபரமாத்மா மீது என்பதும் தெளிவாகிவிடும்!" என்றார் நாரதர்.

வசுதேவர் அடுத்த நொடியே அந்த நவாவரண பூஜையை தொடங்கிவிட்டார்.

பழி, பாவம், பகை, பெரும் இழப்பு, யுத்தம் என் கிற அவ்வளவு நிலைப்பாடுகளையும் மாற்றி கீர்த்தி, புண்ணியம், இழந்த செல்வங்களை அடை தல், சமாதானம் என்று அருளவல்லது தேவியின் நவாவரண பூஜை. இந்த பூஜை, தேவாதி தேவர் களுக்கே கை கொடுப்பது என்னும்போது மனிதர்

களாகிய நம்மை எந்த அளவிற்கு கடைத்தேற்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

வசுதேவரும் தேவியின் பூஜையை பவித்ரமாக தொடங்கினார்.

காட்டுக்குள்ளே கிருஷ்ணபரமாத்மா தொடர்ந்து 27 நாட்களாக சிரித்த முகத்தோடு ஜாம்பவானின் அடிகளை வாங்கியபடியே இருந்தார்.

17

'உதிக்கின்ற செங்கதிர் உச்சி திலகம் உணர்வு உடையோர் மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோய மென்ன விதிக்கின்ற மேனி, அபிராமி எனதன் விழுத்துணையே'

அன்னை சக்தியின் ரூபங்களில் அபிராமி ரூபமும் ஒன்று! அதை அந்தாதி பாடி கொண்டாடி மகிழ்ந்தார் அபிராமி பட்டர். அந்த அபிராமி அந்தாதியானது மந்திரச் சிறப்புக்குரியது. அதை பாராயணம் செய்யும்போது அன்னை நம் எதிர்வந்து அமர்ந்து கேட்டு இன்புற்று ஆசீர்வதிக்கிறாள் என்பது சான்றோர் வாக்கு!

காட்டுக்குள்ளே கிருஷ்ண பரமாத்மா ஜாம்பவானோடு மோதிக்கொண்டிருந்தார்... தவறு... தவறு! ஜாம்பவான், கிருஷ்ண பரமாத்மாவை எதிரியாகக் கருதி, விடாது யுத்தம் நடத்திக் கொண்டிருந்தார்.

அதே வேளையில், நாரதரின் உபதேசப்படி வசுதேவர் தன் பதிவிரதையான தேவகியோடு, தேவியின் நவாவரண பூஜையை தொடங்கிவிட்டார்.

ஒரு நாளல்ல... இரு நாளல்ல... ஒன்பது தினங்கள்!

தேவி பூஜை மிகவும் பவித்ரமாய் எந்த ஒரு பழுதுமின்றி நடந்து ஒன்பதாவது தினத்தையும் எட்டியது. நவாவரணத்தின் முடிவில் பிராமணர்களுக்குப் புரிய வேண்டிய தானதர்மங்களுடன் வேத பண்டிதர்களுக்கு உரிய மரியாதை செய்து, அனைவருடைய உள்ளமும் குளிரும் வண்ணம்

விருந்தளித்து, அவர்கள் தாம்பூலம் தரித்துக் கொண்டு சிவந்த நாவுடனும், முகத்தில் மகிழ்வுடனும் மனதார வாழ்த்துவது என்பது முக்கியம். அப்படி அவர்கள் வாழ்த்தும்போது நவாவரணம் புரிந்தவர் குடும்ப சமேதராய் விழுந்து வணங்கி, அந்த ஆசிகளை மந்த்ராட்சதை வடிவில் மார்பு வஸ்திரத்தால் பிடித்துக் கொள்வதுதான் வழக்கம்.

வசுதேவரும் கிருஷ்ண பரமாத்மா நிமித்தம் புரிந்த யக்ஞத்தில் அனைவருக்குமான விருந்து வரை வந்து விட்டார். இதன் பயன் காட்டில் யுத்தம் புரியும் ஜாம்பவானிடம் எதிரொலித்தது. ஜாம்பவானுக்கு அதிசயமாக களைப்பு ஏற்படத் தொடங்கியது. உடம்பிலிருந்து சக்தி முற்றாக உறிஞ்சப்படுவதுபோல் ஒரு பிரமை... கூடவே, அதுவரை ஒரு மாயாவி போல் தெரிந்த கிருஷ்ண பரமாத்மா, கையில் கோதண்டத்துடன் ஸ்ரீராம பிரானாகவே காட்சியளிக்கத் தொடங்கிவிட்டார்.

'இந்த காட்சிகூட ஏதும் மாயச் செயலோ?!' என ஜாம்பவான் கருதிடும்போது... ஒரு அசரீரி எழும்பி, 'ஜாம்பவானே! நீ யுத்தம் புரிந்து கொண்டிருப்பது, உன் ஆத்ம நாயகனான ராமனின் மறு அவதாரமான கிருஷ்ண பரமாத்தமாவிடம்!' என்று கூறி அடங்கியது. அடுத்த நொடியே ஜாம்பவான் தன் கையிலிருந்து கதையை தூக்கியெறிந்துவிட்டு கதறத் தொடங்கிவிட்டார்.

"ஐயனே... இப்படியா என்னை சோதிப்பது? அண்டசராசரங்களை எல்லாம் கட்டி ஆளும் நீயா என் கையில் இத்தனை நாட்கள் அடிபட்டாய்? ஐயோ! எவ்வளவு பெரிய பாவத்தை நான் செய்துவிட்டேன்! இதை நான் எப்படி அனுபவித்து தீர்க்கப் போகிறேன் என தெரியவில்லையே..." என்று ஜாம்பவான் கதறிட... கண்ணபிரானும் புன்னகை மாறாமல், "ஜாம்பவானே! நடந்ததற்காக வருந்தாதே! பக்தர்கள் தூவும் மலர்கள் மட்டுமல்ல... அவர்களின் கோபமும் எனக்கு ஒன்றே! நான் யார் என்று அறியாமலும், உண்மை தெரியாமலும்தான் நீ யுத்தம் புரிந்தாய்.

இதில் உன் குற்றம் என்று எதுவுமில்லை. எல்லாம் சமந்தகமணி படுத்தும் பாடு! அது உள்ள இடத்தில் ஆசையே மாயாகி நம் கண்களைக் கட்டிவிடும். நானும் அதற்கு வந்தேன். துவாரகைக்

குள் நுழைந்த அது என் மேலும் பழிவரும்படி செய்துவிட்டது. அதுவே உன் கண்ணை மறைத்து என்மேல் மோதும்படியும் செய்தது. இனி யாவது அதை உன் வசமிருந்து விலக்கு. அது எனது துவாரகையில் வாழ்ந்து வரும் சத்ராஜித் என்பவனுக்கே சொந்தம். அவனே அதை சூரிய னிடமிருந்து வரமாகப் பெற்றவன்!" என்றார்.

ஜாம்பவான் அடுத்த நொடியே அந்த சமந்தக மணியை எடுத்துவந்து கண்ணனின் காலடியில் வைத்து வணங்கினார். அப்படியே, "ஐயனே, தங்க ளிடம் நான் ஒன்று கேட்லாமா?" என்றும் கேட் டார். அப்போது ஜாம்பவானுடன் அவனது அழகிய மகளான ஜாம்பவதியும் இருந்தாள்.

"ஐயனே... இந்த சமந்தகமணி வந்துவிட்ட நிலையில் இதன்மேல் என் மகள் மிகவும் மோகமாகி விட்டாள். அதைக் கண்ட நானும் 'ஜாம்பவதி... கவலைப்படாதே! உன்னை மணப்பவன் வசம் இதை ஒப்படைத்து, காலமெல்லாம் நீ இத்துடன் இருக்கும்படி செய்வேன்!' என்று அவளுக்கு வாக்குறுதியும் அளித்தேன். என் வாக்குப்படி இதை வைத்திருக்கும் தாங்களே என் மகளை ஏற்று, என் வாக்கு பொய்யாகாதபடி காத்தருள வேண்டும்" என்று வேண்டினான்.

பக்தனின் வாக்கு பொய்யாகக் கூடாது என்று கண்ணனும் அதற்குச் சம்மதிக்க, ஜாம்பவதியும் கண்ணனின் திருவடிகளில் விழுந்து தன்னை ஜீவார்மாவாக கருதி ஏற்க வேண்டும் என்று வேண்டினாள். ஏற்கெனவே பாமாவும் ருக்மணியும் இருந்தபோதிலும், கோபியர் கொஞ்சும் ரமண னாகவும் கண்ணன் விளங்கினபடியால், ஜாம்ப வதியை அவள் விரும்பியபடியே ஏற்றுக்கொண்டு சமந்தகமணியோடு துவாரகை வந்து சேர்ந்தபோது, வசுதேவரும் தேவகியும் நாவரண பூஜையை நிறைவு செய்து அனைவரிடமும் ஆசி பெற்றபடி இருந்தனர்.

கழுத்தில் சமந்தகமணி மாலையுடன் அருகில் ஜாம்பவதியுடன் கிருஷ்ணபரமாத்மா வந்து நிற்கவும்... தேவி யக்ஞம் ஈடேறியதை அறிந்து விண்ணைப் பார்த்து கைகூப்பித் தொழுதார் வசுதேவர். கிருஷ்ண பரமாத்மாவும் தன் அவதார காரியத்தில் தேவி அருள்புரிந்தமையை எண்ணி

மகிழ்ந்தார். பரமாத்மா சமந்தகமணியுடன் வந்து விட்டதை அறிந்து சத்ராஜித்தும் ஓடிவந்து காலில் விழுந்து தனது சந்தேக புத்திக்காக வருந்தினான்.

தேவி யக்ஞும் மொத்தத்தில் எல்லோரையுமே இன்பத்தில் ஆழ்த்தி, துன்பத்திற்கெல்லாம் முடிவுரை எழுதியது!

துவாரகையில் கிருஷ்ண பரமாத்மாவுக்கே அருள் செய்த தேவி நவயக்ஞுமானது, ஒரு சமயம் பரீட்சித்து மன்னனுக்கு கை கொடுத்தது அது...

பாண்டவர்களான தர்மர், பீமன், அர்ஜுனன், நகுல சகாதேவனின் வழித் தோன்றலாய் வந்தவனே பரீட்சித்து மன்னன். அர்ஜுனனின் மகனான அபிமன்யுவின் மனைவி உத்தரையின் மகனான பரீட்சித்து அஸ்தினாபுரத்துக்கு அரசனாகி, தன் முன்னோரின் வழி நல்ல விதமாகத் தான் அரசாட்சி செய்து வந்தான். ஆனாலும், எப்பேர்ப்பட்டவரையும் 'நான்' என்னும் அகம்பாவம் கவிழ்த்து விடுவதுதானே வரலாற்றிலிருந்து நாம் அறியும் செய்தி!

பரீட்சித்துவிடமும் அந்த அகங்காரமும் நிறையவே இருந்தது. அவனது ஊழ்வினையோ... இல்லை, பாழ்வினையோ... அவனை ஒரு நாள் வேட்டையாட காட்டுப் பக்கம் அழைத்துச் சென்றது.

காட்டில் வேட்டையாடிக் களைத்த பரீட்சித்து, தனது வீரர்களை விட்டும் பிரிந்துவிட்டான். ஏறி வந்த புரவியும் ஒரு இடத்தில் நீரின்றி மயங்கி விழுந்துவிட்டது. அரண்மனையில் ஏகபோகமாய் வாழ்ந்த பரீட்சித்துவை பசியும் தாகமும் வாட்டத் தொடங்கியது.

நாலாபுறமும் நீரைத் தேடித் திரியலானான். ஒரு மரத்தடியில் முனிவர் ஒருவர் தவத்தில் இருந்தார். பரீட்சித்துவின் கண்ணிலும் பட்டார். அவரைப் பார்க்கவும் பரீட்சித்துவுக்கு உயிர் வந்ததுபோல் இருந்தது. அவரை நெருங்கி, "முனிவர் பிரானுக்கு என் வந்தனங்கள். நான் அஸ்தினாபுரி அரசன் பரீட்சித்து மகாராஜன் வந்திருக்கிறேன். கண் திறவுங்கள்!" என்று கூறி நின்றான். ஆனால், அந்த முனிவரின் நிஷ்டையோ துளியும் கலையவில்லை. நிஷ்டை என்பதே 'உலகை மறந்து

தன்னையும் மறந்து, இருந்தும் இல்லாமல் போவது' தானே! அதை எல்லாம் பரீட்சித்துவின் பசிதாக முள்ள புத்தியால் அப்போது உணர முடியவில்லை.

சற்று கோபமுடன் திரும்ப ஒரு முறை குரல் கொடுத்துப் பார்த்தான். அவரிடமோ அசைவே இல்லை. அவன் வரையில் அந்த முனிவர் அவனைப் பொருட்படுத்தாமல் வெகு அலட்சிய மாய் இருப்பது போலத்தான் உணர்ந்தான்.

"அடேய் மகாமுனி... ஒரு மாமன்னன் வந்து வெகுநேரமாய் குரல் கொடுத்தபடி இருக்கிறேன். உன் காது என்ன செவிடா? என்னை யாரென்று எண்ணினாய்?"

ஊஹூம்... முனிவரிடம் அசைவே இல்லை.

"கிழட்டுப் பயலே! உன்னை என்ன செய் கிறேன் என்று பார்..." என்று அவரது கழுத்தை நெரிக்க முனைந்தான். அப்போதும் அவரிடம் விழிப்பில்லை.

பரீட்சித்துவுக்கு ஏமாற்றமாக மட்டுமில்லை, பெரிதும் அவமானமாகவும் இருந்தது. அப்போது அருகில் ஒரு சர்ப்பம் ஒன்று வயதாகிவிட்ட நிலை யில் உயிர் விட்டிருந்தது. அதைப் பார்த்தவன் அந்த இறந்த பாம்பின் உடம்பை எடுத்து அந்த முனிவரின் கழுத்தில் ஒரு மாலை போல போட்டு விட்டான். "இந்த செத்த பாம்பும் நீயும் கூட ஒன்று தான். உனக்கு இதுதான் மரியாதை! கண் விழித்துப் பார்த்து நீ மனம் நொந்து வருந்த வேண்டும்" என்று கறுவியபடியே அங்கிருந்து விலகினான்.

சற்று நேரத்தில் அங்கே அந்த முனிவரின் மகனான மகாசந்தன் என்பவன் வந்தான். அவன் தன் தந்தையின் கழுத்தில் கிடந்த இறந்த பாம்பின் உடம்பைப் பார்த்து அதிர்ந்தான். அவனும் தபோசக்தி உடையவன் என்பதால், பரீட்சித்து அங்கே வந்து தன் தந்தையின் கழுத்தை நெரித்துக் கொல்ல முயன்ற நிகழ்வெல்லாம் அந்தக் கணமே அவன் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. அவனுக்குள் கோபம் ஆறாகப் பொங்கியது.

'பஞ்ச பாண்டவர்களின் வழிவந்த ஒரு மன்னவன் இப்படிக்கூடவா ஒரு முனிவரின் யோக நிலையின் தன்மையை உணராமல் கீழ்த்தரமாக நடந்து கொள்வான்? இவனுக்கு சரியான பாடம்

கற்பிக்க வேண்டும்!' என்று எண்ணிய மகாசந்தன், அடுத்த கணமே கங்கா ஜலத்தை கையில் எடுத்து பரீட்சித்துவை மனதில் எண்ணிக் கொண்டு சாபம் கொடுக்கத் தயாராகிவிட்டான்.

"எந்த பரீட்சித்து மன்னன் மகாதபஸ்வியான என் தந்தையின் தவத்தைப் பொருட்படுத்தாது அவரைக் கொல்லவும் முயன்று பின் இப்படி ஒரு சர்ப்ப மாலையை சூட்டினானோ... அவனை இதே சர்ப்ப இனத்தை சேர்ந்த தக்ஷகன் என்னும் நாகம் ஒரு வார காலத்துக்குள் தீண்டிக் கொல்லும். இதுவே என் சாபம்!" என்று கூறி, நீரையும் அதன் பொருட்டு தெளித்து முடித்தான்.

இந்த மகாசந்தனை தொடர்ந்து வந்த அவனது நண்பன் கீருத்தி என்பவன் கண்டு கலங்கினான்.

"மகாசந்தா... பரீட்சித்து மன்னன் பரமபவித்ரன். ஆனால், அவனது ஊழ்வினைதான் அவனுக்கு உன்னால் இப்படி ஒரு சாபம் நேரும்படி செய்துவிட்டது. இதைநான் அவனுக்கு உணர்த்துவேன். அப்போதுதான் முனிவர்களுக்கு இழைக்கும் தீங்கு எப்படிப்பட்டபதில் விளைவுகளை உருவாக்கும் என்பது இந்த உலகத்திற்கும் தெரியவரும்" என்று கூறிவிட்டு, அப்போதே பரீட்சித்துவைக் காணப் புறப்பட்டான்.

அஸ்தினாபுரத்தை கீர்த்தி அடைந்தபோது, அதற்குச் சற்றுமுன்புதான் பரீட்சித்துவும் அரண்மனையை எட்டியிருந்தான். மிகுந்த பசி தாகத்துடன் எல்லையில் வந்து விழுந்துவிட்டவனை அரண்மனைச் சேவகர்கள்தான் ஒரு பல்லக்கு கொண்டு வந்து அதில் ஏற்றிக் கொண்டு அரண்மனைக்கு வந்திருந்தனர்.

அதிலேயே கிட்டத்தட்ட ஒரு நாள் கழிந்து விட்டது. அந்த சாபம் பொருட்டு இன்னும் சொச்சம் இருப்பது இன்னும் ஆறுநாட்களே!

எப்படியாவது வேகமாக மன்னனுக்குச் சேதியைக் கூறிவிட வேண்டும் என்ற தவிப்பில், பரீட்சித்துஉணவருந்திக்கொண்டிருக்கும்போதே அரண்மனைக்குள் தடுப்புகளை எல்லாம் தகர்த்துக் கொண்டு நுழைந்து விட்டான் கீர்த்தி. அவனைத் துரத்திக்கொண்டு பின்னாலேயே வீரர்கள் ஓடிவந்ததில் ஒரே களேபரமாகி விட்டது.

வீரர்களை ஒதுங்கச் சொன்ன பரீட்சித்து, கீர்த்தியிடம், "யார் நீ?" என்று வினவிட... அவனும் நடந்ததைக் கூறினான். பரீட்சித்துவிடம் அடுத்த கணமே பேரதிர்ச்சி!

விஷயம் வேகமாய் மந்திரிப் பிரதானிகள் காதுக்கெல்லாம் பரவியது. எல்லோரும் ஓடிவந்து நின்றனர். மொத்தத்தில் அரண்மனையே தீப் பிடித்துக்கொண்டுவிட்டதுபோல்ஒருபரபரப்புக்கு ஆளானது. அந்தக் கணமே பரீட்சித்துவைச் சுற்றி ஒரு வீரர் கூட்டம் நெருக்கமாய் வட்டம்கட்டி காவலுக்கு நின்றுவிட்டது.

பரீட்சித்து அமைச்சர்களிடம், "நான் இந்த கொடிய சாபத்தில் இருந்து தப்பிக்க என்ன வழி?" என்று கேட்டான்.

"சாபமளித்திருப்பவர் ஒரு பிரம்மரிஷி! தாங்கள் புரிந்ததும் பெரும் தவறு. எனவே, விமோசனத்துக்கு வழியே இல்லை!" என்றார் அரண்மனை ராஜயோகி.

"இல்லை... வழி இருக்கிறது! பிரமத்வரை என்பவளும் ஒருமுறை இப்படி ஒரு சாபத்திற்கு ஆளானாள். அவளை முனிவர் ஒருவர் மீட்டெடுத்தார். அந்தக் கதை தெரிந்தால் நீங்கள் இப்படி எல்லாம் அஞ்ச மாட்டீர்கள்!" என்றார் ஒரு அமைச்சர்.

அந்தக் கதை?

18

"துணையும் தொழுந் தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின் பணையும் கொழுந்தும், பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங் கணையும் கருப்புச் சிலையும் மென்பாசாங் குசமும் கையில் அணையும் திரிபுரசுந்தரி, ஆவது அறிந்தனமே...!"

- அபிராமி அந்தாதி

ஒரு அமைச்சர் 'பிரமத்வரை என்பவள் சாபத்திற்கு ஆளாகி மீண்டாள்' என்று சொன்ன உடனே, அரசன் பரீட்சித்துவிலிருந்து சுற்றி நிற்கும் அத்தனை பேருக்கும் ஆர்வம் பற்றிக் கொண்டது. பரீட்சித்து மன்னன் மிகுந்த படபடப்

போடு "அமைச்சரே! யார் இந்த பிரமத்வரை? சற்று விளக்கமாகக் கூறுங்கள்..." என்றான்.

அமைச்சரும் தான் அறிந்த பிரமத்வரையின் கதையைக் கூறத் தொடங்கினார்.

பிரமத்வரையின் தாய் தேவலோக சுந்தரியான மேனகை. அவள் ஒரு கந்தர்வ புருஷனைக் கண்ட போது அவனது எழிலில் மயங்கி விட்டாள். கந்தர்வனும் மேனகையின் எழிலில் மயங்கி விட்டான். இருவருக்கும் பிறந்தவள்தான் பிரமத் வரை!

காமத்தால் பெற்ற பெண்ணைக் கொண்டு செல்ல இந்திர்லோகத்தில் அனுமதி இல்லை. எனவே, தனது மகளை, அவள் ஸ்தூலகேசர் என்னும் முனிவரின் ஆசிரமத்தில் போட்டுவிட்டுப் போய்விட்டாள். அவர்தான் பிரமத்வரையை எடுத்து வளர்த்து ஆளாக்கினார்.

ஒரு ஆச்சரியம் போல, பிரமத்வரை அச்சு அசலாக மேனகை போலவே அழகுத் தோற்றம் கொண்டிருந்தது ஸ்தூலசேகரை சிந்திக்க வைத் தது. தன் தவசக்தியை பிரயோகித்து, "யார் இந்த அழகிய மங்கை?" என்று சிந்திக்க ஆரம்பித்தார். அப்படிச் சிந்தித்தபோது, மேனகைக்கும் கந்தர் வனுக்கும் பிறந்தவள் அவள் என்பது தெரிந்து விட்டது. அப்படியே அவளது ஜாதகமும் அவர் மனக் கண்ணில் விரிந்தது. அதில் அவளுக்கு சர்ப்ப தோஷம் இருப்பது தெரிய வரவும், மிகவும் கலங்கிப் போனார்.

இதையெல்லாம் தன் ஞானதிருஷ்டியால் அறிந்த ஸ்தூலகேசர், பிரமத்வரையின் ஆயுளை யும் கணித்தார். அதன்படி பார்த்தபோது அவருக்கு அதிர்ச்சி! பிரமத்வரை இன்னும் சில தினங்களே உயிரோடு இருக்க முடியும். அதன் பிறகு சர்ப்பம் தீண்டி அவள் உயிர் பிரிந்தே தீரும்.

ஸ்தூலகேசர் மனம் கலங்கினார். பிறப்பிலேயே அனாதரவாகிவிட்டவளுக்கு நல்லதொரு எதிர் காலமும் இல்லாமல் போய்விட்டதை அவரால் ஜீரணிக்கமுடியவில்லை. பிரமத்வரையோ இதை எதையும் அறியாதவளாக அந்த ஆசிரமத்தையும் அதைச் சுற்றியுள்ள வனப் பகுதியையும் சுற்றித் திரிந்து கொண்டிருந்தாள்.

பிரமத்வரையை மரணத்திலிருந்து மீட்டு அவளுக்கு வாழ்க்கை தரவல்ல சக்தி யாரிடம் உள்ளது என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அவரது அதிர்ஷ்டமாக நாரதர் அந்தப் பக்கமாய் வந்தார். அவரைப் பார்க்கவும் ஸ்தூலகேசருக்கு அப்போதே பிரமத்வரையைக் காப்பாற்ற வழி கிடைத்துவிட்டது போல ஒரு மகிழ்ச்சி. மிகுந்த உவகையுடன் நாரதரை வரவேற்றார். நாரதர் எதிரில் பிரமத்வரையும் வந்தாள்.

"குழந்தாய்! நாரத மகரிஷியை வணங்கி ஆசிகளைப் பெற்றுக் கொள்!" என்றார். அவளும் அவரை வணங்க முற்பட்டாள். அப்போது ஸ்தூலகேசர் நாரதரை, "சௌபாக்கியவதியாக நிறைந்த ஆயுளுடன் வாழும்படி வாழ்த்துங்கள்!" என்று தூண்டியும் விட்டார். நாரதரும் அவ்வாறே வாழ்த்தினார்.

பின் பிரமத்வரையைப் போகச் சொல்லிவிட்டு, "நாரதரே! நீங்கள் சர்வலோக சஞ்சாரி. கைலாயமும், வைகுண்டமும் உங்களுக்கு பந்துக்களின் வீடுகளைப் போன்றது. நீங்கள் நினைத்த போதெல்லாம் போய் வரலாம்..." என்று ஆரம்பித்தார்.

நாரதர், "ஸ்தூலகேசரே, என்ன விஷயம்? எதற்கு இந்த பீடிகை?" என்றார்.

"இது பீடிகையல்ல நாரதரே... ஒரு உண்மை! சர்வலோக சஞ்சாரியான உங்களுக்கு பிரம்ம தேவன் தந்தை என்றால், அந்த திருமால் உங்கள் ஆத்மநாயகன். பரமேஸ்வரனும் உங்களின் திளைத்த பக்திக்கு உரிய இஷ்ட தெய்வம்... சரிதானே?"

"இதில் மாதா பராசக்தியை விட்டுவிட்டீர்களே...? அப்படியே வேழ முகத்தோனையும், ஆறுமுகனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்..."

"மொத்தத்தில் அத்தனை தெய்வங்களுக்கும் தாங்கள் அன்பிற்குரியவர் என்பது உண்மைதானே?"

"அதில் என்ன சந்தேகம்... சரி, இப்போது எதற்கு இந்தக் கேள்வி?"

"நாரத மகரிஷி... உங்கள் வாக்கின் சக்தியை உணரவே நான் இந்த கேள்விகளை எல்லாம் எழுப்பினேன்."

"என் வாக்கின் சக்தியை உணரவென்றால்...?"

"மகரிஷி... சற்றுமுன் நீங்கள் அழகிய பிரமத் வரையை ஆசீர்வதித்தீர்கள் அல்லவா?"

"ஆம்! அவளுக்கென்ன?"

"த்ரிகால ஞானியான தங்களுக்குக் கூடவா அவளது எதிர்காலம் எப்படிப்பட்டது என்பது தெரிய வில்லை?"

"அவசியமின்றி நான் ஒருவரின் எதிர்காலம் பற்றி எல்லாம் சிந்திப்பதில்லை. பிரமத்வரையின் எதிர்காலத்துக்கென்ன?"

"மகரிஷி... தேவலோக சுந்தரியான மேன கைக்கு பிறந்தவள் இவள். அதோடு சர்ப்ப தோஷமும் கொண்டு பிறந்திருக்கிறாள். நெடிய ஆயுளுக்கும் வழி இல்லை. வரும் திருக்கார்த்திகை மாலை வேளை வரைதான் அவளுக்கு ஆயுள் பாவம் உள்ளது."

"அடடா! என்ன ஒரு துன்பம்... என்ன ஒரு துன்பம்."

"இப்படிச் சொன்னால் எப்படி நாரதரே... சௌபாக்கியவதியாக நீண்ட ஆயுளுடன் வாழ்வாய் என்று வாழ்த்தி உள்ளீர்கள். உங்கள் வாழ்த்து பலித்தால் அல்லவா அவள் நீண்ட காலம் வாழ முடியும். அதனால்தான் உங்கள் வாக்கின் சக்தி பற்றி சிந்தித்து நான் கேள்வி எழுப்பினேன்."

ஸ்தூலகேசர், நாரதரை மடக்கிவிட்டதுபோல் பார்த்தார். நாரதர் முகத்திலோ தீவிர சிந்தனை!

"என்ன நாரதரே, யோசிக்கிறீர்கள்? பிரமத் வரையின் விதியை மாற்றமுடியுமோ, முடியாதோ என்றா?"

"விதியின் வலிமையை மாற்ற அந்த பரந்தாம னுக்கே அதிகாரம் இல்லை என்பது நான் அறிந் திருக்கும் உண்மை."

"அப்படியென்றால் உங்கள் வாக்கு பொய்யாகி விடுமா?"

"இதற்கு எனக்கு பதில் தெரியவில்லை முனிவரே!"

"இப்படிச் சொன்னால் எப்படி? உத்தமமான மகரிஷியான உங்களின் வாக்கு பலிக்காமல்

போனால் நீங்கள் மகரிஷி என்பதற்கே பொருள் இல்லாது போய்விடும். அது பலித்துத்தான் தீரவேண்டும் என்றால் பிரமத்வரை நெடுங்காலம் உயிர் வாழ்ந்தாக வேண்டும்!"

"சரி, இந்த குழப்பம் நீங்க வழிதான் என்ன?"

"சர்வலோக சஞ்சாரியான தங்களுக்கே குழப்பம் என்றால் நாங்கள் எல்லாம் எங்குதான் போவது?" ஸ்தூலகேசர் அழுத்தமாய் கேட்டு முடிக்க, நாரதரிடமும் ஒரு உபாயம் தோன்றியது.

"ஸ்தூலகேசரே... இந்த இக்கட்டிற்கு விடை தரும் சக்தி எனக்குத் தெரிந்து அந்த ஆதிசக்தியான பராசக்தி தேவியிடம்தான் உள்ளது. நீங்கள் அவளைப் பிரார்த்தனை செய்யுங்கள். நானும் என் ஆசிகள் பொய்யாகி விடக்கூடாது என்று பிரார்த்திக் கிறேன். பிரமத்வரையின் விதியை எண்ணி என் மதி காட்டும் வழி இது ஒன்றுதான்."

அடுத்த நொடியே ஸ்தூலகேசர் தனிமையை நாடி 'ஓம் சக்தி' என்று துதி செய்தபடி அமர்ந்து விட்டார்.

அதன் விளைவோ, இல்லை பிரமத்வரையின் விதியோ... ருரு என்னும் முனிவர் ஒருவர் ஆசி ரம வளாகத்தில் நடமாடிக் கொண்டிருந்த பிரமத் வரை மேல் பட்ட நொடி தான் ஒரு தவசி என் பதையும் மறந்து பிரமத்வரை மேல் காதல் கொண்டு விட்டார். அந்தக் காதலோடு ஆசிரமத்தை சேர்ந்த மற்றவர்களிடம் பிரமத்வரை பற்றியும் கேட்டார்.

அவர்களும் பிரமத்வரை ஸ்தூலகேசரின் வளர்ப்பு மகள் என்றனர். தான் பிரமத்வரையை மணக்க விரும்புவதை கூறினார்.

"தயவுசெய்து முறைப்படி வந்து ஸ்தூலகேச ரிடம் பேசுங்கள். ஸ்தூலகேசர் பண்பாட்டைப் பெரிதும் போற்றுபவர்..." என்றனர்.

ருருவும் அவ்வாறே தன் தந்தையான பிரமாதி, தாயான பிரதாபி இருவரிடமும் தன் விருப்பதைக் கூறி அவர்களுடன் வந்து பெண் கேட்பதாகக் கூறி, புறப்பட்டார். ருரு இப்படி ஆசிரமத்தில் உள்ளோர் களிடம் பேசிய சமயம், ஸ்தூலகேசர் சக்தி உபாசனையில்தான் இருந்தார்.

ருரு தான் விரும்பினால் மட்டும் போதாது. பிரமத்வரைக்கும் தன்னைப் பிடித்திருக்கிறதா

என்று அரிய விரும்பி ஆசிரமத்தை ஒட்டியுள்ள ஆரபி ஆற்றின் கரைக்கு அவள் எப்படியும் நீராட வரக்கூடும் என்று காத்துக் கொண்டிருந்தார். அவர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. பிரமத்வரை நீராடுவதற்கு மான்போல துள்ளிக் குதித்தபடி வந்தாள். அவளை நேருக்கு நேர் சந்தித்த ருருவைப் பார்த்த நொடி அவளுக்கும் அவர் மேல் காதல் தோன்றியது.

அந்த நொடியே இருவரும் ஒருவரை ஒருவர் மறந்து கட்டித் தழுவிக் கொண்டனர். ஒரு கட்டத்தில் வெட்கம் தாளாது பிரமத்வரை அவர் பிடியில் இருந்து நழுவியவளாக நீங்கத் தொடங்கினாள்.

ருருவும் மையலோடு பார்த்தபடியே, "கவலையின்றி செல்வாய், பிரமத்வரை... என் தாய் தந்தையருடன் நாளையே வந்து உன் வளர்ப்புத் தந்தையான ஸ்தூலகேச முனிவரிடம் நான் உன்னை மணம்புரியக் கேட்பேன். இந்த நொடியே நீயும், நானும் காந்தர்வ மணம் புரிந்து கொண்டவர்களாவோம். இனி, நீ வேறு, நான் வேறு இல்லை..." என்றார்.

பிரமத்வரையும் மனமெல்லாம் காதல் பொங்கி வழிந்திட திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே சென்றாள். ஆசிரமத்தையும் அடைந்துவிட்டவள், தன் எண்ணத்தை ஸ்தூலகேசரிடம் கூறிவிடலாம் என்ற எண்ணத்துடன் அவரைத் தேடியவளுக்கு அவரது சக்தி உபாசனை பெரிதும் ஆச்சரியம் அளித்தது. உடன் இருக்கும் சீடர்களும், "முனிவரின் இந்த உபாசனை எங்களுக்கே ஆச்சரியம் தருகிறது. சற்றுமுன் கண்விழித்த முனிவர் நீ எங்கே என்று கேட்டார். ஆற்றுக்கு நீராடச் சென்றுள்ளாய் என்றோம்... அதைக் கேட்டு வருத்தம் கொண்டார். பின் எங்களிடம் ஒரு கட்டளை இட்டார். நீ ஆசிரமத்துக்கு வந்துவிட்ட நிலையில் ஆசிரமத்தைவிட்டு எங்கேயும் உன்னை போக விடக் கூடாது என்பதுதான் அந்தக் கட்டளை. குறிப்பாக, வரும் கார்த்திகை நாள் வரும்வரை நீ ஆசிரமத்தை விட்டு ஒரு அடி கூட வெளியேறக் கூடாது என்று கூறிவிட்டார். எனவே, நீ ஆசிரமத்துக்கு உள்ளேயே இருப்பாய்..." என்றனர்.

பிரமத்வரைக்கு அவர்கள் சொன்னது அவ்வளவும் ஆச்சரியம் தந்தது. நாளைக்கு பெண்கேட்டு

வருவோரை அப்போது என்ன செய்வது என்ற கேள்வியும் எழுந்தது. காலமும், நேரமும், கழியத் தொடங்கியது.

மறுநாளும் வந்தது. சொன்னபடி ருரு முனிவர் வரவில்லை. பிரமத்வரை கலங்கத் தொடங்கினாள். மறுநாள் கார்த்திகை. வெளியேறிச் சென்று அவரை நேரில் காண்பதற்கும் ஆசிரமத்தில் தடை! ஸ்தூலகேசரோ சக்தி உபாசனையைத் தொடர்ந்த படி இரந்தார்.

கார்த்திகை நாளும் வந்தது. குறிப்பாக அந்த மாலை வேளை. கதிரவனை ஒரு மேகக்கூட்டம் வந்து மூடி மறைத்த நிலையில் ஆசிரமும் இருளத் தொடங்கியது. சீடர்கள் விளக்குகளை ஏற்றினர். ஸ்தூலகேசரும் கண்திறந்தார். அவர் எதிரில் பிரமத்வரை! அவளை உயிருடன் பார்க்கவும், அவருக்கு தனது சக்தி உபாசனை கை கொடுத்துவிட்ட சந்தோஷம்.

"பிரமத்வரை அருமை மகளே! நீ நலமாக இருக்கிறாயா! உனக்காகத்தானம்மா நான் சக்தி உபாசனையும் புரிந்தேன். விதியின் கோரமான கரங்களில் சிக்காது உன்னைக் காப்பாற்றிவிட் டேன். அந்த ஆதிசக்தி தேவியும் எனக்கு கை கொடுத்து விட்டாள்" என்று பலவாறு பிரமத் வரையைப் பார்த்துப் புளகாங்கிதமுடன் பேசினார்.

பிரமத்வரைக்கோ ஒன்றும் புரியவில்லை.

"தந்தையே! தங்கள் பேச்சு புதிராக உள்ளது. எனக்கு என்ன குறையென்று உபாசனை புரிந் தீர்கள்?" என்றாள்.

"சொல்கிறேன். முதலில், தேவிக்கு மலர் கொண்டு துதித்து நன்றி கூறுவோம். நீ போய் நம் ஆசிரமத்து தோட்டத்திலிருந்து மலர்களைப் பறித்து வா..." என்றார்.

பிரமத்வரையும் மலர்க்கூடையுடன் புறப்பட் டாள்.

மனோரஞ்சித மலர்ச் செடியையும் நெருங்கி விட்டாள். அதுவரை அடைந்திருந்த மேகக்கூட் டம் விலகி கதிரவன் திரும்பவும் தென்பட்டான். ஆசிரமத்துக்குள்ளும் அந்த மாலை வெளிச்சம் பரவத் தொடங்கியது.

அதைப் பார்த்த ஸ்தூலகேசரிடம் அதிர்ச்சி.

"அடடே! இன்னும் அஸ்தமனம் ஆகவில்லையா... ஆகிவிட்டதாக கருதிவிட்டேனே... மகளே பிரமத்வரை..." என்று கத்திக்கொண்டே வெளியே வந்தவர் அந்தக் காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

மனோரஞ்சித மலர்ச் செடிமேல் அந்த சர்ப்பம் படம் விரித்து தன் சிரசை உயர்த்தியிருந்தது.

19

'அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு செறிந்தேன் நினது திருவடிக்கே திருவே! - வெருவிப் பிறிந்தேன் நின்அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சால் மறிந்தே விழும் நரகுக்குறவாய மனிதரையே!'

- அபிராமி அந்தாதி

மனோரஞ்சித மலர்ச்செடி மேல் ஒரு சர்ப்பம் படம் விரித்தபடி இருப்பது, இயல்பான விஷயம் தான். அந்த மலரின் வாசம் மிகுந்த போதை தரவல்லது. மனதை பரவசப்படுத்தவும் வல்லது. அதன் காரணமாகவே அதற்கு அப்படி ஒரு பெயரும் வந்தது. அப்படிப்பட்ட ஒரு மனோரஞ்சித மலர்ச்செடி மேல் பரவிக்கிடந்த அந்த சர்ப்பத்தை பிரமத்வரை கவனிக்கவில்லை. விதி அவளைக் கவனிக்க விடவில்லை என்று சொல்வதுதான் சரி.

பிரமத்வரையின் பூங்கரங்கள் தேவிபூஜையை மனதில் எண்ணியபடியே ரஞ்சித மலர்களையும் பறிக்கலாயிற்று. அப்படியே அவளது கரமானது உயர்ந்து சர்ப்பம் இருந்த இடத்திற்குச் சென்று பூப்பறிக்க முயன்றபோது, அந்த சர்ப்பம் சீற்றமாய் அவள் மணிக்கட்டில் ஒரு கொத்து கொத்தியது.

சட்டென்று கரத்தை பிரமத்வரை மின்னல் வேகத்தில் பின்னும் இழுத்தும் பலனில்லை! பிரமத்வரையை விஷம் மட்டுமல்ல, மயக்கமும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது!

அப்படியே மயங்கி அந்த மனோரஞ்சிதச் செடிக்கு கீழேயே விழுந்தவள் மேல் அந்த சர்ப்பமும் விழுந்து அவளது வயிற்றின் மேல் படம் விரித்துக் கொண்டு எழும்பி நிற்கத் தொடங்கியது.

'பிரமத்வரை. பிரமத்வரை.' என்று கத்திக் கொண்டே வந்த ஸ்தூலகேசரும் கொடிய அந்த காட்சியைக் கண்டு அப்படியே ஸ்தம்பித்தார். அந்த நொடியே விதியின் வலிமையையும் புரிந்து கொண்டார். கூடவே ஓடிவந்த சீடர்களும் அந்தக் காட்சியை கண்டு அதிர்ச்சி கொண்டனர். அவர் களில் ஒருவன் பேசலானான்.

"குருவே... பிரமத்வரைக்கு இப்படி ஏதாவது உத்பாதம் ஏற்படும் என்றுதான் கட்டுப்பாடுகளை விதித்தீர்களா?"

"ஆம் சீடனே... ஆனாலும், விதி விஞ்சிவிட்டது..."

"தாங்கள் சக்தி உபாசனை புரிந்தது...?"

"பிரமத்வரையை விதியிடம் இருந்து மீட்கத் தான்..."

"ஆயினும் விதியே விஞ்சிவிட்டதே... என்றால் சக்தி உபாசனைக்கு சக்தி இல்லை என்பது பொருளா?"

"எதையும் பூரணமாகச் செய்ய வேண்டும். சக்தி உபாசனையை நான் எங்கே பூரணமாகச் செய்தேன்? பொழுது இருட்டிவிட்டது என்று தவறுதலாக உணர்ந்து உபாசனையை முடித்துக் கொண்டு விட்டேனே!"

"சக்தி உபாசனையில் இருந்த உங்களையே விதி கவிழ்த்துவிட்டது என்றால், விதிதான் எப் பொழுதும் பெரிதா? எதனாலும் அதை வெல்லவே முடியாதா?"

"இங்கே நடந்துவிட்ட சம்பவம் அதைத்தானே சீடனே நமக்கு உணர்த்துகிறது?"

ஸ்தூலகேசர் கேள்வியோடு தன் கண்களில் வழிந்த நீரை துடைத்துவிட்டுக் கொண்டார்.

அந்த சர்ப்பமும் தன் கடமை முடிந்ததுபோல விலக ஆரம்பித்தது. பிரமத்வரையின் செவ்விய தேகம் அப்படியே நீலம் பாரித்து விறைத்தும் போய்விட்டது.

அப்போது ஸ்தூலகேசரைப் பார்த்து கேள்வி கேட்ட சீடன் எதிர்பாராத ஒரு செயலில் இறங்கி னான். தனது துறவுக் கோலத்தை வேகமாக கலைத்துக் கொள்ளத் தொடங்கியவன், திரு நீற்றுச் சின்னங்களையும் அழித்துக் கொண்டான்.

"சீடனே... என்ன இது? ஏன் இப்படி நடந்து கொள்கிறாய்?" - ஸ்தூலசேகர் பதறினார்.

"மன்னியுங்கள் குருவே... எப்போது விதிப்பாடு தான் பெரிது என்பது தெரிந்துவிட்டதோ, இனி துறவு பூண்டு இறைவனை நினைப்பதில் பொருளே இல்லை. நாளையே என்னையும் ஒரு சர்ப்பம் தீண்டி எனக்கு மரணம் வரலாம்... அப்போது இந்தத் துறவோ தவமோ துளியும் உதவப் போவதில்லை; உதவவும் முடியாது என்றால் இது எதற்கு? ஆதிசக்திதேவியை உபாசித்தே கடைத் தேற முடியவில்லை என்றால்... உபாசிப்பதில் பொருள் இல்லை; நடப்பதுதான் நடக்கும், என்பது தானே அதன் உட்பொருள்?"

சீடனின் பொருள் நிரம்பிய கேள்விக்கு ஸ்தூலகேசர் பதில் கூற முடியாது தத்தளித்தார்.

"குருவே... இனி நான் என் மனம்போன போக்கில் போகப் போகிறேன்... புலனை அடக்கி வாழ்வதால் ஒரு பயனும் இல்லை. உடம்பில் உயிர் இருக்கும் நாட்களில் உலக இன்பங்களை அனுபவித்து வாழ்வதே புத்திசாலித்தனமாகும். ஒருவருக்கு எதுவும், எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். அதை ஒருவராலும் மாற்ற முடியாது என்பதுதான் நன்றாகத் தெரிந்துவிட்டதே!"

சீடனின் குரலில் ஏமாற்றம், விரக்தி, கோபம் எல்லாமே வெளிப்பட்டது. ஸ்தூலகேசருக்கும் அவனை எப்படிச் சமாதானம் செய்வது என்றே தெரியவில்லை.

'இத்தனை இளம் வயதில் இப்படி அரவம் தீண்டி உயிரை விட்டுவிடுமளவிற்கு அப்படி எந்தப் பாவத்தை செய்துவிட்டாள் பிரமத்வரை?'

'ஒருவேளை, இவள் பாவம் செய்தவளாகவே இருப்பினும் சக்தி உபாசனை புரிந்த அளவிற்காவது நற்பயன் கிட்டி இருக்க வேண்டுமே?'

இப்படி அங்குள்ளோரிடமும் பலவிதமான கேள்விகள்! அவ்வளவிற்கும் விடை கிடைக்குமோ கிடைக்காதோ தெரியாது... பிரமத்வரையை தகனம் செய்திடும் கடமை ஒரு தந்தையாகிய தனக்கு இருப்பதை உணர்ந்து ஸ்தூலகேசர் அதற்குத் தயாரானார்.

பிரமத்வரையின் உடலைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு அங்கிருந்தே ஆற்றங்கரை நோக்கி நடந்தார். சீடர்களும் பின்தொடர்ந்தனர்.

ஆற்றங்கரையில் அவளைக் கிடத்தி சீடர்களின் மூலமாக விறகுக் கட்டைகளை எடுத்து வந்து அடுக்கி அக்னியை மூட்டவும் தயாராகிவிட்டார். அப்போது "பிரமத்வரை... என் கண்ணே! என்னை விட்டுப் போய் விட்டாயா? என் தேவி..." என்று பலவாறு குரல் கொடுத்தபடி ஒருவர் ஓடி வரும் அரவம் கேட்டது.

வந்தவர் ருரு. இளம் சந்நியாச கோலத்தில் கண்களில் நீருடன் வந்த ருரு, வந்த வேகத்திலேயே ஓடிப்போய் பிரமத்வரை உடல் மேல் விழுந்து கண்ணீர் வடிக்கத் தொடங்கிவிட்டார்.

ஸ்தூலகேசர் வெகுண்டு, "ஏய் சந்நியாசி... என்ன இது! இறந்திருப்பவள் ஒரு கன்னிப்பெண் என் மகள்! அவளைத் தழுவி நீ கண்ணீர் வடிக்கிறாயே... அதுவும், ஒரு சந்நியாசியாக இருந்து கொண்டு..." என்று சீறினார்.

"மன்னியுங்கள் முனிவரே... பிரமத்வரை என் காதலி... இல்லையில்லை, நான் அவளை காந்தர்வ மணம் புரிந்துகொண்டு விட்டேன். நேற்றுதான் நானும் இவளும் கூடி இன்புற்றோம். இன்று உங்களை நாடி வந்து பெண் கேட்டு மணம் புரிய எண்ணியிருந்தேன்.

நான் பிரமாதி என்னும் தந்தைக்கும், பிரதாபி என்னும் தாய்க்கும் பிறந்தவன். என் பெயர் ருரு! பிரம்மச்சர்ய தவத்தைவிடவும் கிரஹஸ்தாத்திரம் பெரிது என்னும் என் தந்தை வழி செல்லவே விரும்பினேன். அப்போதுதான் தங்கள் மகளான பிரமத்வரையையும் கண்டேன். கண்ட உடனேயே காதல் பிறந்துவிட்டது. பிரமத்வரையும் பெண் கேட்கச் சொன்னாள். ஆனால், வரும் முன் விதி இப்படி விளையாடி விட்டதே?" என்று ருருவும் விதியையே இடித்துரைத்தார.

அதைக் கேட்ட ஸ்தூலகேசரின் பிரதான சீடனுக்கு கோபம் வந்துவிட்டது.

"இதைச் சொல்லத்தான் இப்போது வந்தீர்களோ? 'விதிதான் பெரிது... விதிதான் பெரிது...' என்று இன்னும் எத்தனை பேர் கூறப் போகிறீர்கள்?

அந்த வார்த்தையையே நான் வெறுக்கிறேன். விதியாம் விதி... பொல்லாத விதி... இதை சாமான்ய மனிதர்களாலும் வெல்ல முடியாது. சந்நியாசிகளின் தவத்துக்கும் ஆற்றல் கிடையாது என்றால், உணர்வால் மட்டுமே உயிர் வாழ்ந்திடும் ஆடு மாடுகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

அவையாவது பரவாயில்லை. அவற்றுக்கு தானொரு உயிரினம், ஒரு நாள் மரணம் வந்தே தீரும் என்று எதுவும் தெரியாது. இறப்பதற்கு முன் வரை எந்த கூச்சமும், நெருடலும், தவிப்பும் இன்றி வாழ்க்கையை வாழ்ந்துவிடுகின்றன. ஆனால் அரிதான இனம் இந்த மானிடம் என்று பெரிதாய் பெருமைப்பட்டுக் கொள்ளும் நாமெல்லாம் இப்படியா விதியின் கைப்பாவைகளாய் இருப்பது? ச்சே!"

இந்தக் கேள்வியும் கோபமும் ருருவை சீண்டியது போல் ஆகிவிட்டது.

"சீடனே, நீ என்னை வெகுவாக யோசிக்க வைத்து விட்டாய்! உன் கேள்விகளின் நியாயம் என்னை குத்திக் கிழிக்கிறது. நானும் ஒரு தவசிதான்... என் இளம் பிராயத்தை தவத்திலேயே கழித்தவன். அந்த ஆதி சக்தி தேவியே என் தவத்தின் நாயகி. அவளை நான் துதித்ததும், அவளை நோக்கி கடும் தவம் செய்ததும் உண்மை எனில், என் தவப்பயன்களின் பேராலே நான் அந்த ஆதிசக்தியை கேட்கப் போகிறேன் ஒரு கேள்வி..." என்ற ருரு.

"தாயே! எனது தவமும் பக்தியும் நிஜம் என்றால், இங்கு பிணமாய் கிடக்கும் என் பிரமத்வரை உயிர் பெற்று எழ வேண்டும். அப்படித் தராவிட்டால் நீ பொய். உன் சக்தி பொய்... உன்னைத் துதித்து தவம் புரிந்து என் தவமும் பொய்... ஏன் எல்லாமே பொய்! வா... வந்து உயிரைக் கொடு... உயிரைக் கொடு! 'நான் என்றும் உண்மையான தவசிகளின் பக்கத்திலே இருப்பவள், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து தருபவள்' என்பதை உணர்த்து!" என்று ஆகாயம் நோக்கி இரு கைகளையும் விரித்துக் கொண்டு குரல் எழுப்பினார். அவரது கூக்குரல், அந்த ஆற்றங்கரை எங்கும் எதிரொலித்தது.

அதன் விளைவாக வானில்கூட ஏராளமான சலனங்கள். ருருவும் விடாமல் கூக்குரல்

எழுப்பினார். ஆயினும் பிரமத்வரையிடம் எந்த அசைவுமில்லை. ருருவிடம் ஆவேசம் அதிகமாகத் தொடங்கியது. அதே வேகத்தோடு ஸ்தூல கேசரைப் பார்த்தவர், அவர் வசம் இருந்த தீப் பந்தத்தை பிடுங்கிக்கொண்டு, "ஸ்தூலகேசரே, இனியும் நான் உயிர் வாழ்வதில் பொருளே இல்லை. எப்போது நான் கூக்குரல் எழுப்பியும் அன்னை செவிசாய்க்கவில்லையோ, அப்போதே அவள் இல்லை என்பதாகவே எனக்கு தோன்றுகிறது. இருக்கிறாள் என்றாலோ விதியை அவளும் வெல்ல முடியாதவளாகவே இருக்கிறாள் என்பது எனக்கு புரிந்துவிட்டது.

விதியை வெல்லமாட்டாத அவளைத் தொழுது கொண்டு உயிர் வாழ்வதற்கு என் பிரமத்வரை யோடு கூடி நான் தீப்புகுவதே மிகமிக மேலான செயல்!" என்றபடியே தீப்பந்தமுடன் பிரமத்வரை யின் சடலம் நோக்கி ருரு செல்லவும், வானில் மின்னல் கீற்று ஒன்று வெட்டிப் பிளந்தது!

பயங்கர இடிச்சப்தமும் எழும்பி அடங்கிட, விண்மிசை தன் எருமை வாகனத்தின் மீது ஏறி அமர்ந்தவனாக ருருவை நோக்கி வந்தபடி இருந்தான் எமதர்மன்

20

'மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே!
கொன்றை வார் சடைமேல்
பனிதரும் தின்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்பந்தி என்னாளும் பொருந்துகவே!'

- அபிராமி அந்தாதி

விண்மிசை எமன் வருவதை ருருவும் பார்த் தார். அவர் மட்டுமல்ல, உடன் இருந்த ஸ்தூலகேசர் முதல் அவரது சீடர்கள் அவ்வளவு பேரும் பார்த்தனர். எமனும் தன் எருமையோடு வந்து பிரமத்வரையின் தகன மேடை முன் நின்றான்.

ஸ்தூலகேசர் அந்நிலையிலும் எமனுக்கு வணக்கம் செய்தார்.

"காலதேவனே! உயிர்களின் முடிவானவனே! யமராஜனே! உனக்கு என் வந்தனங்கள்!"

"வந்தனம், முனிவரே வந்தனம்! என்னை தாங்கள் இப்போது எதிர்பார்க்கவில்லை அல்லவா?"

"ஒரு வகையில் எதிர்பார்க்கவில்லைதான்... என் மகள் உயிரோடு இருந்து தாங்கள் வந்திருந்தால் அதில் ஓர் பொருள் உண்டு. அவள் உயிரைக் கைப்பற்றிச் சென்றுவிட்டு தகன க்ரியை நடைபெறும்போது வந்திருக்கிறீரே..."

"நான் எங்கே வந்தேன்... இங்கிருந்து என் எமலோகம் வரை கேட்ட ஒரு சத்தியக்குரல் என்னை அசைத்து இங்கு வ ரவழைத்துவிட்டது..." என்ற யமனும் ருருவைப் பார்த்தான்.

ருருவோ பிரமத்வரையின் சடலத்தின் மீதே பார்வையைப் பதித்திருந்தார். யமனைப் பார்க்கப் பிடிக்காத கோபம் அதில் துல்லியமாகத் தெரிந்தது.

"ருரு முனிவரே... என்னைச் சற்றுப் பாரும்..."

"நான் பார்த்து என்னாகப் போகிறது யமனே? என் தேவியின் உயிரை விழுங்கிவிட்டு, 'சத்தியக்குரல் கேட்டது. அதனால் வந்தேன்' என்கிறீர். எதற்கு? ஆறுதல் கூறவா?"

"ஆம்... உமது தவத்தின் சக்தியே உம்மை நான் மதித்தாக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி இங்கே அழைத்து வந்துவிட்டது! அதிலும் அந்த ஆதிசக்தி நாயகியை சாட்சி வைத்து ஆவேசம் பொங்க பேசிய பேச்சு, எனது யமலோகத்தை மட்டுமல்ல... வைகுண்ட கைலாச, சத்யலோகங்களையும் எட்டி அங்குள்ளோரையும் சிந்திக்க வைத்துவிட்டது."

"அப்படியென்றால்... அந்த ஆதிபராசக்திக்குப் பயந்தே இங்கு வந்திருக்கிறீர் என்று சொல்லும்..."

"தவறு முனிவரே... தவறு! அச்சத்தை வென்றவர்களே யமாதிபதியாகிட இயலும். விதி முடிந்த உயிர்களைப் பறிப்பது எனக்கு இடப்பட்ட கடமை...

"துள்ளித்திரியும் இளமையில் தேவி பூஜைக்காக மலர் பறிக்க வந்தவளை... ஒரு சர்ப்பத்தை விட்டு தீண்டச் செய்து உயிரைப் பறித்துச் செல்வதா கடமை? நூறாண்டுகள் கடந்தும்

வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலர் இருக்க, அவர்களை எல்லாம் விட்டுவிட்டு பருவ வயதில் ஒரு பெண்ணை விதியின் பேரால் கொண்டு செல்வது எந்த வகையில் நியாயம்?"

"ஆண்டுக் கணக்கை நான் பார்ப்பது இல்லை ருரு முனிவரே... அது அவரவர் கர்மத்தால் உருவாவது."

"அதே கர்மம்தானே தேவியை பூஜிக்க வைத்தது! அதே கர்மம்தானே ஆயுள் கோரி பரிகார பூசைகளையும் செய்ய வைத்தது! அவற்றுக்கு ஒரு பொருள் இல்லையா?"

"அதன்பொருட்டே நான் இங்கே நேரில் வந்திருக்கிறேன். சமாதானமும் கூறிக் கொண்டிருக்கிறேன்!"

"யாருக்கு வேண்டும் உனது சமாதானம்! எனக்கு தேவை எனது தேவியின் உயிர்!"

"அது சாத்தியமில்லை. இயற்கையை மீறும் செயல் அது! மாண்டவர் மீள்வதென்பது மண்ணுலகில் நிகழக்கூடாத ஒன்றும்கூட!"

"என்னால் அப்படி எண்ண முடியவில்லை. அதுதான் உலக நியதி என்றால், இதோ என் தேவிக்கான சிதை நெருப்பில் நானும் குதிக்கிறேன். என் உயிரையும் பறித்துக் கொண்டு போ..."

"ருரு முனியே... புலனடக்கத்தில் தேர்ந்த தாங்களா இப்படிப் பேசுவது? ஒரு சராசரி மனிதன் போல உணர்ச்சிவசப்படுவது முனிவருக்கு அழகா? தற்கொலை புரிந்து கொள்வது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா? உங்களுக்கான உயிர் பிரியும் காலம் தாங்கள் பிரம்ம ராட்சஸனாக திரியும் நிலை ஏற்படும் என்பதை எண்ணிப் பாருங்கள்!"

"எனக்கும் தெரியும்... ஒரு தேவி உபாசகன், அவள் கருணையை யாசித்தவன் முதலில் அவள் காதலித்தவளை இழந்தான்; பின் தன்னுயிரையும் இழந்தான்; அதற்கும் பின் பிரம்மராட்சசனாகி திரிந்தான் என்று உலகு பேசட்டும். கர்மவினை, கர்ம வினைஎன்று சொல்லியே இந்தபுறஉலகில்மனிதர்களைக் கட்டிப் போட்டு விடலாம் என்று எண்ணாதீர். கர்மவினையைக் கூட ஒருவன் தேவியின் அருளால் சீர்த்திருத்திக் கொண்டான் என்று பேசப்பட வேண்டும் என்பதே என் ஆழ்ந்த கருத்து..."

ருருவின் தீவிரமான பதில் யமதர்மனை வெகு வாக யோசிக்க வைத்தது. ருருவும் ஸ்தூலகேசரைப் பார்த்தார்.

"அருமை முனிவரே! என் தேவியின் சடலத் துக்கு தீயிடுங்கள். நானும் என் தேவியோடு அவள் சென்ற இடத்துக்கே செல்கிறேன்!" என்று ருருவும் பாயத் தயாரானார் மீண்டும்.

யமதேவனிடம் வேகமாய் ஒரு மாற்றம்!

"ருரு முனியே... உமது தீவிரமான காதலை யும், அதனினும் மேலான தேவி பக்தியையும் மெச்சினேன். எவ்வளவு அசைத்தும் நீர் அசைய வில்லை. அதே சமயம், விதிப்பாட்டை எதன் பொருட்டும் மாற்றிட எனக்கு அதிகாரமில்லை. வேண்டுமானால் ஒன்று செய்யுங்கள். இதுகூட உங்கள் பரிகார நிமித்தம் நீங்கள் காட்டிய தீவி ரத்தை பார்த்ததனால் நான் எடுக்கும் முடிவாகும்!" என்று யமதேவனும் பலமாய் பீடிகை போட்டான்.

"என்னவென்று கூறுங்கள்..."

"உங்கள் ஆயுளில் பாதியை நீங்கள் உங்கள் காதலிக்கு அளிப்பதாக இருந்தால், இதோ இந்த பிரமத்வரையின் உயிரை நான் இப்போதே அளித்து விடுகிறேன்..."

"இவ்வளவுதானா! இவள் பொருட்டு என் ஆயுளையே தரத் துணிந்த நான்... ஆயுளில் பாதியைத் தரமாட்டேனா? இப்போதே அதற்கான பிரமாணத்தை நான் புரிகிறேன். இந்த நொடி முதல் என் ஆயுளில் பாதி என் தேவியை சேரட்டும்" என்றார் ருரு.

யமனும் பிரமத்வரை உயிரைத் திரும்பத் தந்தான்.

எந்த சர்ப்பம் அவளைத் தீண்டியதோ... அதுவே திரும்பபிரமத்வரையைத் தீண்டிய கைமணிக்கட்டு பாகத்தில் தன் வாயை வைத்து விஷத்தை எல்லாம் உறிஞ்சி எடுத்தது. பிரமத்வரையும் மூர்ச்சைப் பெற்று உயிர் பெற்றாள்.

அந்த சர்ப்பமும் நேராக அங்கிருந்து ஸ்தூல கேசர் சக்தி பூஜை புரிந்த யாக சாலை நோக்கிச் சென்று அங்குள்ள சக்தி கலசத்தை வலம் வந்த நிலையில் தன்னுயிரை விட்டது.

ஒரு வகையில் அது பிரமத்வரைக்கு பதிலாக நான் இறக்கிறேன் என்பது போலவும் அமைந்து விட்டது. அதைப் பார்த்த ஸ்தூலகேசரும் ருரு முனி வரும் ஆனந்தக் கண்ணீர் சிந்தினர். யமதேவனும் ருருவையும் பிரமத்வரையையும் வாழ்த்திவிட்டு தன் வாகனத்தில் ஏறிக் கொண்டு திரும்பிச் சென் றான்.

இந்தச் சம்பவத்தை பரீட்சித்து மகாராஜா விடம் சொன்ன அமைச்சர், மற்றவர்களையும் பார்த்தார். பரீட்சித்து முகத்தில் ஒரு புத்தொளி.

"அமைச்சரே! தாங்கள் சொன்ன சம்பவம் எனக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது. ருரு முனிவர் பிரமத் வரையை மீட்டதுபோல என்னை மீட்கவும் ஒருவர் நிச்சயம் வருவார். அவர் யாராக இருக்க முடியும்?" என்று பரீட்சித்து மன்னன் கேள்வி எழுப்பினான்.

'நானும் அந்த அம்பிகையை சரண் புகுவேன்' என்று கூற ஏனோ அவனுக்குத் தோன்றவில்லை. அதை அங்குள்ள மற்றவர்களும் உணராததுதான் விந்தை.

"மன்னா! ஒன்று. மட்டும் நன்றாக புரிகிறது. ஏதோ ஒரு வகையில் தாங்கள் தப்பித்துவிட வழி இருக்கிறது! தாங்கள் சபிக்கப் பெற்று இன்றோடு மூன்று நாட்கள் முடிந்துவிட்டது. சாபப்படி தாங்கள் இறக்க இன்னும் சில தினங்களே உள்ளன. தங்களுக்கான மரணமும் ஒரு சர்ப்பத்தினால்தான் என்பதும் தெளிவாகத் தெரிந்துவிட்டது. எனவே, தாங்கள் சர்ப்பங்களே அணுகமுடியாதபடி ஒரு கட்டுக் காவலுக்குள் சென்றுவிட்டால் காப்பாற்றப் பட்டு விடலாம்.

நமது நாட்டுக்குள்ளேயே தாங்கள் வெகு ஆசையாகக் கட்டிய ஒரு ஏழடுக்கு மாளிகைதான் தாங்கள் பாதுகாப்போடு இருந்திட தோதான ஒரு இடமாகும். அந்த மாளிகையைச் சுற்றிலும் அகழி உள்ளது. அதில் தீ வளர்த்து அது அணைந்து விடாதபடி காவல் காப்போம். அதோடு... மாளிகை வாயில், சாளரம், திறந்தவெளி என்று எல்லா இடங்களிலும் எந்த ஒரு அரவமும் உட்புகுந்திட முடியாதபடி அரவங்களுக்கு எதிரான மணி மந்திர ஔஷத வேர்களைத் தூவி வைப்போம்.

இதற்கும் மேலாக, காஷ்யபன் என்று ஒரு அந்தணன் இருக்கிறான். அரவம் தீண்டிவிட்டவர்களை அவர்கள் சப்த நாடி அடங்கும் முன் தனது மந்திர சக்தியாலே உயிர்ப்பித்து எழ வைப்பவன் அவன். ஆலகால விஷத்தை உண்டவர்களை மீட்கக்கூடிய மந்திர சக்தியைக் கற்று வைத்திருப்பவன். அந்த காஷ்யபனை உங்களின் காவல் பொருட்டு அழைத்துள்ளேன். அவன் உங்களுக்கு அருகில் ஒரு நொடி கூட அகலாமல் நின்று கொண்டிருப்பான்... எனவே, நீங்கள் இனி ஏதன் பொருட்டும் கவலைப்படத் தேவையில்லை..." என்றார் அந்த அமைச்சர்.

பரீட்சித்துவுக்கும் பெரிய அளவில் நம்பிக்கை வந்துவிட்டது. அப்போதே மந்திரிப் பிரதானிகள் புடைசூழ ஏழடுக்கு மாளிகைக்கு சென்றான். அங்கே மையத்தில் உள்ள மண்டபத்தின் சிம்மாசனத்திலும் அமர்ந்து கொண்டான்.

அவனைச் சுற்றிலும் காவல்வீரர்கள் கைகோத்துக் கொண்டு நிற்கத் தொடங்கினர். அவன் தலைக்கு மேலாக ஒரு குடை பிடிக்கப்பட்டது! காலில் இருந்து தொடை வரை மூடிய நிலையில் தோலால் ஆன காலணியோடு கூடிய உறை ஒன்றும் அணிவிக்கப்பட்டது! அதேபோல கைகளிலும் உறை அணிந்து கொண்டான். சிரசுக்கு மேல் தங்க கிரீடம்!

மொத்தத்தில் அவன் உடம்பில் முகம் மட்டுமே தெரிந்தது! இவ்வளவும் போதாது என்று அந்த காஷ்யபனை கையோடு அழைத்துவர அமைச்சர் ஆட்களை அனுப்பினார். அவர்களும் புறப்பட்டுச் சென்றனர்.

இந்தக் காட்சிகளை எல்லாம் நாகலோகத்தில் இருந்தபடியே பார்த்தக் கொண்டிருந்தான் தஷகன் என்ற நாகன்! இவனே முனிவரின் சாபத்தை ஈடேற்றும் கடப்பாடு கொண்டவன். தஷகன் இனத்து நாகம்தான் கொல்லப்பட்டு கிடந்தது. அதைத்தான் பரீட்சித்துவும் அன்று கானகத்தில் முனிவரின் கழுத்துக்கு மாலையாகப் போட்டிருந்தான்.

எனவே தனது கடமையை ஈடேற்றும், பொருட்டு தஷகனும் நாகலோகம் விட்டுப் புறப்பட்டான். புறப்படும் போதே காஷ்யபனை உத்தே

சித்து கலக்கமும் கொண்டான். ஏனென்றால், காஷ்யபனின் மந்திர சக்தி எப்பேர்ப்பட்ட விஷத்தையும் முறிக்கவல்லது என்பது தஷகனுக்கும் கூறப்பட்டிருந்தது. 'இப்படிப்பட்டவன் அருகிலிருக்க, தான் எவ்வளவு சாமர்த்தியமாகப் போய் பரீட்சித்துவை தீண்டினாலும் இவன் பிழைக்க வைத்து விடுவான். சாபப்படி ஒருமுறை கடிக்கவே உரிமையுண்டு. எனவே, காஷ்யபனை எப்படியாவது அங்கே செல்லாமல் தடுத்து நிறுத்துவது மட்டுமே தனது கடமையை ஈடேற்றும் வழி' என்று நினைத்தான் தஷகன்.

காஷ்யபன், வீட்டில் மந்திர உபாசனை புரிந்தபடி இருந்தான். தேவியின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி அர்ச்சித்தபடி காஷ்யபன் வணங்கிக் கொண்டிருக்க, அமைச்சரின் ஆட்கள் வீட்டுக் கதவை தட்டினார்கள்.

காஷ்யபனோ பூஜையின்போது யார் வந்தாலும் பூஜைக்கு நடுவில் எழுந்து செல்ல விரும்பாதவன். எனவே, தேவி உபாசனையில் தொடர்ந்து அப்படியே அமர்ந்துவிட்டான். கதவைத் தட்டித் தட்டிப் பார்த்த அமைச்சரின் ஆட்கள் அவன் வீட்டில் இல்லை என்று முடிவுக்கு வந்து திரும்பிச் செல்லத் தொடங்கினார்கள்.

அதேசமயம், தஷகன் நாகலோகத்தில் இருந்து நேராக காஷ்யபன் வீட்டில் அவன் பூஜை அறையில்தான் பிசன்னமானான். காஷ்யபன் தன்னை உணர்ந்திடாதபடி தன்னை மறைத்துக் கொண்டான். அவன் தேவி வழிபாடு செய்வதைக் கண்டு மகிழ்ந்தான்.

ஆனால், கண்களை மூடிக் கொண்டு உபாசனையில் இருந்த காஷ்யபனிடம் சட்டென்று ஒரு மாற்றம். ஒரு தீய வாசனையை உணர்ந்தவன் போல கண்களைத் திற்தவன் தன் முன் உள்ள மந்திரநீரை கையில் எடுத்து நாக மந்திரம் ஒன்றை ஜெபித்து, "இங்கே என் நாசிக்கு குந்தகம் விளைவித்தபடி பதுங்கி இருக்கும் நாகம் எதுவாக இருப்பினும் அது என் முன்னால் பிரச்சன்னம் ஆகட்டும்!" என்று சொல்லி தெளித்த நொடி... தஷகனின் ஐந்து தலை நாகச் சிரசுடன் கூடிய உடல் அங்கே தோன்றி, அவனுக்கும் தெரியத் தொடங்கியது.

21

**"பொருந்திய முப்புரை; செப்பு உரைசெய்யும் புணர் முலையாள்;
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி, வார் சடையோன்
அருந்திய நஞ்சு அமுது ஆக்கிய அம்பிகை, அம்புயமேல்
திருந்திய சுந்தரி, அந்தரிபாதம் என் சென்னியதே"**

- அபிராமி அந்தாதி

தஷகனை அந்த இடத்தில் பார்த்த காஷ்யனுக்கு முதலில் சினம்தான் ஏற்பட்டது!

பொதுவில் வீட்டுக்குள் சர்ப்பங்களை பார்ப்பவர்கள் அச்சத்தில் நடுங்கிப்போவார்கள். ஆனால், காஷ்யபனோ தேவி உபாசகன். அதனாலேயே மணி மந்திர ஔஷத வித்தை அவ்வளவும் அறிந்தவன். சர்ப்பங்களைக் கண்டு பிறர் அஞ்சக் காரணமான அவற்றின் நஞ்சை முறிப்பதில் பெரும் சாதுர்ய முடையவன். காஷ்யபன் நினைத்தால் எப்பேர்ப்பட்ட சர்ப்பத்தையும் ஒரு மண்புழுவாக ஆக்கிவிட முடியும். அதெல்லாம்தான் அவனை அச்சத்திற்கு ஆட்படுத்தாமல் கோபப்படுத்தியது.

"அரவமே! கால்கள் என்று ஒன்று இல்லாத தாலேயே நீ வருவதும் போவதும் தெரியாத ஒன்றாகவே உள்ளது. இதில் மறைந்திருந்து ஒரு மனைக்குள் புகுவது என்கிற மாயத்தையும் நீ அறிந்திருப்பதை இப்போது பார்க்கிறேன். தேவி பூஜை புரியும் எனது இடத்தில் உனக்கு என்ன வேலை?" என்று சீறி விழுந்தான்.

ஆனால், தஷகன் இதற்கெல்லாம் பதிலுக்கு கோபப்படவோ... சீற்றம் காட்டவோ விரும்பவில்லை.

"காஷ்யபனே! உன்னைப் பற்றி நானறிவேன். நான் நாகலோகத்து அரவ ப்ரஜை! என் பெயர் தஷகன். ஐயன் திருமாலின் சயனப்படுக்கையாக விளங்கும் ஆதிசேஷனுக்கும் அமுதம் கடையப் பயன்பட்ட வாசுகிப் பாம்புக்கும் நான் உறவினன். சக்தி மிகுந்த முனிவர்களின் சாபங்களை நிறைவேற்றும் சத்தியக் கடப்பாடு உடையவன்! அப்படி ஒரு கடமையை நிறைவேற்றத்தான் நான் இப்போதும் வந்திருக்கிறேன்..." என்றான்.

"அதற்காக என் கிருகத்துக்கு நீ வர வேண்டிய காரணம்?"

"நீ தானே அரசன் பரீட்சித்துவின் உயிருக்கு காவல் காக்கப் போகிறவன்?"

"அப்படி என்று உன்னிடம் யார் கூறியது?"

"நீ பூஜையில் யோக மௌனத்தில் இருந்த போது பரீட்சித்து அரசனின் ஊழியர்கள் உன்னை அழைத்துப் போக வந்திருந்தனர். பிறகு, நீ இல்லை என்பதுபோல உணர்ந்து திரும்பிவிட்டனர். எப்போது வேண்டுமானாலும் அவர்கள் திரும்பி வரக்கூடும்..."

"சரி அதற்கென்ன?"

"இது ரிஷி சாபம். இதுவே பரீட்சித்துவின் விதி என்பதை நீ உணர வேண்டும்!"

"சாபம், விதி என்பதெல்லாம் உன் கருத்து. என் வரையில் அரசனை காப்பாற்ற வேண்டியது என் கடமை. அதை நான் ஈடேற்றுவதில் என்ன தவறு இருக்க முடியும்?"

"வேண்டாம்... பின் அந்த ரிஷியின் சாபத்துக்கு நீயும் ஆளாவாய். சாபமும் வரமும் உள்ளது உள்ளபடியே நடந்தாக வேண்டியவைகளாகும். அவை மறுக்கப்பட முடியாத சக்தி உடையவை."

"அப்படியானால் எங்கள் அரசர் எதற்கு தப்பிக்க எண்ணுகிறார்?"

"யாருக்காவது விஷக் கடிபட்டு உயிரைவிட மனது வருமா? இந்த வாழ்வின் மேல் உள்ள பற்றுதான் விட்டு விடுமா?"

"அதெல்லாம் சாமான்யர்களுக்குச் சரி... எங்கள் அரசர் பாண்டவ வம்சத்தில் வந்தவர்! தர்ம புத்திரரை சகோதரனாகக் கொண்ட அர்ஜுனனின் வழித் தோன்றலான அபிமன்யுவுக்கே புத்திரர்...

"எல்லாம் சரி... இத்தனை கீர்த்தி மிக்கவர் ஒரு முனிவரின் சாபத்துக்கு மட்டும் ஆளாகலாமா?"

"அது விதியின் பிழையாக இருக்கலாம் தானே?"

"சரியாகச் சொன்னாய்... விதியின் பிழைதான்! முன் ஜென்மத்துப் பிழைதான் பின் ஜென்மங்களில் விதியாக மாறுகிறது. இப்போது நீயும் பிழை புரிந்தால் உன் அடுத்த ஜென்மத்தில் நீ அதற்கு பதில் கூறும்படி வரும்..."

"என்ன மிரட்டுகிறாயா?"

"இல்லை. தேவி பூஜை புரிந்த நிலையில் உன்னிடம் யாசகம் கேட்கிறேன். என் கடமைக்கு குறுக்கே நிற்காதே. அரசனைக் காப்பாற்ற நீ முனைந்தால் அரசன் உனக்கு எவ்வளவு பொன்னும் பொருளும் தருவானோ அதனை நான் உனக்கு தருகிறேன்..."

"இதற்கு நான் மறுத்தால்...?"

"மறுக்க உனக்கு வழியில்லை. நீ ஒருவகையில் மணிமந்திரத்தை வைத்து பிழைப்பு நடத்துபவன். உனக்கு பொன் பொருள் தருபவர் எஜமானர் ஆவார். அவ்வகையில் நான் உனது எஜமான்.எனதுகட்டளைப்படிநீநடந்துதான்தீரவேண்டும்..."

தஷகன் சாதுர்யமாக மடக்கவும், காஷ்யபனும் வேறுவழியின்றி தஷகன் தந்த பொன், பொருளை வாங்கிக் கொண்டு, "உனக்கு நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டிட, "நான் பரீட்சித்துவை கொல்லும் வரை நீ இந்த ஊரிலேயே இருக்கக் கூடாது. இப்போதே ரகசியமாக மாறுவேடம் அணிந்து இந்த ஊரைவிட்டு வெளியேறிவிடு!" என்றான் தஷகன்.

காஷ்யபனும் அவ்வாறே செய்தான்!

தஷகன் தனது கடமையை நிறைவேற்ற தடையாக இருந்த காஷ்யபனை வெளியேற்றிவிட்ட நிலையில் பரீட்சித்துவின் அரண்மனைக்கு எப்படி நுழைவது என்று யோசிக்க தொடங்கினான்.

அரண்மனையைச் சுற்றிலும் அகழி... அதில் கொழுந்துவிட்டு எரியும் தீயானது தரை மார்க்கமாக வெல்ல முடியாது என்றது! மாயமாய் உள் நுழையலாம் என்றாலோ மணிமந்திர வேர்கள் மாய உருவத்தை காட்டிக் கொடுத்துவிடுவதாக இருந்தது. பறந்து செல்லவும் தடை!

இறுதியாக அந்தண வடிவம் எடுத்து, பூஜை பிரதாசங்களுடன் உள்ளே செல்பவர்களைப் போல செல்வதுதான் ஒரே வழி என்று தீர்மானித்து தன் நாக இனத்து சில நாகங்களை அழைத்து அந்தண வடிவம் கொள்ளச் செய்து, அவர்கள் கையில் தேவிக்கு அணிவிக்கப் பெற்ற ஒரு கதம்ப மாலையைத் தந்து, அந்த மாலைக்குள் ஒரு சிறு பூ நாகமாய் தன்னை ஆக்கிக் கொண்டு

மலர் மொட்டு ஒன்றுக்குள் ஒளிந்து கொள்ளவும் செய்தான்.

நாகந்தணர்களும் மாலையுடன் அரண்மனையை அடைந்தனர். ஆனால், உள்ளே செல்லத் தான் அவ்வளவு சுலபத்தில் அனுமதி கிடைக்கவில்லை. "இது தேவிக்கு போடப்பட்ட மாலை... இதை மன்னர் அணிந்து கொண்டால் அவர் உயிர் பிழைப்பது உறுதி..." என்று வற்புறுத்திக் கூறிய பிறகே, அனுமதி கிடைத்தது.

அதே வேளையில், பரீட்சித்துவின் நிலையை அறிந்த சப்தரிஷிகளில் ஒருவரான கௌதம மகரிஷி வந்திருந்தார். பரீட்சித்து அவர் கால்களில் விழுந்து வணங்கி, தான் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திட ஆசீர்வதிக்குமாறு வேண்டினான்.

கௌதமரோ, "விதியை வெல்ல முடியாது பரீட்சித்து! உனது ஆயுள் முடியும் தருணம் வந்துவிட்டது... அதுவே உன்னை வனத்துக்கு வேட்டைக்கு அனுப்பியது. தாகத்தில் தவிக்கவிட்டது. உயிரை விட்டுவிட்டிருந்த சர்ப்பத்தை மாலையாக முனிவர்பிரான் கழுத்தில் போடவும் வைத்தது. அனைத்துக்கும் மேலாக, உன் வாழ்க்கை வருங்கால சந்ததிகளுக்கு பாடமாக வேண்டும் என்பது தான் உன் நிலைப்பாடு.

சக்திமிகுந்த முனிவர்களின் சாபத்துக்கு இருக்கும் சக்தியை வருங்கால உலகம் உன்னை வைத்தே உணரும். அதே சமயம், சக்தியை வழி பட்ட காரணத்தால் அவளது பேரருளே உயிர் பறிக்க வந்த யமனை பிரமத்வரை வரையில் கண்ணுக்கு காட்டி ருரு முனிவனின் ஆயுளில் பாதியை பெற்றுக் கொள்ள வழி செய்தது.

எனவே, நீ இப்போதிருந்தே இறைநாமம் கூறுவது, சக்திதேவியாகிய அன்னை ஆதிசக்தியின் பாகவதத்தை கேட்பது என்று உன்னை மாற்றிக் கொள். அது போகப் போகும் உன் உயிரை வலியற்றதாக்கி உன்னையும் முக்திக்கு இட்டுச் செல்லும்.

மரணத்தை எதிர்நோக்கி இருப்பவர்கள் எதைப் பற்றியும் எண்ணக் கூடாது. அவர்கள் மனதில் அந்த ஹரியும் சிவனும் இருக்க வேண்டும். அவர்களின் செவியிரண்டும் தேவியின் கருணைக்குரிய

சம்பவங்களை கேட்டறிந்து, அவர்கள் உள்ள மானது பக்தியில் நெகிழ்ந்து போக வேண்டும். உனக்கான காலத்தை 'உயிர் தப்பி விடலாம்' என் கிற தவறான ஆசையால் வீணடித்து விடாதே... இந்த நொடியே தேவியின் உபாசனைக்கு உன்னை ஆட்படுத்திக்கொள்..." என்று விரிவாக எடுத்துரைத் தார்.

பரீட்சித்து அதைக் கேட்டு குழம்பியபோது ஒரு அமைச்சர் அவனிடம் வந்து, காஷ்யபன் ஊரை விட்டே சென்றுவிட்ட சம்பவத்தை கூறவும்... பரீட்சித்துவுக்கு அதுவே விதியின் வலிமையைப் புரியவைத்துவிட்டது.

அப்போது தேவியின் பாகவத கதைகளை காது குளிர கேட்பதற்கு தயாராகிவிட்டான் பரீட்சித்து.

தேவியின் மகாத்மியத்தை உணர்த்தும் சில சம்பவங்களைக் கேட்டு நெகிழ்ந்த நிலையில் பிரசாத மாலையும் வந்தது. அதை ஏற்று அணிந்து கொண்ட பரீட்சித்துவுக்கு அப்போதே தன்னை மரணம் நெருங்கி விட்டதும் புரிந்து விட்டது. மாலையில் மொட்டுக்குள் ஒளிந்திருந்த தஷ கனும் ஒரு பூ நாக வடிவில் பூ மொட்டை விட்டு வெளியில் வந்து பரீட்சித்துவின் கழுத்துப் பக்கம் கடிக்கவும், உடம்பெங்கும் நீலம் பாரித்து பரீட்சித்துவும் உயிரை விட்டான்.

காலம் உருண்டது!

விதி வலியது என்பதே நிரூபணமாகி நின்றது.

இறந்துவிட்ட பரீட்சித்துவுக்கு ஒரு பிள்ளை இருந்தான். அவன் பெயர் ஜெனமே ஜெயன்! இவனை நினைக்கும்போதே இவன் செய்த சர்ப்ப யாகம்தான் எல்லோர் நினைவுக்கு வ ரும்.

ஜெனமே ஜெயன், தன் தந்தைக்கு ஏற்பட்ட துர் மரணத்தைக் கேள்விப்பட்டு வருந்தி நின்றபோது உதங்க மகரிஷி என்னும் முனிவர் அவனைத் தேடி வரத் தொடங்கினார். தஷகனால் கொல்லப்பட்ட பரீட்சித்துவின் பிள்ளையான ஜெனமே ஜெயனால் தான் சர்ப்ப இனத்தையே அழிக்கமுடியும் என்பது அவர் எண்ணம்! குறிப்பாக தஷகனை அழித்தே தீர வேண்டும் என்பது உதங்க மகரிஷியின் தீர் மானம்.

ஆனால், சர்ப்ப இனத்துக்கோ அந்த ஆதிசக்தி தேவிதான் பெரும் காவல்! நாகங்களை தன் மேனிமேல் ஆபரணமாக பூண்டிருப்பவள் அவள்.

ஜனமே ஜெயனின் சர்ப்ப யாகமும் அதன் முடிவில் தேவியின் இடையீடும் எப்படி தேவி பாகவதத்துக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது என்பதை அடுத்து பார்ப்போம்.

22

'சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திருமந்திரம்; சிந்துர வண்ண பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடிமுறை முறையே
பன்னியது என்றும் உன்தன் பரமாகமப் பத்ததியே!'

- அபிராமி அந்தாதி

பரீட்சித்து மன்னன் மாண்டுவிட்டான். விதி வலியது என்பதையும் இந்த உலகம் அவன் மூல மாகவே உணர்ந்து கொண்டுவிட்டது.

விதி வலியது என்கிற ஒரு உண்மை மட்டு மல்ல. 'வலிய விதியால் உயிரை இழப்பவர்களின் ஆன்மா சொர்க்கத்துக்கோ... இல்லை, நரகத் துக்கோ செல்வதில்லை. அவை அமைதியின்றி அலைந்தபடியே இருக்கின்றன' என்பதுதான் நாம் அறிய வேண்டிய அடுத்த கட்ட உண்மை!

பரீட்சித்துவின் ஆன்மாவும் அப்படித்தான் அலைந்தது.

இப்படி அலைகிற ஆத்மாக்களுக்கு கர்மகாரியங் களை முறைப்படி செய்வதால் சாந்தி ஏற்படும். ஆனால், சிலர் வரையில் அவர்கள் அநியாயமாக கொல்லப்பட்டிருப்பார்கள். அப்படிக் கொலை யுண்டவர்கள், தங்களைக் கொன்றவர்கள் கொலை யாகும்வரை அமைதியடைய மாட்டார்கள்.

இதில் பரீட்சித்துவும் தன்னை அநியாயமாக தஷகன் என்கிற பாம்பு தீண்டிவிட்டதாகவே கருதி னான். தஷகனுக்கும், பரீட்சித்துவுக்கும் நேராக எந்த விரோதமும் இல்லை. முனிவரின் சாபம் தஷ கன் வடிவில் வந்து அவன் உயிரை வாங்கிவிட்டது. இதனால் அமைதியின்றி அது அலைவதைப் பார்த்தே உதங்க மகரிஷி பெரிதும் வருந்தினார்.

உதங்க மகரிஷி வரையில் இதற்கு தீர்வு - தஷகன் கொல்லப்பட வேண்டும் என்பதே! அதைச் செய்ய வேண்டியதும் பரீட்சித்துவின் மகனான ஜெனமே ஜெயனின் கடமை என்று அவர் கருதினார்.

பித்ருசாபம் என்பது மிகக் கொடியது. பித்ருக்கான கர்மகாரியங்களைச் செய்யாத எவரும் இந்த உலகில் புகழ், செல்வம் இவைகளோடு வாழ்ந்தது இல்லையே! இதனால், தர்மபுத்திரர்களின் வம்சமல்லவா பாழ்படும்! எனவேதான், உதங்க மகரிஷி ஜெனமே ஜெயனைச் சந்தித்து பரீட்சித்துவின் பரிதாபமான ஆன்ம அலைச்சலை அவனுக்கும் தெரிவிக்கத் தயாரானார்.

தஷகனை அழித்து பரீட்சித்துவுக்கு மோட்ச உலகம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது மட்டுமே உதங்கருக்கு நோக்கம் கிடையாது. அவர் வரையில் ருரு முனிவர் காதலித்த பிரமத்வரை விஷயத்திலும் அரவம் தீண்டித்தான் அவர் உயிர் பிரிந்திருந்தது. பிறகு ருரு தனது ஆயுளில் பாதியைக் கொடுத்ததாலேயே பிரமத்வரை உயிர்த்து எழுந்தாள். இதுவும் உதங்கரை பெரிதும் பாதித்துவிட்டிருந்தது.

'பொல்லாத அரவங்கள் தவசிகளின் வாழ்விலும் புகுந்து விளையாடி விடுகின்றன. எனவே, இவற்றைப் பூண்டோடு அழித்தால் மட்டுமே இந்த உகில் ஒரு நியாயம் தோன்றும்' என்று அவர் கருதினார். அதனாலேயே ஜெனமே ஜெயனைச் சந்தித்து அவர் தஷகனை அழிக்கும் முகமாய் சர்ப்ப யாகம் புரியச் சொன்னார்.

முதலில் ஜெனமே ஜெயன் தயங்கினாலும் தந்தையின் ஆன்ம நலனை உத்தேசம் செய்து அதற்குத் தயாரானான். • அவன் தயாரானான் என்பதைவிட உதங்க மகரிஷி அவனைத் தயார்ப்படுத்தினார் என்பதே உண்மை!

ஜெனமே ஜெயன் சர்ப்ப யாகம் புரியப் போகிறான் என்கிற தகவல் உடனேயே ஈரேழு பதினான்கு உலகத்துக்கும் பரவி விட்டது. இதனால் பெரிதும் அச்சப்பட்டது நாகலோகம்தான்! ஜெனமே ஜெயன் யாகம் செய்வதால் அவ்வளவு நாகங்களும் மற்ற அரவங்களும் அழிந்தே தீரும்.

தந்தை பரீட்சித்துவின் ஆன்ம லாபத்துக்காக, ஒரு இனத்தையே அவன் அழிக்க முனைவதும், அதற்கு உதங்க மகரிஷியே காரணமாக இருப்பதும் எந்த வகையில் சரி என்கிற ஒரு விவாதம் இதனால் எல்லா இடங்களிலும் தோன்றிவிட்டது.

முனிவர்கள் இடுகிற சாபங்களை நிறைவேற்று கிற கருவியாகத்தான் பாம்புகள் இருக்கின்றன. ஒருவர் விதி முடியும்போது அங்கே காலதேவன் அரவங்களை கையில் எடுத்துக் கொண்டு அவற்றை கடிக்கச் செய்து உடம்பில் விஷத்தைப் பரப்பி உயிரை உருவி எடுத்து விடுகிறான். எந்த ஒரு பாம்பும் தேடிப்போய் ஒருவரை கடித்துக் கொல்வதில்லை. கொல்லப் போவதுமில்லை. அப்படி இருக்க, இப்படி ஒரு நிலை தங்களுக்கு எப்படி வரலாம் என்பது அரவங்களின் கேள்வியாக இருந்தது.

மொத்தத்தில் தவம் செய்யும் முனிவர் ஒருவ ரால் கொலை ஆயுதங்களாகிப் போன அரவங் களுக்கு ஒரு பெரும் முடிவு ஏற்படும் நிலை உரு வாகிவிட்டது. இந்த நிலையை உருவாக்க பரீட்சித்து மன்னனின் ஆன்மா துடித்துக் கொண்டிருப்பது ஒரு காரணம். அவ்வளவு தான்!

அந்த ஆதிசக்தியின் படைப்பில் முள்ளும் சரி, மலரும் சரி, ஒன்றாகவே படைக்கப்பட்டன. குத்துவதால் முள் தீயது, வாசமாக இருப்பதால் மலர் உயரியது என்பதெல்லாம் பார்ப்பவர்களின் கோணத்தைப் பொறுத்தது.

அழகிய உடம்பின் நிழல் கறுப்பாகவே உள் ளது. உடல் அழகானது என்பதனால் நிழல் அதற் கேற்ப மாறுவதில்லை. இரண்டையும் சமமாகப் பார்க்கத் தெரிந்தவனே ஞானி... ஒன்றின் அரு மையை அதற்கு நேரடியான ஒன்றாக மட்டுமே புரிய வைக்க இயலும்.

ஆதிசக்தி இந்த ஞானத்தைக் கொண்டே உலகைப் படைத்து, அதில் உயிர்களையும் படைத் தாள்! ஆனால், அந்த உயிர்கள் தங்களுக்குள் இப்படி மோதிக் கொள்ளும் ஒரு நிலை மட்டும் எப்படியோ வந்து விடுகிறது.

தக்ஷகனும் ஜனமேஜயன் புரியப் போகும் சர்ப்ப யாகத்தை எண்ணி கலங்கிப் போனான்.

நிச்சயம் தான் உயிர்விட்டாக வேண்டும் என்பதை உணர்ந்தவன், யாகத் தீயில் விழுந்து உயிர் விடும் முன்பு, தான் தப்பிக்க ஏதாவது வழி இருக்கிறதா என்று சிந்தித்தான்.

அப்போது அவனுக்குள் தோன்றியவர்தான் ஆஸ்தீகர் என்கிற ரிஷி! இவர் எல்லா வகையிலும் உதங்க மகரிஷிக்கு நேர் எதிரானவர்!

உதங்க மகரிஷி ஜனமே ஜெயனை சர்ப்ப யாகம் புரிய தூண்டியதே பரீட்சித்துவின் ஆத்ம விடுதலைக்காகத் தான். அதாவது, பித்ருக்களின் திருப்தி - அவர்களது முக்தி இவையே முக்கியம் என்பதற்காகத்தான். இதே காரணம் கருதி ஒரு முனிவர், அரவக் கூட்டத்தை சேர்ந்த வாசுகி என்னும் பாம்பின் தங்கையை மணந்து கொண்டதால் அதன் காரணமாய் வாரிசாக வந்தவர் தான் ஆஸ்தீகர்.

ஆஸ்தீகர் வந்தவிதமே மிக அலாதியானது. அதைப் பார்த்துவிட்டு தக்ஷகனிடம் வருவோம். அப்போதுதான் தக்ஷகன், ஆஸ்தீகரைச் சரணடைய நினைத்தது எதனால் என்பது விளங்கும்!

ஜரத்காரு என்று ஒரு முனிவர்.

இவர் இல்லறத்தை விரும்பாமல் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்துவிட எண்ணினார். இல்லறம் என்பது இவருக்கு எட்டிக்காயாகவே இருந்தது.

ஒரு நாள், இவர் நதிப்புலத்தில் நீராடிவிட்டுத் திரும்பும்போது அன்று அமாவாசை நாள்! பித்ருக்கள் பூமியில் தங்களுக்கான பசியைத் தீர்த்துக் கொள்ளும் நாள்.

இறைவனுக்கு நாம் படையல் இடுகிறோம். அந்த படையலை அவன் அப்படியே எடுத்துக் கொள்வதில்லை. படையலிலிருந்து வரும் வாசமும், ஆவியும் அவனுக்கு போதுமானது. இதனாலேயே 'ஆவி அவனுக்கு - அன்னம் நமக்கு' என்கிற ஒரு வழக்கும் தோன்றியது.

இது அப்படியே பித்ருக்களுக்கும் பொருந்தும். அவர்களுக்கு நம்மைப் போல் பூத உடல் கிடையாது. ஆனால் உள்ளம் உண்டு. நாம் படைக்கும் படையலைப் பார்த்து அவர்கள் உள்ளம் அதை உண்டுவிட்ட திருப்தியைக் கொள்ளும்.

அடுத்து, எள்ளையும், நீரையும் அவர்கள் பெயரை சொல்லி நிலத்தில் விடும்போது, நிலமாகிய எள் அவர்களின் கர்ம பாவத்தை நீக்குவதற்கு உதவி செய்து அவர்களையும் ஆவி நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு உந்தி எடுத்துச் செல்லும். இது கருதியே இறந்தவர்களின் நினைவாகப் படையல் இடப்படுகிறது.

கர்மகாரியங்கள் செய்பவர்கள் பெற்றோர்கள் நிமித்தம் பட்டினி கிடந்து அந்த கர்மகாரியத்தை செய்யும்போது நாம் பசித்திருப்பதால், நம் பிள்ளைகள் தானும் பசித்திருக்க விரும்பி இருக்கிறார்கள். 'இவர்கள் பாசம்தான் என்னே?!' என்று உருகி மனதார வாழ்த்துவார்கள். அந்த வாழ்த்துதான் நம்மை வாழச் செய்யும்.

இதை அறியாதவர் அல்ல ஜரத்காரு. இருந்தும் ஒரு அறியாமையில் பிரம்மச்சாரியாகவே அவர் தன்னை வைத்திருந்தபடியால் மனைவியோடு கூடி கிரஹஸ்தனாக இருந்து அவர் செய்ய வேண்டிய பித்ரு காரியங்களைச் செய்ய இயலாத ஒரு நிலை இருந்தது. இதனால் ஜரத்காருவின் பெற்றோர்கள் இறந்தும் மோட்சம் சித்திக்காமல் ஆவியாகவே அலைந்து கொண்டிருந்தனர்.

அன்று நீர்நிலைக்கு வந்த அவரது கண்ணெதிரில் ஒரு மரத்தில் அவர்கள் தலைகீழாக தொங்கியும், தாகத்தை வெளிக்காட்டி 'தாகம்... தாகம்' என்று குரல் கொடுத்தும் ஜரத்காருவிற்கு தங்கள அவல நிலையை உணர்த்த முயன்றனர்.

தவத்தில் சிறந்தவர்களுக்கு காற்றை ஊடுருவி நோக்கும் ஆற்றலும் ஏற்பட்டுவிடும். அதன் காரணமாய் ஜரத்காருவிற்கும், தங்கள் முன்னோர்கள் தலைகீழாய் தொங்கியபடி தவிப்பது கண்களுக்குப் புலனாயிற்று.

பதைத்துப் போனார்.

"தங்கள் ஆத்மா ஏன் சாந்தியடையாமல் இப்படித் தொங்கிக் கொண்டிருக்கிறது?" என்று பெற்றோரிடம் கேட்டார்.

அவர்களும் "அப்பனே! நீ இல்வாழ்வில் ஈடுபடாமல் ஒரு பிரம்மச்சரிய துறவியாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாய். தவத்தால் முக்தி அடைந்து விடலாம் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறாய்.

ஆனால், எங்களுக்குச் செய்ய வேண்டிய கர்மக் கடன்களை கழிக்காமல் எல்லா வகை தவங்களை தவம் செய்தாலும் உனக்கு முக்தி சித்திக்காது..." என்கின்றனர்.

ஜரத்காருவும் அப்போதே திருமணத்திற்குத் தயாரானார். ஆனாலும், "என் நோக்கம், தவம் மற்றும் விருப்பத்துக்கு துளியும் குந்தகம் ஏற்படுத்தாத ஒரு பெண்ணையே மணப்பேன். அப்படி ஒரு பெண் இருந்தால் கூறுங்கள்..." என்றார்.

அவர்களும், "விரைவில் உனக்கு அப்படி ஒரு பெண்வாய்ப்பாள்!"என்று ஆசீர்வதித்தனர்.அப்படி ஒரு பெண்ணாக வந்தவள்தான் வாசுகியின் தங்கை.

வாசுகிதான் அமிர்தம் கடைந்தபோது இமயத்தை மத்தாக்கிய நிலையில் கயிறாகப் பயன் பட்டவள்... அப்போது கிடைத்த அமிர்தம்... 'அதை தன் நாக இனம் பருக வேண்டும். இந்த இனம் எப்போதும் அழியாமல் உலகில் வாழ வேண்டும்' என்று விரும்பி அதை சாதித்தும் கொண்டவள்.

அந்த அமிர்தம்தான் இப்போது ஜரத்காருவுக்கு பிறக்கப் போகும் பிள்ளையான ஆஸ்தீகர் வடிவில் சர்ப்ப இனத்தை காப்பாற்றப் போகிறது. எப்படி?

23

"ததியுறு மத்தின் சுழலும் என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய் சிந்துராணை சுந்தரியே!"

– அபிராமி அந்தாதி

பரீட்சித்துவின் மகனான ஜெனமே ஜெயன் சர்ப்பயாகம் புரியப்போகிறான். இதனால் சர்ப்ப இனமே அழியப் போகிறது. அது மனித இனத்தின் அழிவுக்கும் ஒரு ஆரம்பம் போலாகிவிடும்.

மனிதனின் உயிரணுவும் சர்ப்பம் போன்றது தான். ஆனாலும், தான் கூடும் கருவறைக்குள் உள்ள தட்ப வெப்ப திலோத்துமங்களால்தான் ஆறறிவுள்ள மனிதனாக கரு உருவாகிறது. அத

னாலேயே மனித வாழ்வில் சர்ப்பதோஷம் உள்ளவர்களுக்குப் பிள்ளைப் பேறு இல்லாமல் போகிறது.

எனவேதான், சர்ப்ப யாகம் வெற்றி பெற்று விடக் கூடாது என்று இந்திரன் முதலான தேவர்களே கருதினார்கள். ஆனால், உதங்க மகரிஷியோ சர்ப்ப இனத்தை ஜனமே ஜெயனைக் கொண்டு அழித்தே தீருவது என்பதில் உறுதியாக இருந்தார்.

இந்த நிலையில் சர்ப்ப இனத்தைக் காப்பாற்ற யாரால் முடியும் என்ற கேள்விகளுக்கு விடையாகக் கிடைத்தவர்தான் ஆஸ்தீகர் என்பவர்! அவருக்கு மட்டுமே ஜனமே ஜெயனின் சர்ப்ப யாகத்தைத் தடுத்து நிறுத்தும் சக்தி இருந்தது. அந்த சக்திக்குக் காரணமான கதையொன்று நமக்கெல்லாம் அமிர்தத்தின் சிறப்பையும் உணர்த்துவதாகும்.

சக்தி ராஜ்ஜியத்தின் சக்திக்கே காரணமானத அந்தக் கதை!

ஜரத்காரு எனும் முனிவர், தங்கள் முன்னோர்கள் அமர உலகை அடையாமல் பித்ருக்களாக மரங்களில் பிசாசுபோல தலைகீழாகத் தொங்கியிருந்து அவதிப்படுவதைக் காண்கிறார். அவர்கள் அமர உலகை அடைய முடியாமல் போனதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருந்தது. அவர்களின் வாரிசான ஜரத்காரு, திருமணம் செய்துகொண்டு கிரகஸ்தனாகி, பித்ருக்களுக்கு உரிய கர்ம காரியங்களைச் செய்யாமல் போனதுதான் அது.

எனவே, ஜரத்காரு திருமணம் செய்து கொள்ள வேண்டும். பின் தங்களுக்கான கர்ம காரியங்களை செய்யும்போது முன்னோர்கள் அமர உலகை அடைந்து விடுவதும் நிகழ்ந்துவிடும்.

எந்த ஒரு குடும்பத்திலும் பித்ருக்கள் அமர உலகை அடையாது அல்லல்படும்போது அந்தக் குடும்பத்தவரால் இப்பூவுலகில் நிம்மதியாக எல்லா வளங்களையும் பெற்று வாழ முடியாது.

ஜரத்காரு திருமணம் செய்துகொள்ளாததற்குப் பின்னால் நிறையக் காரணங்கள் உள்ளன. திருமணம் என்பது சில நிர்ப்பந்தங்களை உருவாக்கி, தனது பூரண சுதந்திரத்தைப் பறித்துவிடும் என்று ஜரத்காரு கருதுகிறார். அது பற்றை வளர்க்கும்

ஒரு வழிமுறை என்பது அவரது கருத்து. இருந்தும் முன்னோர்களைக் கடைத்தேற்ற சில நிபந்தனைகளோடு திருமணத்துக்கு சம்மதிக்கிறார்.

'தனது சுதந்திரத்துக்குப் பங்கமில்லாதபடியும் தன் விருப்பத்துக்கு எதிராக ஒருபோதும் நடக்காத வளாகவும் தன்னை மணப்பவள் இருக்க வேண்டும்' என்பதே அவரது நிபந்தனை.

ஒரு கோணத்தில் திட்டமிட்டே இப்படிப்பட்ட நிபந்தனையை அவர் விதிக்கிறார். நிச்சயமாக எந்த ஒரு பெண்ணாலும் தன் வாழ்நாளில் ஒரு முறைகூட கணவன் விருப்பத்துக்கு எதிராக நடந்து கொள்ளாமல் இருக்க முடியாது என்பது அவர் நம்பிக்கை.

எனவேதான், ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டாலும் அந்தப் பெண்ணோடு இதன் காரணமாகவே அவளை விட்டு விலகிவிடலாம். இதனால் மணம் செய்து கொண்டு முன்னோர்களை அமர உலகம் சேர்ப்பதும் நிகழும்; தான் விருப்பப்படியே சுதந்திரமாக வாழ்வதும் நிகழும் என்று கருதியே திருமணத்துக்குத் தயாராகிறார்.

இப்படி ஒரு உள்நோக்கோடு ஒரு முனிவரே நடந்து கொள்ளலாமா, இது நீதியா என்பதெல்லாம் ஒரு பக்கம்... ஆனால், இப்படிச் சிந்திக்கும் ஒருவரது பிள்ளை எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதை எண்ணிப் பார்க்கவும்.

ஜரத்காருவின் நிபந்தனைக்கு சம்மதிக்கும் பெண்ணும் அவரது நிபந்தனையை ஒப்புக் கொண்டுதானே அவரை மணக்க சம்மதிக்கிறாள்? அதாவது, தன் விருப்பத்துக்கு மாறாக நடக்கக் கூடாது என்று ஆண்மை இங்கே பெண்மையைக் கட்டுப்படுத்துகிறது. பெண்மை அதற்கு சம்மதிக்கிறது. இத ஒன்றுக்குள் ஒன்று அடங்கிவிட்ட தன்மையைக் காட்டுகிறதல்லவா? ஒருபடி மேலே போய் இதை சிவசக்தி என்றும் கூறலாமல்லவா?

இப்படி ஒரு சிவசக்தியிடம் இருந்து தோன்றும் ஓர் உயிரும்கூட இரண்டின் அம்சங்களையும் கொண்டு தானே விளங்கும்?

ஆஸ்தீகர் என்பவரின் பிறப்புக்குப் பின்னாலே இப்படி சூட்சுமமான காரணங்கள் இருக்கின்றன.

அந்த வகையில் ஆஸ்தீகர் என்பவர் கிட்டத் தட்ட முருகப் பெருமானின் அம்சம் உடையவரா கிறார். இப்படிப்பட்டவரால்தானே இவ்வுலகில் உயிரினத்தையும் காப்பாற்ற முடியும்?

சரி! இனி ஜராத்காருவுக்கு எப்படித் திருமணம் ஆகிறது... அவருக்கு மனைவியாக வரப்போவது யார்... இதில் அமிர்தத்தின் பங்கு என்ன என்பதை எல்லாம் சுருக்கமாகப் பார்த்துவிடுவோம்.

ஜரத்காருவை மணக்கப் போகின்றவள் சர்ப்ப இனத்தைச் சேர்ந்த வாசுகியின் தங்கை. இந்த சர்ப்ப இனத்துக்கும் அமிர்தம் குடிக்க வேண்டும் என்கிற ஆசை இருந்தது. அமிர்தம் குடித்துவிட்டால் இறவாப் பெருவாழ்வு வாழலாமே?

அப்படி ஒரு ஆசை கத்துரு என்னும் சர்ப்ப இனப்பெண்ணின் மனதில் கொழுந்து விட்டெரிந்தபடி இருந்தது. ஆனால், அமிர்தத்தை தேவர்கள் தங்களுக்கு மட்டுமே என்று ஆக்கிவிட்டிருந்தனர்.

கத்துரு எப்படியாவது தானும் தன் பிள்ளைகளும் அதைக் குடித்து, 'சர்ப்ப இனத்திலும் இறவாத் தன்மை உடையவர்கள் உண்டு' என்று உலகுக்கு உணர்த்த விரும்பினாள்.

கத்துரு காஸ்யப முனிவரின் தர்மபத்தினிகளில் ஒருத்தி. காஸ்யபருக்கு விநதை என்றும் ஒரு பத்தினி இருந்தாள். இவள் பிள்ளைதான் கருடன்.

அதாவது, காஸ்யபரின் பத்தினிகளில் ஒருத்தி சர்ப்ப இனத்தவள் என்றால், இன்னொருத்தி பறவை இனத்தவள். சர்ப்பங்கள் பறவை இனத்தை சேர்ந்த கருடனை தங்கள் எதிரியாகக் கருதின. காரணம், பறவை இனத்துக்கு சர்ப்பங்கள் உணவாகிவிடும் ஒரு நிலை இருந்ததுதான்.

எனவே, கத்துருவும் விநதைமேல் வெறுப் போடும், அவளை எப்படியாவது தனக்கு அடிமை யாக ஆக்கிக் கொண்டுவிடும் துடிப்போடும் இருந் தாள். அதற்கு ஏற்ப 'சூரியனின் ரதப் புரவிகள் வெண்ணிறமானவையா, கறுப்பு நிறம் கொண்

டவையா?' என்று விநதையிடம் கேட்டு, அவள் வெண்ணிறம் என்று கூறவும், அதைப் பொய்யாக்க தன் இனத்துப் பாம்புகளை அனுப்பி குதிரையை வளைத்துப் பிடித்து கறுப்புநிறமாக மாற்றிக் காட்டி 'நீ சொன்னது தவறு. எனவே நீ என் அடிமை' என்று கூறி விநதையை அடிமையாக்கிக் கொண்டு விட்டாள்.

இந்த தந்திரத்தை மிகத் தாமதமாகப் புரிந்து கொண்ட விநதையும் தன் மகனான கருடனிடம், 'நம் இனத்துக்கான விடுதலையை நீதான் பெற்றுத் தந்தாக வேண்டும்' என்றாள். கருடனும் கத்துருவிடம் சென்று, 'என் தாயை விடுவிக்க நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான்.

'தேவர்கள் தங்களுக்கு மட்டுமே உரியது என்று கருதும் அமிர்தத்தை நீ கவர்ந்து வந்து எனக்கு அளிப்பாயானால்... நான் உன் தாயை விடுவிக்கிறேன்' என்றாள் கத்துரு.

இதை இப்படி உணர்ந்துகொள்ள வேண்டும். அதாவது, 'நஞ்சை உடைய அரவ இனமானது அழியாமல் வாழவேண்டும், பறவை இனத்தாலும் அது அழிந்துவிடக் கூடாது' என்று!

கருடனும் இந்திலோகத்துக்குப் பறந்தான். அமிர்தம் அங்குதான் இருந்தது. அதைக் கொண்டு வருவது சுலபமானதில்லை. இந்திரன் அதை மிகவும் பாதுகாப்பாக வைத்திருந்தான். கருடன் இந்திரனுடன் போரிட்டு அமுத கலசத்தைக் கவர்ந்து கொண்டு புறப்பட்டுவிட்டான்.

இதையும் சரியாகப் பொருள்கொள்ள வேண்டும். இறவாத்தன்மை உடைய ஒன்றை ஒரு சாரார் மட்டுமே அனுபவிக்க நினைப்பதோ, பாதுகாக்க முடியும் என நினைப்பதோ மடமை என்பதே அது.

எப்படியோ சர்ப்ப இனத்துக்கு அமிர்தம் கிட்டப் போகிறது. இதை மட்டும் சர்ப்பங்கள் உண்டு விட்டால் அதன்பின் சர்ப்ப இனத்தை வெல்லவோ, அழிக்கவோ யாராலும் முடியாது.

ஆனாலும், இந்த வெற்றி ஒரு முழுவெற்றியாக கனியவில்லை. கருடன் அமிர்தகலசத்தைக்

கத்துருவிடம் தந்துவிட்டு, தன் தாயை மீட்டுச் சென்ற அதே நொடியில் இந்திரன் அங்கே வந்து, தான் களவு கொடுத்த அமிர்தகலசத்தைத் திரும்பக் கொண்டு சென்றுவிட்டான். அப்போது சிந்திய சில துளிகளை மட்டும் சில அரவங்கள் விழுங்கின.

விழுங்காத அரவங்களை கத்துரு கோபத்தோடு பார்த்து, 'நீங்கள் இருப்பதைவிட இறப்பது மேல். உங்கள் இறப்புக்காகவே ஒரு நாள் ஒருவன் யாகம் நிகழ்த்துவான். அந்த யாக நெருப்பு உங்களை விழுங்கட்டும். அமுதம் சாப்பிட்ட சர்ப்பங்களின் இனம் மட்டும் உலகில் காலகாலத்துக்கும் வாழட்டும்' என்று சாபமே கொடுத்துவிட்டாள். அப்படி சபிக்கப்பட்ட சர்ப்பங்களில் ஒன்றுதான் வாசுகி! அதாவது, அமிர்தம் இந்த உலகுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்த வாசுகியேதான்!

வாசுகி உடனே பிரம்மனைச் சரணடைந்து 'பிரம்மதேவா... நானும் என் உடன்பிறப்புகளும் இறவாது வாழ தாங்கள்தான் அருள வேண்டும்' என்று அழுதாள். பிரமன் ஒரு உபாயம் செய்தான்.

ஜரத்காரு முனிவரின் கண்களில் அவரது பித்ருக்களைக் காட்டி ஜரத்காருவைத் திருமணத்திற்குத் தயார்படுத்தினான்.

வாசுகியின் தங்கை பெயரும் ஜரத்காருதான். ஜரத்காரு பற்றி அறிந்திருந்த வாசுகியின் தந்தை, வாசுகியின் தங்கைக்கு அபிமானப் பெயராக அவர் பெயரையே சூட்டியிருந்தார்.

அவளே ஜரத்காருவையும் அவர் விருப்பத்திற்கு இணங்கி மணக்கப் போகிறவள். அப்படி மணந்தாலே அப்படிப்பட்ட தம்பதியர் சேர்க்கையில் ஆஸ்தீகர் பிறக்க முடியும். அவ்வாறே எல்லாமும் நடந்து முடிந்தது.

ஆஸ்தீகரால்தான், கத்துரு சபித்ததுபோல எதிர்காலத்தில் யாகம் ஒன்று நிகழும்போது சர்ப்ப இனத்தையும் காக்க முடியும்!

அதாவது ஒரு சம்பவத்தோடு மற்றொரு சம்பவமும் ஒரு காரணம் கருதி சேர்ந்தே இருக்கிறது.

எந்த ஒன்றையும் எவராலும் முற்றாக அழித்துவிட முடியாது. அது அழியவும் கூடாது. அதற்கான சக்திதான் இப்படிப் பல விதங்களாய் வெளிப்பட்டு செயலாற்றுகிறது. ஆஸ்தீகரையும் அந்த சக்தியே ஜரக்காரு தம்பதிகளுக்கு மகனாகப் பிறக்கவும் வைத்துவிட்டது.

இந்த ஆஸ்தீகர் எப்படி சர்ப்ப யாகத்தைத் தடுக்கப் போகிறார்?

24

"வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்க என்
வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க, ஒழித்தான் பித்தாக உண்டாக்கும்
வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகலகலாவல்லியே!"

ஜனமே ஜெயனின் சர்ப்ப யாகத்தை தடுத்து நிறுத்தி, சர்ப்ப இனத்தைக் காக்கும் சக்தி கொண்ட ஆஸ்தீகரின் பிறப்பின் பின்னே இன்னும் சில சூட்சுமங்கள் இருக்கின்றன.

ஜரத்காரு என்னும் மாமுனிக்கும் நாக இனத்தைச் சேர்ந்த ஜரத்காரு என்னும் பெண்ணுக்கும் பிறந்தவர்தான் ஆஸ்தீகர்.

முதலில், திருமணமே வேண்டாம் என்று வாழ்ந்த ஜரத்காரு, பித்ருக்களைக் கரையேற்றுவதற்காக சிலநிபந்தனைகளோடுதிருமணத்திற்கு சம்மதிக்கிறார். தான் மணக்கப்போகும் பெண்ணுக்குத் தன்னுடைய பெயரே இருக்க வேண்டும் என்பது அதில் முக்கியமானது. உலகில் உள்ள எந்தப் பெண்ணின் பெயரையும் தான் அழைத்ததாக இருக்கக் கூடாது என்பது இதனுள் உள்ள சூட்சுமமான உண்மையாகும். திருமணமும் நடந்து முடிகிறது.

சர்ப்ப இனத்தின் பிரதிநிதியான வாசுகி என்னும் பாம்பின் தங்கை ஜரத்காரு. இவளை மணந்து கொண்டதால்ஜரத்காரு முனிவர், தன் வாழ்நாளில் ஒரு பெண்ணின் பெயரை தான் அழைத்திடும் ஒரு

நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படாது போனது. தன் மனைவியை அழைக்கும்போதும் தன் பெயரையே சொல்லும்விதமாக அமைந்துவிட்டது.

முதல் நிபந்தனைக்கு எந்த இடையூறும் இல்லை.

இரண்டாவது நிபந்தனை, தனது தவச் செயல்களுக்கு எந்த நிலையிலும் மனைவியால் இடையூறு கூடாது என்பது. ஆனால், விதிவசத்தால் அதற்கு ஊறு ஏற்படுகிறது.

ஜரத்காரு முனிவர் ஒரு நாள் உறங்கிடும் போது அவரை எழுப்புகிறாள். அவர் மனைவி, உறக்கத்திலும் தவம் செய்பவர் அவர். இது தெரியாமல், 'பொழுது விடிந்துவிட்டது. ஆற்றுக்குச் சென்று குளித்துவிட்டு வர வேண்டும்' என்பதற்காக ஒரு மனைவியாக அவரை எழுப்புகிறாள். அனர்த்தம் ஆரம்பமாகிறது.

உறக்கம் விழித்து எழும் ஜரத்காரு தன் மனைவியிடம், "நீ என் நிபந்தனையை மீறிவிட்டாய். என் விருப்பமோ தவமோ தெரியாமல் சராசரிப் பெண்ணாக நடந்து கொண்டுவிட்டாய். அதனால் இந்த விநாடி முதலே நான் உன்னைவிட்டு நீங்குகிறேன்" என்கிறார்.

உடனே, சர்ப்ப இனத்துப் பெண்ணான ஜரத்காரு, "நீங்கள் இப்படிச் சொன்னால் எப்படி? குறைந்தபட்சம் உங்களோடு நான் வாழ்ந்த வாழ்க்கைக்குச் சான்றாக இனி வரும் காலங்களில் எனக்கு துணையாக ஒரு பிள்ளைகூடப் பிறக்க வில்லையே... இப்படி ஒரு நிலையில் நீங்கள் விலகுவது எனக்கு செய்யும் துரோகமும் பாவமும் ஆகாதா?" என்று கேட்கிறாள்.

அப்போதே தவ சக்தியைத் திரட்டி, "உனக்குப் பிள்ளை பிறக்கும். அஸ்து!" என்கிறார். பின் அவளை விட்டு நீங்கியும் விடுகிறார்.

'அஸ்து' என்றால் அழியாச் செல்வம். நிரந்தரமானது என்று பொருள். அதாவது, பிறக்கும் பிள்ளை நிரந்தரமானவராக, அழியாதவராக இருக்கும்.

அந்த வகையில், ஜெனமே ஜெயன் புரியும் யாகத்தால், சர்ப்ப இனத்தில் பிறந்த ஆஸ்தீகரை

மட்டும் அழிக்கவே முடியாது. அதே சமயம், அழிக்க முடியாதபடி ஒற்றைப் பாம்பு இந்த பூமியில் இருந்தாலும் அந்த சர்ப்ப யாகம் பூரணத்துவம் எய்தாது.

ஜனமே ஜெயனைப் பொறுத்தவரை இக் கட்டு தோன்றிவிட்டது.

இதுதான் இயற்கைப் போக்கின் விந்தை. காலம் விளையாடும் கண்ணாமூச்சி என்றும் சொல்லலாம்.

மனதை அடக்கி தவம் செய்யும் முனிவர்கள் கோபப்படுவதால் ஏற்படும் விளைவுகள் இவை. அரசனோ ஆண்டியோ அவரவர் தர்மத்தில் உறுதியாக இருக்க வேண்டும். இப்படி இருந் தால்தான் நன்மை விளையும்.

பரீட்சித்துவின் கோபம், முனிவர் கழுத்தில் செத்த பாம்பைப் போடச் செய்தது. முனிவருடைய மகனின் கோபம், சர்ப்ப யாகம் புரியவைத்தது. இறுதியாக சர்ப்ப இனத்தைச் சேர்ந்த ஜரத்காரு புரிந்த தவறு. கணவனே அவளைவிட்டுப் பிரியக் காரணமாகிவிட்டது.

சக்தியானது எந்த நிலையிலும் சிதறக் கூடாது. சிறுமையான உணர்ச்சிகளுக்கு இரையாகக் கூடாது. அப்படி ஆகிவிடும்போது அடுக்கடுக்காக அழிவுகள் ஏற்படத் தொடங்கிவிடுகின்றன.

அதிலும், புலனடக்கம் மிகுந்த துறவிக்கும் கட்டுப்பாடு மிகுந்த பொறுப்புள்ள அரசனுக்கும் கோபம் என்பது பேரழிவைத் தந்துவிடுகிறது. அவர் களது சக்திகளைச் சிறை அடித்து ஒன்றுமில்லா மலும் ஆக்கிவிடுகிறது.

புலனடக்கம் உடையவர்களோ தங்களை இல்லற வாழ்விலும் காத்துக்கொள்ளக் கூடியவர் களாக இருந்து வெளியில் நடக்கும் பெரும் அழிவையும் தடுத்துவிடக் கூடியவர்களாக ஆகி விடுகிறார்கள்.

ஆஸ்தீகர் அதற்கு ஓர் உதாரணம். இவரது பெயரைத் தழுவியே நம்பிக்கை உடைய, ஒரே வழியில் செல்பவர்களை ஆஸ்தீகர்கள் என்கிறோம்.

இவர்களாலேயே அழிவுகளிலிருந்து பிறரைக் காப்பாற்ற முடியும்.

ஆஸ்தீகரும் ஜெனமே ஜெயன் புரியும் யாகம் பற்றி அறிகிறார். அதில் விழுந்து அழிந்துவிடும் நிலை தனக்கு இருப்பதையும் அறிகிறார். தன் தாயான ஜராத்காருவுக்கும் அப்படி ஒரு மரணம் இருப்பது தெரியவருகிறது.

அதேசமயம், கருடன் இந்திரனிடம் இருந்து அபகரித்து வந்து அமிர்தத்தின் துளிகளைச் சுவைத்த அரவங்களின் வம்சாவளியாகத் தானும் தன் தாயும் இருப்பதும் தெரிகிறது. இதனால் ஜெனமே ஜெயன் யாகத்தில் தாங்கள் விழுந்தாலும் தங்களுக்கு மரணமில்லை என்பதை உணரும் ஆஸ்தீகர், ஜெனமே ஜெயனைச் சந்தித்து சர்ப்ப யாகத்தை நிறுத்தச் சொல்கிறார்.

"உன் யாகம் முழுமையாக வெற்றி பெறாது. எனக்கு அழியாத்தன்மை இருப்பதால், உன்னாலும் என்னை அழிக்க முடியாது. எனவே, நீயாக யாகத்தை நிறுத்தி விடு" என்கிறார்.

வேறுவழியின்றி ஜெனமே ஜெயனும் தன் சர்ப்ப யாகத்தை செய்தவரையில் போதும் என்று நிறுத்துகிறான். அதேசமயம், யாகமும் பாதியில் நின்று தன் தந்தையான பரீட்சித்துவின் ஆன்மாவும் சாந்தியடையாத நிலையை எண்ணிக் கலங்குகிறான்.

முழுமையாக ஒரு யாகத்தை ஈடேற்ற முடியாத பாவத்திடமும் தந்தையை மீட்க முடியாத பாவத்திடமும் ஜெனமே ஜெயன் சிக்கிக்கொள்ள நேர்கிறது.

இதிலிருந்து அவன் மீள்வதற்கு எது வழி?

ஜெனமே ஜெயன் போலவே நம் வாழ்விலும் நாம் அநேக தவறுகளையும் பாவங்களையும் புரிகிறோம். நம் முன்னோர்களில் பலரும் பித்ருக்களாய் அலைபாய்ந்தபடியே இருக்கிறாள்.

கேட்கக் கூடாதவர்கள் பேச்சைக் கேட்பது, கோபத்தில் தன்னிலை மறப்பது என்று நம் வாழ்விலும் தவறுகள் தொடர்ந்து தொண்டு

தானிருக்கின்றன. இதிலிருந்து என்ன செய்தால் மீள முடியும் என்பதுதான் பரலது கேள்வி.

இந்தக் கேள்விக்கு பதிலாக நிற்பதுதான் தேவி பாகவதம்.

தேவியே சக்தி வடிவானவள். சக்தியாலேயே நாம் இயங்குகிறோம். சக்தியற்றவன் சவமாகிறான். சக்தி உள்ள ஒருவன் அதை சிதறச் செய்யாமல் உலக மாயையில் சிக்கி, உண்ணவும், உறங்கவும் போகங்களுக்கும் அதை செலவழிக்காமல், அதை சித்தத்தில் தேக்கும் போது, சிவமாகிறான் என்பது சித்த யோகிகளின் கருத்து.

இந்த சக்தியின் வடிவமாயிருக்கும் தேவியின் ராஜ்ஜியத்துக்குள் புகுந்தாலே அவளை நாம் புரிந்து கொள்ள முடியும். 'எப்போதும் தேவியை எண்ணி, அவளை எண்ணியபடியே செயல் புரிந்து அந்த செயல்களையும் அவளுக்கே அர்ப்பணம் செய்து, அவள் அருளைப் பெறவே இப்பிறவி என்பதை உணர்ந்து எவன் ஒருவன் வாழ்கிறானோ... அவனை இந்த உலகின் மாயை எதுவும் செய்யாது. அவன் எளிதாக முக்தியைப் பெற்று விடுவான்' என்கிறார் வியாசர்.

இதனால்லேயே மிகப் பெரிய மனோபரிகாரமாக தேவி பாகவதம் வாசிப்பது என்பது தோன்றியது. இதை ஒருவர் வாசிக்க, பலர் கேட்க... அங்கே தேவியின் அருள் அலைகள் நடமாடத் தொடங்கிவிடுகின்றன.

தேவி பாகவதம் என்னும் நூல் ஒவ்வொருவரின் இல்லங்களிலும் இருப்பதே புண்ணியம். பின்னர் அதை வாசிப்பது, அதன்வழி நடப்பது மிகப்பெரும் புண்ணியம். விதியை வெல்லப் பார்த்த பரீட்சித்து மன்னனையும் அவனை சொர்க்கம் சேர்க்க இயலாதபடி ஆகிவிட்ட அவனுடைய மகன் ஜெனமே ஜெயனையும் நாம் மறந்து விடக்கூடாது.

அதே சமயம், சகலருக்கும் விமோசனம் கிடைத்தது ஆஸ்தீகரால்தான்!

அவரைச் சரண் புகுந்த ஜெனமே ஜெயனும் தேவி பாகவதம் கேட்கத் தொடங்கினான். அது

ஒன்றே தன்னை மட்டுமல்ல, பித்ரு உலகில் தவிக்கும் தன் தந்தையையும் மீட்டெடுக்கும் என்பதால் பெரும் தேவி பக்தனாகத் தன்னை அவன் மாற்றிக் கொண்டான்.

தேவியின் சக்தி ராஜ்ஜியமோ எல்லையற்றது.

அதன் பெருமையும் கீர்த்தியும் நமது சொற்களுக்குள் அகப்படாதது! அந்த ஆதிசக்தியை நம் மனம்முழுக்கநிரப்பிகைகூப்பித் தொழுதிடுவோம்.

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி!

❖❖❖

AANMEEHA NOVEL
Published & Owned by **A.J. Murali** at New No. 104 (Old No. 45/1), Nainar Nadar Street, Mylapore, Chennai - 600 004. Printed at R. Murugan, Wonder Prints, Triplicane, Chennai - 600 005. Editor: **A.J. Murali**